www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
ரூபா 11/00
දිනමුරසු වාරමලර්
மார்ச்.17-23,1996

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 145



## ஒப்பரேசன் வலை வீச்சு

## கடற்பரப்பில் பரபரப்பு கப்பல் வருகிறது

## நெருக்கடி முற்றுகிறது

## பிராபாவுக்கு உதவும் பிக்குமார்கள்



## கிரிக்கெட் ஸ்பெசல்

## சுபலட்சுமியின் காதல்

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## மறுபடி முருங்கை மரத்தில்.....

**அன்புள்ள உங்களுக்கு,**
**வணக்கம்.**

பேராதனை பல்கலைக்கழகத்தில்
தமிழ் சங்கக் கொடி கட்ட
நிர்வாகம் தடைபோட்டுவிட்டது.

வருங்காலச் சந்ததியை
உருவாக்கும் கல்விக் கூடத்தில்
இனவாத நிர்வாகம்!
எப்படி உருப்படுவது?

நிர்வாகத்தின் செயலை
சீற்றமுடன் கண்டித்த
சிங்கள மாணவர்களை
முகமலர்ந்து வாழ்த்தலாம்!
என்ன செய்வது:
மாணவர்கள் கற்றுக் கொடுக்கும்
காலமாகிவிட்டது!

வழிகாட்ட வேண்டியவர்கள்
இனவாத சகதியில்
வழுக்கிவிழ வழி சொல்கிறார்கள்.
மறுத்து, நியாயம் சொன்ன
மாணவர்கள் உயர்ந்து விட்டார்கள்!

ஒன்றுமட்டும் உண்மை!
தங்களை உயர்ந்தவர்களாகச்
சித்தரித்துக் கொண்டிருப்பவர்கள்தான்
உள்ளத்தில் மிகத் தாழ்ந்தவர்களாக
இனவாதம் விதைக்கத் தொடங்கியிருக்கிறார்கள்!

அதற்கு மற்றொரு உதாரணம்:
பௌத்த மதகுருமார் சிலரின்
ஒரு பக்கச் சார்பான வாதங்கள்!

சகல இன மக்களையும்
ஒரே கண்ணோட்டத்தோடு
உளமார நேசிக்க வேண்டியவர்கள்,
தங்களை ஒரே ஒரு இனத்தின்
காவலர்களாகவும், போராளிகளாகவும்
காட்டிக் கொள்ளவே ஆசைப்படுகிறார்கள்!

பௌத்தம்
உயர்ந்த கருத்துக்களை
உள்ளடக்கிய மதம்.

நமது நாட்டில்
சில 'பெரியவர்கள்'
அந்த உன்னத மதத்தை
தமது உடைவாளாக நினைத்து
இன்னொரு இனம்மீது
அடிக்கடி வீசிப் பார்க்கிறார்கள்.

உண்மையில், எந்த இனம் மீதும்
அவர்களுக்கு பற்றில்லை;
பற்றெல்லாம் தம் சுயநலத்தில்!

அரசியல்வாதிகளுக்கும்
மதவாதிகளுக்கும் இடையே
ஒரு பனிப்போர்!

நாட்டின் தலைவிதியை
நாம்தான் தீர்மானிக்க முடியும்
என்று காட்ட நினைக்கிறார்கள்,
மதவாதிகள்.

அப்படியான நிலை இருந்தால்தான்
சகலதுக்கும் மேற்பட்டவர்களாக,
அனைத்துக்கும் உச்சத்திலிருப்பவர்களாக,
அதிகாரமுள்ளவர்களையே
ஆட்டிப்படைக்கும் சக்தியுள்ளவர்களாக
தாங்கள் நிலைக்க முடியும்:
அதுதான் மதவாதிகளது கணக்கு!

கணக்கு சரியாக வேண்டுமானால்
மக்களைக் காட்டித்தான்
அரசியல்வாதிகளை மிரட்ட முடியும்.

அரசியல் வாதிகளுக்கு
வாக்குகள்தான் முக்கியம்.
ஆகவே- மக்கள் தம் பக்கம்
என்று காட்டி
அரசியல்வாதிகளை ஆட்டிப்படைப்பதே
மதவாதிகளது நோக்கம்.
ஆகவே- மதவாதிகள்
மக்களைத் திரட்ட உபாயம்
வகுத்து செயற்படுகிறார்கள்.
அதுதான் இனவாதம்!

இதுதான் வரலாற்றுப்பாடம்.
இங்கு நடப்பதும் அதுதான்!

அரசியல்வாதிகளைவிட
அசலான இனக்காவலர்கள்
தாம் தான் என்று காட்ட
சில 'பெரியவர்கள்' திட்டமிடுகிறார்கள்!
அதனை தூண்டிவிட்டு
வேடிக்கை பார்ப்பதும்
ஒரு சில அரசியல்வாதிகள்தான்!

ஆக, மொத்தத்தில்,
சுயநலமும், இனவாதமும்
மறுபடி முருங்கை மரத்தில்!
பாவம் மக்கள்:
இரத்தம் சிந்துவதற்கென்றே
இத்தீவில் பிறந்தார்களோ?!

❑❑

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும் வரை

என்றென்றும் அன்புடன்
-ஆசிரியர்-

# ஆன்மீகம்

## கிறிஸ்தவ வாழ்க்கை

கிறிஸ்தவ வாழ்க்கையிலே நாம் இரண்டு உறவுகளில் சரியானவர்களாக இருக்க வேண்டும்.

(i) மனிதன் கடவுளோடு சரியான உறவை வைத்திருக்க வேண்டும்.
(ii) மனிதன் மனிதனோடு சரியான உறவை வைத்திருக்க வேண்டும்.

நாம் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூர்ந்தால், தேவன் நமக்குள் நிலைத்திருக்கிறார்,

அவருடைய அன்பும் நமக்குள் பூரணப்படும். (1 யோவான் 4:12) நான் ஆலயத்துக்கு போகத் தேவையில்லை: நான் மக்களோடு சேர்ந்து வழிபடத்தேவையில்லை: வீட்டிலே இருந்து கடவுளை வணங்குகிறேன், திருமறை வாசிக்கிறேன், ஆகையால் கடவுளோடு நெருங்கி ஜீவிக்கிறேன் என்று பலர் சொல்வதைக் கேட்கின்றோம். இது கிறிஸ்தவனுடைய வாழ்க்கையல்ல: கடவுளோடு சரியான உறவை வைத்திருந்தாலும் கண்ணெதிரே காணுகின்ற மனிதர்களோடு சரியான உறவை, அன்பை வைத்திருக்காவிட்டால் கிறிஸ்த வாழ்விலே பூரணத்துவம் இல்லாமல் போகின்றது. சாதி, மதம், மொழி என்பவைகளுக்கு அப்பாற்பட்டு ஒவ்வொரு கிறிஸ்தவனும் சகல மக்களோடும் சரியான உறவை வைத்திருக்க வேண்டும். இன்றைய நாட்களிலே நிலவுகின்ற பீதிக்கும் பிணக்குகளுக்கும் மனித நேயமற்ற தன்மைக்கும் மத்தியில் நாம் கடவுளோடும், சகல சமுகத்தோடும் சரியான உறவை வைத்திருக்க பாடுபடுவோம்.

சகோ: செ. யேசுநாதன், மெதடிஸ்த ஆலயம், செங்கலடி.



## ஸலாம் சொல்லும் முறை

ஒரு மனிதர் நபியவர்களிடம் வந்து அஸ்ஸலாமு அலைக்கும் என்று கூறினார். நபியவர்கள் பதிலளித்து விட்டு (வ அலைக்கு முஸ்ஸலாம்) பத்து நன்மைகள் என்று சொன்னார்கள். மற்றொரு மனிதர் நபியவர்களிடம் வந்து அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹி என்று கூறினார். நபியவர்கள் பதிலளித்து விட்டு இருபது நன்மைகள் என்று கூறினார்கள். மூன்றாம் நபர் நபியவர்களிடம் வந்து அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹி வபரகாத்துஹு" என்று கூறினார். நபியவர்கள் பதிலளித்து விட்டு முப்பது நன்மைகள் என்று கூறினார்கள்.

அபூ ஜுரையில் ஹுஜைமிய்யி (ரழி) அவர்கள் நபியவர்களிடம் வந்து அலைகஸ் ஸலாம் என்று கூறினார். அதற்கு நபியவர்கள் அலைகஸ் ஸலாம் என்று கூற வேண்டாம். அவ்வாறு சொல்வது மையித்துகளின் மீது ஸலாம் சொல்கின்ற முறையாகும் என்று சொன்னார்கள்.

வாகனத்தில் செல்பவர் நடந்து செல்பவருக்கு சலாம் சொல்ல வேண்டும். நடந்து செல்பவர் உட்கார்ந்திருப்பவருக்கு ஸலாம் சொல்ல வேண்டும். சிறு தொகையினர் பெருந்தொகையினருக்கு ஸலாம் சொல்ல வேண்டும். சிறியவர் பெரியவருக்கு ஸலாம் சொல்ல வேண்டும். என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

யாராவது ஒருவர் இன்னொருவர் மூலம் ஸலாம் சொல்லி அனுப்பினால் அந்த செய்தி பெற்றுக் கொண்டவுடன் 'வ அலைக அலைஹிஸ் ஸலாம்' என்று செய்தியைக் கொண்டு வருபவரையும் ஸலாம் சொன்னவரையும் சேர்த்து பதில் சொல்ல வேண்டும்.

நிபாயா லத்தீப், குச்சவெளி-திருகோணமலை.

# கவிதைப்போட்டி இல-142

## பரிசுக்குரிய கவிதை

### காத்திருக்கிறாள்

மார்ச் 17 இல்
மாபெரும் சுயம்வரம்!
விக்கெட்டை முறித்து
வெல்பவர் யாரோ?
அழகி
காத்திருக்கிறாள்!

ச.அழகுதுரை, மாத்தளை.

## இடமுள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்

### பந்தயப் பொருள்

பந்து வீச்சில்
வென்றவர் கரம் சேரும்
வெள்ளிக் கிண்ணமே!
உன்னைப் போல்
ஷெல் வீச்சில் என்னுயிரும்
பந்தயப் பொருள்....?

கி.ராஜேஸ்வரி, சம்பூர்-07

### சமாதானக் கிண்ணம்!

ரவைகளால் உயிர்களை
வீழ்த்துவதை நிறுத்திவிட்டு,
வீழ்த்துங்கள் பந்தெடுத்து
எதிரணியின் விக்கட்டு!
சாதிமத பேதமதை
சாக்கடையில் போட்டுவிட்டு,
சமாதானக் கிண்ணமிதை
வென்றெடுங்கள் போட்டியிட்டு!

பீ.எம்.எம்.அன்ஸார், பு-தெ-வெலிகம.

### கவனம் எங்கே?

உள்நாட்டுப் பூசல் உள்ளத்தை வருத்துகையில்,
உறவினரின் இடம்பெயர்வு இல்லத்தை நிரப்புகையில்,
அல்லற்பட்ட அவர்களின் அழுகைக்குரல் கேட்கையில்.
அவதானம் எங்களுக்கு உலகக் கிண்ணத்திலா?

க.கமலாம்பிகை, வவுனியா.

"உலகக் கிண்ணத்தை எட்ட
பயிற்சி செய்!
கலக எண்ணத்தை விரட்ட
முயற்சி செய்!
நான்கு வருடங்களுக்
கொரு முறை வரும்
விழா அது!
நான்கு தலை முறைகளும்
வாழ்த்த வழி இது!"

ஸ்ரீபதி ரவீந்திரநாத்,
அக்கரைப்பற்று.07.

### யார் கையில்?

வில்ஸ் கிண்ணம் யார் கையில் ?
வெற்றிகளை குவிப்போர்க்கே!
சமாதான கிண்ணம் யார் கையில்?
யாரறிவார் சூட்சுமத்தை!

ஜி.அருளேந்திரன், திருமலை.

### அறுவடை

விளையாகாத
விளையாட்டுக்குப் பரிசு.
முயற்சியை விதைத்தால்,
கிண்ணம் அறுவடை.

அ.நிரோஷா, பாவற்குளம், வவு.

### அடைவது யார்?

உன்னைத் தூக்க
எத்தனை அணிகள்
போட்டிபோடுது!
அதனைக் காண
எத்தனை கண்கள்
காத்துக்கிடக்குது.

எஸ்.சரவணேஸ் டெமிஸி, கலவான.



கம்பீரமாய் ஒளிருகின்ற
உலகக்கிரிக்கெட் கிண்ணமிதை
நம் நாடு வெற்றி கொண்டால்
நானிலமே போற்றுமப்பா"

முஸ்தபா இஸ்ஸத்-ஏறாவூர்-06.

### வெல்வோம்

வேதனை சூழ்ந்து வையகந்தன்னை
விம்மியழுதிட வைத்திடினும்
சாதனை படைத்து கிரிக்கெட்டில்
வெல்வோம் இவ்வில்ஸ் கிண்ணம் தனை.

பசறையூர் மல்லிகா பத்மநாதன்.

# கவிதைப் போட்டி இல-145



### கவனியுங்கள்

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல் தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பிவையுங்கள். அனுப்பவேண்டிய கடைசித் திகதி 23.03.1996.

-முகவரி-

கவிதைப் போட்டி இல: 145. தினமுரசு வாரமலர். த.பெ.இல-1772, கொழும்பு.

### கைப்படுமா?

பூறாதான்
கிடைக்காமல் போயிற்று;
வில்ஸ் சின்னமாவது
கைப்படுமா பார்க்கலாம்!

றம்ஸியா பேகம், கற்பிட்டி.

### சின்னம்

அமைதிப் போருக்கு
'வில்ஸ்' கிண்ணம்!
ஆயுதப் போருக்கு
'வில்'தான் சின்னமோ?

ந. நிரஞ்சலா,
திருகோணமலை.

# வாசக(ர்) சாலை

செய்திகளில் இடம்பெறாத அரசியல் சம்பவங்களையும் அரசியலாளர்களின் அந்தரங்க வாழ்க்கையையும் சுவையாகவும் சுவாரசியமாகவும் சிலவேளை நெத்தியடியாகவும் தரும் 'அதிரடி அய்யாத்துரை', என்னால் மிகவும் விரும்பி படிக்கும் ஒரு பகுதி.

உமா. சிவானந்தம், நாஜு ஓயா.

✍✌✍

மர்மக்கதை மன்னன் ராஜேந்திரக் குமாரின் நீ ந்யா திகிலுடன் ஆரம்பமான புதிய தொடர் வெகு சூப்பர்.

சபாமாவாநிலாம், கரம்பை.

✍✌✍

என் ப்ரிய தினமுரசே, ராடார் கருவி தான் முன்னறிவிப்பு செய்யும் என அறிந்திருக்கின்றேன். ஆனால் ராடாரை விட அதிசக்தி வாய்ந்தவை உன் சேவை. இராஜதந்திரிக்கும், நாரதருக்கும் எம் பாராட்டுக்கள். சிவாஜினியின் எழுத்தாற்றலுக்கு வாழ்த்துக்கள்.

உன்னஸ்கிரிய சதாசிவம், தெகிவளை.

✍✌✍

முரசின் ஆக்கங்கள் வரவர மெருகேறிக் கொண்டு செல்கிறது. "தகவல் பெட்டி" அப்பாடா இப்படியுமா என வியக்க வைக்கின்றது. அன்பின் முரசே, உம் சேவை எப்போதும் தொடர என் உளம் நிறைந்த வாழ்த்துக்கள்.

உன் வாசகி,
எஸ்.அபிராமி, வாழைச்சேனை.

✍✌✍

என் இனிய முரசே!

வாசகரின் தரமான ஆக்கங்கள் உடனடியாக பரிசீலிக்கப்பட்டு மிக விரைவில் பிரசுரமாவது வரவேற்கத்தக்கது. தேன்கிண்ணம் தேனை விட இனிமை. சினிவிசிட் கண்ணைப் பறிக்கிறது. உனக்கு எனது வாழ்த்துக்கள்.

ஜெ.ஹிலேரியன். மட்டக்களப்பு.

✍✌✍

ஸ்பெஷல் ரிப்போட்டின் எம்.ஐ.17 ஹெலிக்கொப்டர் பற்றிய அதிரடியான கேள்விக்கு சூப்பரான விடை கொடுத்ததையிட்டு நாரதருக்கு நன்றிகள்.

வீரசிங்கம் ஸ்ரீதரன், மல்லிகைத்தீவு.

✍✌✍

அன்பின், தமிழ் முரசே, நீ தாங்கி வரும் ஆக்கங்கள் அனைத்தும் சூப்பர், முக்கியமாக கதைகள், இலக்கிய நயம், மற்றும் அற்புதனின் தொடர்: மிகவும் நன்று. ஏன் அப்துல் ரகுமானின் கவிதைகள் இடையில் நின்று விட்டன? தொடர்ந்தால் நன்று.

ந.சித்ரா,மட்டக்களப்பு.

✍✌✍

"நீ! ந்யா!" தொடர்கதையை வாசிக்கும் போது எழுத்துக்கள்.. காட்சிகளாகி... மனக்கண்ணில் ஒரு திரைப்படம் பார்ப்பதைப் போன்ற பிரமையை ஏற்படுத்துகிறது. பிரசுரிக்கும் முரசுக்கு பாராட்டுக்கள்!

ஜான்ஸி கபூர், அநுராதபுரம்.

✍✌✍

சிந்தியாவின் நகைச்சுவையான பதில்கள் எங்களை இன்பக்கடலில் ஆழ்த்துகின்றன. கவுண்டமணி- செந்தில் கற்பனை பிரமாதம். இராமாயணப் பகுதி இனிக்கிறது.

ஜே.எம். கியாஸ், மியாத்,
சகீத், இர்சாத், கிண்ணியா-04

✍✌✍

என் இனிய முரசே,

உன் பாப்பா முரசு சிறந்தது. நல்வழிகாட்டும் சிறுகதை. வாரம் ஒரு நாடு அனைத்தும் சூப்பர். ஐ.நா பற்றி அறியாத எமக்கு அறிவித்த அன்பு முரசுக்கு எமது நன்றிகள்.

செல்விகள் ர.ஜெனிபர்,
நிரோஷி, தர்ஷினி, மட்டக்களப்பு.

✍✌✍




உன் பக்கங்கள் அனைத்தையும்-
அவை
அற்புத முத்துக்களாகி என்
சிந்தைக்குள் சொத்தாகி
விடும்போது
என்னையே மறந்து ரசிக்கிறேன்.
உன் வாரம் வரும் வரை
என் ஆவலுக்கும் வரம்பேதுமில்லை.

வே.யோகன், கல்பிட்டி.

**மடல் அனுப்பியவர்களில் இடம் உள்ளவரை பெயர் பதிவு செய்யப்பட முடிந்தவர்கள்:**

* எம்.எம். முகம்மது ஸாகிர், சாய்ந்தமருது-10.
* முர்ஸி அப்பாஸ், பேருவளை.
* எஸ்-ஷோபா, மாத்தளை.
* ஏ.எச்.ராஸீன் மொகமட், ஏத்தாலை.
* லோஷினி நவமோஹன், ஹப்புத்தளை.
* ஞா.மணிமேகலா, கம்பளை.
* எம்.ரி. செல்வி ஜெகதீஸ், கொழும்பு-08.
* கே. புவனலோஜினி, இறக்குவானை.
* எஸ்.பத்மா, உமாஜினி, கொழும்பு-10.
* மர்லியா முஹாஜிரீன், மீவலதெனிய.
* செல்வி-சசிந்தா சதாசிவம், பெரியமோலை. எல்கடுவ.
* நஜ்மா அஹமட், கொழும்பு-15.
* எம்.பி. தௌபிக், புல்மோட்டை-02.
* இ. ராஜேஸ்வரி, சம்பூர்-07.
* சின்னத்தம்பி ரவிச்சந்திரன், ஹப்புகஸ்தன்னை.
* ஜெயகணேசன், பொகவந்தலாவ.
* வ. பிர்தௌஸ், கிண்ணியா-03.
* பௌஸர்கான், தர்காபிடிய.
* த.சுபேந்திரன், கல்கிசை.
* அ.பரமேஸ்வரன், கொழும்பு-13.
* ஆ.உதயசங்கர், ஆறுமுகத்தான் குடியிருப்பு.
* நபீஸா நஸ்புள்ள, நிலாவெளி.
* ஜீ.நந்தகுமார், பெல்மதுளை.



படிப்பகம்

www.padippakam.com

# கலவரம் ஏற்பட்டால் கொழும்பில் பெரும் தாக்குதல்!
# கைக்குண்டுகளும் ஆயுதங்களும் தயார் நிலையில்!
# தலைநகரில் புலிகளின் 50க்கு மேற்பட்ட மறைவிடங்கள்!

கொழும்பில் தமது குண்டுத்தாக்குதல் போன்ற நடவடிக்கைகளால் கலவரம் ஏற்படுமானால், அதனை சாதகமாக வைத்து பெரும் தாக்குதல் நடத்த புலிகள் திட்டமிட்டுள்ளனர். அதற்காக பெருந்தொகையான கைக்குண்டுகளும், துப்பாக்கிகள், ரவைகள் என்பனவும் தலைநகருக்குள் உள்ள புலிகளின் மறைவிடங்களில் கொண்டு வந்து சேர்க்கப்பட்டுள்ளன என்று விஷயமறிந்த வட்டாரம் ஒன்றின் மூலமாக தெரியவந்துள்ளது.

### தனியான மறைவிடங்கள்

கொழும்பு புதிய கதிரேசன் வீதியில் உள்ள கடை ஒன்றில் துப்பாக்கிகளும், கைக்குண்டுகளும் பெருந்தொகையாக கண்டு பிடிக்கப்பட்டமை தெரிந்ததே.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவல் ஒன்றை அடுத்தே புலிகளது மறைவிடங்களில் ஒன்று கண்டு பிடிக்கப்பட்டது.

கொழும்புக்குள் மட்டும் யாருக்கும் சந்தேகம் வராத வகையில் புலிகளின் 50க்கு மேற்பட்ட மறைவிடங்கள் இருக்கின்றன.

அங்கு ஆயுதங்கள் மறைத்து வைக்கப் பட்டுள்ளன.

வெடிமருந்துகள் வைக்கப்பட்டுள்ள மறைவிடங்கள் தனியாகவும், துப்பாக்கிகள், கைக்குண்டுகள் போன்றவை வைக்கப் பட்டுள்ள மறைவிடங்கள் தனியாகவும் உள்ளன.

தற்கொலைத் தாக்குதல் பிரிவினரோடு தொடர்புபட்ட இடங்களில்தான் வெடி மருந்துகள் சேகரித்துவைக்கப்பட்டுள்ளன.

நம்பத்தகுந்த வட்டாரத்தில் இருந்து முரசுக்கு கிடைத்துள்ள தகவல்களின்படி,

(நமது விசேஷ நிருபர்)

கொழும்பில் மீண்டும் ஒரு இனக்கலவரம் ஏற்பட்டால், எவ்வாறு செயற்படுவது என்பது தொடர்பாக புலிகள் முன்கூட்டியே திட்டமிட்டுள்ளனர்.

வீதிகளில் இறங்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்வது, கைக்குண்டுகளை வீசித் தாக்குவது, தலைநகரம் அல்லோல கல்லோலப்படும் நேரத்தில் முக்கிய இலக்குகள்மீது குண்டுத்தாக்குதல் நடத்துவது என்பதுதான் புலிகளின் திட்டம் என்னும் திடுக்கிடும் தகவல் வெளியாகியுள்ளது.

### பிரமுகர்கள் நம்பிக்கை

அதனால்தான் 'மீண்டும் ஒரு இனக் கலவரம் வந்தால் நாடு தானாகவே பிரியும்' என்று புலிகளின் பிரமுகர்கள் வடக்கில் கூறி வருகின்றனர்.

கொழும்பில் இனக்கலவரம் நடந்தால் தமிழர்கள் மீதான தாக்குதலுக்கு தாங்கள் பதிலடி கொடுத்தது போன்ற செயற்பாட்டில் ஈடுபட புலிகள் தயாராக உள்ளனர்.

அதனால்தான் தலைநகரில் தமது மறை விடங்களில் துப்பாக்கிகளையும், கைக்குண்டுகளையும் கொண்டு வந்து சேர்க்கின்றனர் என்று சொல்லப்படுகிறது.

இதேவேளை கொழும்பில் புலிகளுக்கு ஆதரவாகப் பேசிவரும் தமிழ் அரசியல் வாதிகள் சிலரது இல்லங்களை சோதனையிட பாதுகாப்பு தரப்பு திட்டமிட்டுள்ளது. அதற்காக அரசாங்கத்தின் அனுமதி கோரப் பட்டுள்ளதாக தெரிகிறது.

தலைநகரில் உள்ள பிரபல தமிழ் வர்த்தகர்கள், மற்றும் முக்கியமான பதவிகளில் உள்ளவர்கள்மீது சந்தேகம் திரும்பியிருப்பதாக சிங்களப் பத்திரிகை ஒன்றும் செய்தி வெளியிட்டிருக்கிறது.

## நொச்சிமோட்டை தடைமுகாமில் மட்டையடி
## நாள் ஒன்றுக்கு 600 பேருக்கு மட்டும் அனுமதி!

வடபகுதியில் இருந்து வவுனியா வரும் மக்கள் நொச்சிமோட்டையில் உள்ள தடை முகாமில் வைத்து தடுக்கப்படுகின்றனர்.

தினமும் ஆயிரக்கணக்கான மக்கள் வடக்கில் இருந்து வவுனியா வருவதற்காக நொச்சிமோட்டையில் காத்திருக்கின்றனர்.

நாள் ஒன்றுக்கு 600 பேர் வரையிலான மக்களை மட்டுமே நொச்சிமோட்டையைத் தாண்டிவர படையினர் அனுமதிக்கின்றனர்.

600 பேரை உள்ளே எடுத்ததும் மீதிப் பேரை திரும்பிச் செல்லுமாறு கூறப்படுகிறது. செல்லாமல் நிற்பவர்கள் மீது சில சமயங்களில் பச்சை மட்டை அடி நடத்தப் படுகிறதாம்.

நொச்சிமோட்டையில் தினமும் அனுமதிக்கப்படும் 600 பேரில் 30 முதல் 35 பேருக்கு உட்பட்ட எண்ணிக்கையில்தான் இளைஞர்கள்- யுவதிகள் அனுமதிக்கப்படுகிறார்கள். ஏனையோர்கள் வயதானவர்களும், சிறுவர்களுமாவர்.

நொச்சிமோட்டையில் இருந்து பஸ் மூலம் தாண்டிக்குளம் அழைத்துவரப்படும் மக்கள் அங்குள்ள இராணுவ புலனாய்வு முகாமில் இறக்கிவைத்து விசாரிக்கப் படுவார்கள். அங்கு இரவு நேரத்தில் தங்கநேரும்போது யுவதிகள் சங்கடங்களுக்கு உள்ளாகிறார்கள்.

தாண்டிக்குளம் புலனாய்வு முகாமில் விசாரணை முடிந்ததும் வவுனியாவில் உள்ள தற்காலிக தடைமுகாம்களுக்கு மக்கள் அனுப்பிவைக்கப்படுவர்.

வேப்பங்குளத்திலும், வவுனியா புகையிரத நிலையத்திற்கு அருகிலும் இரண்டு தற்காலிக தடைமுகாம்கள் இயங்கிவருகின்றன.

அங்கு மீண்டும் விசாரணை ஆரம்பமாகும். கொழும்புக்கு செல்ல வேண்டிய காரணம் என்ன? கொழும்பில் உள்ள உறவினர்கள் யார்? என்றெல்லாம் கேள்விகள் கேட்கப்படும்.

முகாமைவிட்டு வெளியே சென்றுவர சில மணி நேரப் பாஸ் வழங்கப்படும்.

தடை முகாம்கள் இரண்டிலும் இட நெருக்கடி ஏற்பட்டுள்ளது. மரநிழல்களில் மக்கள் படுத்துறங்க வேண்டியிருக்கிறது.

அதே நேரம் முகாமில் உள்ள தொலைக் காட்சியில் கிரிக்கெட் ஆட்டத்தை கண்டு களிப்பதிலும் ஒரு பகுதியினர் அக்கறை செலுத்துகின்றனர்.

இந்தியாவின் பிரபல சன் ரி.வி நிகழ்ச்சிகளை வவுனியாவில் காணமுடிகிறது. தடை முகாம்களில் சன் ரி.வி.யை பலரும் சுவாரசியமாக கண்டு களிக்கிறார்கள். சோகங்கள் மத்தியில் சின்னதான இளைப் பாறல்.

## காவல்துறையில் இருவர் வெட்டிக்கொலை!

யாழ்ப்பாணம் தென்மராட்சி பகுதியில் புலிகளின் தமிழீழக் காவல் துறையைச் சேர்ந்த இருவர் வெட்டிக் கொல்லப்பட்டனர்.

கடந்த மாத மத்தியில் இச்சம்பவம் நடைபெற்றுள்ளது. இச்சம்பவம் தொடர்பாக முரசுக்கு கிடைத்துள்ள தகவல் வருமாறு:

யாழ் குடாநாட்டில் தென்மராட்சியில் விறகுக்காக மரம்வெட்டச் சென்றவர்களை தமிழீழக் காவல்துறையினர் தடுத்தனர்.

அதனையடுத்து இரு தரப்பினருக்கும் இடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

'தொழிலும் இல்லை, சாப்பிடவும் வழியில்லை, மரம் வெட்டவும் தடைபோடுகிறீர்களே' என்று கேட்டனர் தடுக்கப்பட்டோர்.

வாய்த்தர்க்கம் முற்றியபோது காவல் துறையைச் சேர்ந்த ஒருவர் பொறுமையிழந்து, 'சாப்பிட முடியாவிட்டால் களவெடுப்பதுதானே?' என்று கேட்டுவிட்டார்.

"களவெடுத்தாலும் பிடித்து தண்டனை தருவது நீங்கள்தானேடா" என்று சொல்லியபடி கைகலப்பு ஆரம்பித்தது.

கைகலப்பின் ஒரு கட்டத்தில் மரம் வெட்டக் கொண்டு சென்ற கோடாலியால் காவல்துறையைச் சேர்ந்த இருவரையும் வெட்டிவிட்டார்கள். வெட்டுக் காயங்களுக்கு உள்ளான இருவரும் ஸ்தலத்திலேயே பலியானார்கள்.

இதனையடுத்து சந்தேக நபர்கள் சிலரை புலிகளது காவல்துறையினர் கைதுசெய்து விசாரணை நடத்திவருகின்றனர்.

## யாழ்ப்பாணம் சென்றார் கரிகாலன்
## பேட்டிகள் தொடர்பாக பிரபா அதிருப்தி

விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவுத் துணைத்தலைவரான கரிகாலன் மட்டக்களப்பில் தங்கியிருந்தார். பத்திரிகையாளர்களை சந்தித்து பேட்டிகளும் வழங்கியிருந்தார்.

பேட்டிகளின்போது கரிகாலன் தெரிவித்த சில கருத்துக்கள் பிரபாகரனுக்கு அதிருப்தியை ஏற்படுத்தியதாக தெரிகிறது.

மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட புலிகளின் தளபதி கருணாவுக்கும் கரிகாலனின் நடவடிக்கைகள் திருப்தியளிக்கவில்லை.

இதனையடுத்து வன்னியில் இருந்து புலிகளின் தலைவர் பிரபாகரன் மட்டக்களப்புக்கு அவசர உத்தரவொன்றை அனுப்பியிருந்தார்.

கரிகாலனை உடனடியாக வன்னிக்கு வருமாறு அந்த உத்தரவில் கூறப்பட்டிருந்தது.

அதனையடுத்து அவசரமாகப் புறப்பட்ட கரிகாலன் வன்னிக்கு சென்றுள்ளார்.

விளக்கம் பெறப்பட்ட பின்னர் கரிகாலன் மீண்டும் கிழக்குக்கு அனுப்பப்படுவாரா, அல்லது வன்னியிலேயே தங்கவைக்கப் படுவாரா என்பது தெரியவில்லை.

இந்திய அரசோடு புலிகள் இயக்கத்தினர் சமரச முயற்சியில் ஈடுபட்டிருந்தபோது, மட்டக்களப்பல் இருந்த கரிகாலன் தனது பேட்டி ஒன்றில் இந்தியாவை சாடியிருந்தார்.

அதன்பின்னரே ஹெறாரிசோன் ஆயுதக் கப்பல் விவகாரம் நடைபெற்றது.

சமரச முயற்சி நேரத்தில் கரிகாலன் இந்தியாவை கண்டித்து பேட்டி கொடுத்த விடயம் புலிகளின் வெளிநாட்டு பிரமுகர்களால் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

## தா பத்தாயிரம்! வா கொழும்புக்கு!

வவுனியாவில் இருந்து வடபகுதி மக்கள் கொழும்பு வருவதற்கு கடும் கட்டுப்பாடுகளை விதித்துள்ளனர் அல்லவா?

அதனை லாபகரமான பிழைப்பாக்கத் திட்டமிட்டனர் கொழும்பில் உள்ள சில தங்கு விடுதிக்காரர்கள்.

கொழும்பில் தமக்குள்ள தொடர்புகளை பயன்படுத்தி, கவனிக்க வேண்டியவர்களை கவனித்து, ஆவணங்களைத் தயார்படுத்திக் கொண்டு வவுனியாவுக்கு சென்றனர்.

ஒரு நபரை வவுனியா தடைமுகாமில் இருந்து கொழும்புக்கு அழைத்துவர 10 ஆயிரம் ரூபாய்வரை பேரம் பேசப்பட்டது. பணம் இருந்தவர்கள் கொடுத்துவிட்டு கொழும்பு வந்தார்கள். 10 ஆயிரம் ரூபாவில் வவுனியாவில் சீருடையினருக்கும் பங்கு கொடுக்கப்பட்டது.

இந்த விஷயம் இராணுவத்தினருக்கு தெரியவந்தமையால் பிரச்சனை ஏற்பட்டதாம். அதனால்தான் வவுனியா வரும் வடபகுதி மக்கள் தொடர்பான விடயங்களை கையாளும் பொறுப்பு இராணுவத்தினரிடம் மீண்டும் ஒப்படைக்கப்பட்டது.

## கிழக்கில் திடீர் இராணுவ முகாம்கள்
## மீளக்குடியேறியோரின் குடிசைகள் எரிப்பு

மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து இராணுவம் முன்னர் வெளியேறியிருந்த பகுதிகளில் மீண்டும் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. கடந்த வாரம் களுவன்கேணியிலும் ஒரு இராணுவ முகாம் அமைக்கப்பட்டுள்ளது. களுவன் கேணிக்கு ஊடாகப் புலிகள் கடல் மற்றும் தரை மார்க்கத் தொடர்புகளை வைத்திருந்தனர் என்று கருதப்படுகிறது.

இது தவிர "ரிவிகிரண" இராணுவ நடவடிக்கையை கடந்த வாரம் மேற்கொண்டு தொப்பிக்கல, புலிபாய்ந்தகல் போன்ற பகுதிகளுக்கு முன்னேறிய படையினர் தரவையை அடுத்துள்ள கோராவெளிப் பகுதியில் ஒரு இராணுவ முகாமை அமைத்துள்ளனர். யாழ் "ரிவிரெச" நடவடிக்கைக்கு முன்னர் தரவையில் இருந்த ஒரு இராணுவ முகாமைப் புலிகள் தாக்கி அழித்திருந்தனர். இப்பகுதயில் நிலை கொண்டிருந்த இந்திய அமைதிப் படையினரும் பெரியதொரு இராணுவ முகாமை அப்போது அமைத்திருந்தனர்.

உன்னிச்சை முன்றாம் கட்டையில் அமைந்திருந்த இராணுவ முகாம் அப்புறப் படுத்தப்பட்டுள்ளது. முகாம்களைத் திடீரென அப்புறப்படுத்துவதும் வேறு பகுதியில் திடீரென அமைப்பதும் மட்டக்களப்பில் புலிகளைத் தேடியழிக்கும் புதிய தந்திரோபாய நடவடிக்கையாகக் கருதப்படுகிறது.

இதனிடையே சமீபத்திய இராணுவ நடவடிக்கையின்போது மீள் குடியேற்றப் பட்டிருந்த மயிலவெட்டுவான் கிராம வாசிகள் மீண்டும் அகதிகளாகியுள்ளனர் என்று தெரியவருகிறது. இவர்களின் 6 குடிசைகள் தீக்கிரையாக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 107 குடும்பங்கள் சென்ற வருடம் இப்பகுதியில் மீளக் குடியேற்றப்பட்டிருந்தார்கள்.

பதுளை வீதியூடாக படையினர் நடவடிக்கை மேற்கொண்டிருந்தாலும் பதுளை வீதியில் அவர்கள் நிலை கொள்ளவில்லை. பதுளை வீதி கூமாச்சோலைச் சந்தியில் புலிகள் அமைத்திருந்த நினைவுத் தூபியை படையினர் எதுவும் செய்யவில்லை.

இராணுவக் கட்டுப்பாட்டிலில்லாத பதுளை வீதியின் சில பகுதிளுக்கு கடந்த வாரம் இரு கனடியப் பத்திரிகையாளர்களும் சிங்களப் பத்திரிகையொன்றின் செய்தியாளரும் சென்றிருந்தனர். இவர்கள் அப் பகுதியிலுள்ள பாடசாலைகளுக்கும் விஜயம் செய்தனர்.

• (ஏறாவூர் நிருபர்)

## திருமலை ரெலிகொமில் தமிழ் புறக்கணிப்பு

(திருமலை நிருபர்)

திருமலையில் உள்ள ஸ்ரீலங்கா ரெலிகொம் அதிகாரிகள் திடீரென சிங்களத்தில் மட்டும் பணிபுரிய ஆர்வம் கொண்ட செயல் அதன் ஊழியர்களையும் பொது மக்களையும் வியப்புக்குள்ளாக்கியுள்ளது.

அலுவலக அறிவித்தல் பலகைகளில் சிங்களம், ஊழியர்களுடனான கடிதப் போக்குவரத்துக்களில் சிங்களம், வாடிக்கையாளர்களுடனான தொடர்புகளில் சிங்களம் என்று தூள் கிளப்ப ஆரம்பித்து விட்டார்கள் இவர்கள்.

இத்தனைக்கும் இந்த அலுவலகத்தில் பணியாற்றுவோரில் ஒன்றிரண்டு பேர்களைத் தவிர அனைத்து ஊழியர்களும் தமிழர்களே. அதிகாரிகள் அனைவரும் தமிழர்களே.

வடக்குக் கிழக்கின் தலைநகரமான திருக்கோணமலையில் தமிழ் அதிகாரிகளே தமிழை ஓரங்கட்டி அரச விசுவாசிகளாகக் காட்டிக் கொள்வதன் நோக்கமென்ன என்று ரெலிகொம் ஊழியர்களே கேட்க ஆரம்பித்து விட்டார்கள். இது சம்பந்தமாக ஊழியர்களது தொழிற்சங்கங்களும் நடவடிக்கை எடுத்து வருகிறது.

தெய்வம் வரம் கொடுத்தாலும் தாம் வரங்கொடாத பூசாரிகளான இவர்களின் வால்பிடிக்கும் வேலைகளால்தான் தமிழ் மக்கள் அரச திணைக்களங்கள் மீது அதிருப்தி கொள்ள நேரிகிறது என்று முரசு நிருபரிடம் மனம் வருந்தினார் பிரமுகர் ஒருவர்.

## மட்டு-புத்தளம் விஷேட ரயில் சேவை!

புத்தளத்தில் இம்மாதம் 20,21,22ம் திகதிகளில் நடைபெறும் அகில உலக தப்லீக் ஜமாஅத் இஜ்திமா வைபவங்களில் கலந்து கொள்ளும் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட முஸ்லிம்களின் நன்மைகருதி மட்டக்களப்பிலிருந்து புத்தளத்திற்கு இம் மாதம் 18,19ம் திகதிகளில் விஷேட ரயில் சேவை நடாத்தப் படுகின்றது.

மட்டக்களப்பு, எம்.பியும், பிரதி தபால், தொலைத் தொடர்புகள் அமைச்சருமான அல்ஹாஜ் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் புகையிரத திணைக்கள பொதுமுகாமையாளர், மட்டக்களப்பு, அம்பாறை இராணுவ இணைப்பதிகாரி சிறில் பீரிஸ் ஆகியோருடன் நடாத்திய பேச்சுவார்த்தையை அடுத்தே இச்சேவை நடாத்தப்படுகின்றது.

18,19ம் திகதிகளில் காலை 10:00 மணிக்கு மட்டக்களப்பு நிலையத்திலிருந்து புத்தளம் நோக்கி இப்புகையிரதம் புறப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆறு மீனவர்கள் மாயம்

இரணைதீவு கடலில் கடற்படையினர் தாக்கியதால் ஆறு மீனவர்களைக் காணவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

9.03.96 அன்று இரவு இத்தாக்குதல் நடத்தப்பட்டது. மீன்பிடிப்படகு ஒன்றும் கடலில் மூழ்கடிக்கப்பட்டது.

இதேவேளை முல்லைத்தீவு கரையோரக் கிராமமான முள்ளிவாய்க்கால் கடற்பரப்பில் இருந்து கடற்படையினர் பீரங்கித் தாக்குதல் நடத்தினார்கள். இதனால் கரையோர குடியிருப்புக்களில் இருந்த மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர்.

## படையினர் விநியோகிக்கும் பிரசுரம்
## புலிகளை சரணடையுமாறு அறிவித்தல்

விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களை சரணடையுமாறு கோரி பாதுகாப்பு படையினர் கிழக்கில் பிரசுரங்களை விநியோகித்து வருகின்றனர்.

அப்பிரசுரத்தில் பின்வருமாறு குறிப் பிடப்பட்டுள்ளது:

"எல்.ரி.ரி.ஈ. தலைவர்கள் அப்பாவி பிள்ளைகளை தவறான வழியில் கொண்டு செல்கிறார்கள். அவர்களது பெற்றோர்களையும் இன்னல்களுக்கு ஆளாக்குகிறார்கள்.

நீங்கள் தற்போது எல்.ரி.ரி.ஈ. இயக்கத்தில் சேர்ந்து பல செயல்களில் ஈடுபட்டிருந்தாலும், இலங்கை பாதுகாப்பு படையினரிடம் சரணடைவீர்கள் என்றால், பெற்றோர்கள் உங்களை இழந்துவிடும் துயரத்தை துடைத்து, மீண்டும் உங்கள் பெற்றோரிடம் உங்களை ஒப்படைப்போம்.

தொடர்ந்தும் நீங்கள் மறைந்திருந்து அல்லது வேறு முறைகளில் பயங்கரவாத செயல்களில் ஈடுபட முயற்சிப்பீரெனில் அது புத்திசாலித்தனமாகாது. அவ்வாறெனில் உங்கள் பெற்றோர், உற்றார், உறவினர்களை ஒருபோதும் சந்திக்க முடியாமல் போய்விடும். மரணத்தையே சந்திக்க நேரிடும்." இவ்வாறு பாதுகாப்பு படையினர் வெளியிட்டுள்ள பிரசுரத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

சோதனை முகாம்களில் வைத்து இப்பிரசுரம் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

## குண்டுத்தாக்குதலும் புலிகளின் கவிதையும்

கொழும்பு மத்திய வங்கி குண்டு வெடிப்புக்கு புலிகள் இயக்கத்தினர் இது வரை உத்தியோகபூர்வமாக உரிமை கோரவில்லை.

அதேசமயம் மறைமுகமாக கொழும்பு குண்டுவெடிப்பை பிரசாரப்படுத்திவருகின்றனர்.

இலண்டனில் இருந்து புலிகளால் வெளியிடப்படும் 'களத்தில்' என்னும் பத்திரிகையில் கொழும்பு குண்டுவெடிப்பு தொடர்பாக ஒரு கவிதை வெளியிடப் பட்டுள்ளது.

அக்கவிதையில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:

"யாழ் நகரில் இட்ட தீ, கொழும்பில் பற்றி எரிகிறது. சூட்சுமத்தை புரிந்து கொள்வீர், சுட்டது வினையே!

ஊரோடு ஓடினமே ஆரோடி வந்தீர்கள். உற்றோம் பெருவெற்றி என்றாடி மகிழ்ந்தீர்கள்.

சீரோடு வாழ்ந்த இனம் சிதறி நிற்கையிலே சீனவெடி கொழுத்தி ஆர்த்து மகிழ்ந்தீர்கள்.

யாழ்நகரில் இட்ட தீ கொழும்பில் எரிகிறது." என்று தொடர்கிறது அக் கவிதை.

## புலிகளின் பெயரில் கடிதங்கள்

வெளிநாடுகளில் புலிகள் இயக்கத்திற்கு எதிரான பொய்யான பிரச்சாரங்களில் ஈடுபடுவதாக இலங்கை அரசுமீது புலிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

"புலிகளது பெயரில் மேற்குநாட்டு ராஜதந்திரிகளுக்கு மிரட்டல் கடிதங்கள் அனுப்பி வைக்கப்படுகின்றன. பொது நிறுவனங்களுக்கும் அவ்வாறான கடிதங்கள் அனுப்பிவைக்கப்படுகின்றன" என்று புலிகளின் சர்வதேச செயலகம் தனது அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

## புதிய பஸ்கள் படையினரிடம்

மட்டக்களப்பு-வாழைச்சேனை டிப்போவைச் சேர்ந்த புதிய பஸ் வண்டிகள் படையினரால் தமது பாவனைக்காக எடுத்துச் செல்லப்படுகின்றன.

இதனால் பழைய பஸ்வண்டிகளையே சேவையில் ஈடுபடுத்த வேண்டியுள்ளது. சோதனை முகாமில் நிறுத்தப்பட்டு சோதனை முடிந்து பஸ்சில் ஏறினால் பஸ் நகர மறுக்கிறது. பின்னர் பயணிகள் இறங்கி தள்ளினால்தான் புறப்படும்.

இதேவேளை மட்டக்களப்பு பெரிய பாலம் சோதனை முகாம்வழியாக சைக்கிளில் செல்வோர் பாடு திண்டாட்டம்தான்.

ஒரு சைக்கிளை பூரணமாக ஆராய்ந்து முடிக்கவே 20 நிமிஷம் செல்கிறது. இதனால் தமது சைக்கிள்களை வீடுகளில் விட்டுவிட்டு பலர் நடந்தே செல்வதை அவதானிக்க முடிகிறது.



படிப்பகம்

www.padippakam.com

# மருந்தும் இல்லை! சிட்டைகளும் தெளிவாக இல்லை!

## நோயாளிகளும் கடைக்குக்கடை ஏறி அலைச்சல்!

(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டப் பொது வைத்திய சாலையில் சிகிச்சைக்காகச் செல்லும் நோயாளிகளுக்கு மருந்துகளை தனியார் மருந்தகங்களில் வாங்குவதற்காக வைத்தியர்களால் மருந்துச் சிட்டைகள் எழுதிக்கொடுக்கப்படுகின்றன. எனினும் எழுதிக்கொடுக்கப்படும் மருந்துச் சிட்டைகளில் குறிப்பிடப்பட்டுள்ள மருந்துப் பொருட்களின் பெயர்கள் எவராலுமே வாசிக்க முடியாதளவிற்கு கிறுக்கலாக உள்ளன. சிலவேளைகளில் மருந்துச் சிட்டையில் ஒரு கோடு மட்டும் கீறப்பட்டிருக்கும்.

இதனால் படிப்பறிவில்லாத பல பாமரமக்கள் கடைகடையாக ஏறியிறங்கி அலைக்கழிகிறார்கள். சில நேரங்களில் 'பாமசி'க்காரர்கள் சிட்டை கொண்டு வருவோரிடம் என்ன நோய்க்கு மருந்து பெற்றீர்கள் என்று கேட்டு விட்டு ஊகத்தின் பேரிலேயே மருந்துகள் கொடுப்பதைக் காண முடிகிறது. இதனால் பலவிபரீதங்கள் ஏற்பட இடமுண்டு. பல பாமசிக்காரர்கள் கிறுக்கலாக மருந்துச்சிட்டை எழுதிக் கொடுக்கும் வைத்தியர்கள்மீது சீறி விழுந்து சிட்டை கொண்டு வருவோரை அவர்களிடமே திருப்பி விடுகிறார்கள்.

'படித்தால் நாகரிகம் இருக்க வேண்டாமா? படிக்காத மக்களை இப்படி ஏமாற்றலாமா? கொஞ்சம் விளங்கக் கூடியவாறு மருந்துச் சிட்டைகளை எழுதினால் ஏழை நோயாளிகள் இப்படி அலையமாட்டார்களே' என்பது பரிதாபப் பட்டோரினதும் பாமசிக்காரர்களினதும் கருத்தாகும்.

# தாதிமார்கள் மோதல் நோயாளர்கள் அவதி

(திருமலை நிருபர்)

மூதூர் வைத்தியசாலையில் வைத்திய அதிகாரி ஒருவருக்கும் அங்கு கடமை புரியும் தாதிமார்களுக்கும் ஏற்பட்ட இழுபறி நோயாளர்களின் தலையில் விழுந்துள்ளது.


இந்த இழுபறி காரணமாக ஏழு தாதிமார்கள் கடந்த 5ம் திகதி தொடக்கம் சுகயீன விடுமுறையில் நின்றுவருகின்றனர். ஒரேயொரு தாதியே தற்போது கடமையில் உள்ளார். இந்த நிலையில் தாதிமார் செய்யும் பணிகளை அங்குள்ள சிற்றூழியர்களே செய்து வருகின்றனர்.

வைத்திய அதிகாரியின் தான்தோன்றித்தனமான நடத்தையும் தாதிமார்களின் பிடிவாதமான பதிலிறுப்பும் மூதூர் நோயாளர்களின் உயிருக்கு உலை வைத்துவிடுமோ என அஞ்சப்படுகிறது. தாதிமார்களின் கடமைகளைச் செய்யும் சிற்றூழியர்களைக் கண்டு சிகிச்சை பெறும் நோயாளர்கள் வெலவெலத்துப் போயிருக்கிறார்கள்.

எனினும் சுகாதாரத் திணைக்களமோ மூன்று வாரங்களாக நோயாளர்களின் உயிருடன் விளையாடும் இந்தச் செய்கையைக் கண்டுகொள்ளாமலே இருந்திருக்கிறது.

இது சம்பந்தமாக மேலிடத்துக்கு ஆட்சேபனையைத் தெரிவித்துள்ள தாதிமார்கள், மூதூர் வைத்தியசாலை அதிகாரிமேல் விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டுமெனக் கோரி திருக்கோணமலை வைத்திய சாலைத் தாதிமாருடன் இணைந்து 29.2.96 அன்று ஒரு மணிநேர அளவான வேலை நிறுத்தமொன்றை மேற்கொண்டனர்.

# காட்டூண் மூலை



நன்றி - த சண்டே ஒப்சேர்வர்

# நியமனம் எப்போது?

கடந்த வருடம் நீதி அரசியலமைப்புகள் அலுவல்கள் அமைச்சின் செயலாளர் டாரனி எஸ்.விஜேதிலக அவர்கள் மூலமாக நீதி அரசியல் அலுவல்கள் அமைச்சிலும், அதன் அதிகாரத்திற் குட்பட்ட திணைக்களங்கள், நீதி மன்றங்கள் உட்பட, காரியாலய தொழிலாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கேட்கப்பட்டிருந்தது.

மேற்காணும் பதவிக்கு விண்ணப்பித்தவர்களுள் வடக்கு-கிழக்கு மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் இருந்து விண்ணப்பித்தவர்களுக்கு கடந்த வருடமே நேர்முக பரீட்சை நடைபெற்று நியமனங்கள் வழங்கப்பட்டு தற்போது சேவையில் உள்ளார்கள்.

வடக்கு-கிழக்கு மாவட்டங்களில் இருந்து விண்ணப்பித்தவர்களுக்கு இந்த வருடத்தின் ஆரம்பத்தில் நேர்முகபரீட்சை நடந்து முடிந்துவிட்டது. இதுவரைக்கும் எதுவித பதிலும் இல்லை. காரியாலய தொழிலாளர் பதவிக்கு விண்ணப்பித்து நேர்முக பரீட்சைக்கும் சென்றுவிட்டு மேற்காணும் பதவியை எதிர்பார்த்து இருக்கும்- என்னைப் போன்ற பலருக்கு நீதி அரசியலமைப்பு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் சாதகமான பதிலை வழங்குவாரா?

கே.ஜஸ்ரின், வவுனியா.

# வாகனேரி சிறுபோகக் கூட்டம் இம்முறை இல்லை!

(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பு மாவட்ட வாகனேரிப் பகுதியின் விவசாயக் கண்டங்களுக்கான சிறுபோக, பெரும்போக ஆரம்பக் கூட்டங்கள் வழக்கமாக வாழைச்சேனையில் நடைபெறுவதுண்டு, ஆனால் இம்முறை எங்குமே நடைபெறாமல் நிறுத்தப்பட்டுள்ளது.

வாகனேரிப் பெரிய நீர்ப்பாசனத் திட்டத்தின்கீழ் சுமார் பத்தாயிரம் ஏக்கர் நெற்செய்கைக் காணிகள் செய்கை பண்ணப்பட்டு வந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

வழக்கமாக போகக் கூட்டங்களின் போதே நெல்விதைப்புக்கான திகதி மற்றும் நீர்ப்பாசனம் பற்றிய விவரங்கள் அறிவிக்கப்படுவதுண்டு. ஆனால் இம்முறை இது சம்பந்தமான எந்த உறுதிமொழிகளும் இல்லாமல் விவசாயிகள் கவலையடைந்துள்ளார்கள். இம்முறை எரிபொருள் பற்றாக்குறை, யுத்த நடவடிக்கைகள், நீர்ப்பற்றாக்குறை என்ற மும்முனைப் பிரச்சனைகளுக்கு கிழக்கு விவசாயிகள் முகம் கொடுக்க வேண்டியிருந்தது.

# விடுதலையும்! - கடத்தலும்!

(ஏறாவூர் நிருபர்)

கடந்த 10.02.96 அன்று வந்தாறு மூலையில் பஸ்ஸிலிருந்து பிடித்துச் செல்லப்பட்ட மட்டக்களப்பு சிறைச்சாலையின் இரு தமிழ் சிறைக்காவலர்களையும் புலிகள் விடுவித்துள்ளனர்.

இதனிடையே வந்தாறுமூலையைச் சேர்ந்த இரு தமிழ் யுவதிகளை புலிகள் பிடித்துச் சென்றிருப்பதாகத் தெரியவருகிறது. இதில் ஒருவர் வந்தாறுமூலையைச் சேர்ந்த மறைந்த பிரபல கவிஞர் ஒருவரின் மகளாவார்.

# மத்திய மாகாண இ.தொ.கா.வுக்குள் இழுபறி

## தொண்டாவின் புதல்வருக்கு மீண்டும் பதவி?

(கண்டி நிருபர்)

மத்திய மாகாண சபையில் கல்வி அமைச்சர் பதவியை மீண்டும் இ.தொ.கா. அணியினர் கைப்பற்றக் கூடிய சாத்தியக் கூறுகள் தென்படுவதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இப்பொழுது மத்திய மாகாண முதலமைச்சருக்கும் இ.தொ.கா. அணியினருக்கும் இடையில் நிலவும் பந்த பாசம் அதிகரித்திருப்பதுடன் இந்த உறவு நீடிக்கலாம் எனவும், எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு முன்னோடியாக இ.தொ.கா. தனித்துப் போட்டியிடக் கருதியிருப்பதாலும் முதலமைச்சருக்கிடையிலான உறவு வலுவடைந்து வருவதாக அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

தமிழ் கல்வி அமைச்சர் பதவியை திரு வீ.புத்திரசிகாமணி (ஐ.தே.க) இப்பொழுது வகிக்கின்றார். பள்ளேகலையில் தமிழ் மகா வித்தியாலயம் ஒன்றுக்கான அடிக்கல் நாட்டு வைபவம் திடுதிப்பென அண்மையில் ஏற்பாடு செய்யப்பட்டது. அதில் திரு.புத்திரசிகாமணி வேண்டுமென்றே ஓரம் கட்டப்பட்டாரா என்ற சந்தேகமும் வலுவடைந்துள்ளது.

இதே வேளையில் முன்னாள் மாகாணசபை உறுப்பினரும் இ.தொ.கா.வின் செயலாளருமான காலஞ்சென்ற திரு வீ.அண்ணாமலையின் புதல்வரான சட்டத்தரணி திரு அ.கதிரேஷன் ம.மா.சபைக்கு இ.தொ.கா. மூலம் தேர்ந்தெடுக்கப் பட்டவர். ஆனாலும் இ.தொ.காவுக்குள் அவருக்கும் மற்றும் மூன்று உறுப்பினர் களுக்கும் இடையில் பெருத்த விரிசல் இருந்து வருவதால், திரு கதிரேஷன் ஐ.தே.கட்சி சார்பில் கண்டி மாவட்ட அமைப்பாளராக நியமிக்கப்படலாம் என்ற ஹேஷ்யமும் பலமாக அடிபடுகின்றது.

காலியில் புனரமைக்கப்படவிருக்கும் துறைமுக அபிவிருத்திக்குப் பொறுப்பான ம.மா.சபை உறுப்பினர் திரு.எஸ். கந்தசாமி (இ.தொ.கா.) தமது பதவியைக் கைவிடும் சந்தர்ப்பம் ஏற்பட்டால் அதனால் ஏற்படும் ம.மா.சபை உறுப்பினர் வெற்றிடத்திற்கு அமைச்சர் தொண்டமானின் புதல்வர் திரு எஸ்.கே. இராமநாதன் நியமிக்கப்படலாம் என்ற ஊகமும் இருந்து வருகின்றது.

அவ்வாறான சந்தர்ப்பத்தில் கல்வி அமைச்சர் பதவி மீண்டும் அவரையே போய்ச்சேரும் எனவும் கருதப்படுகின்றது. திரு.இராமநாதன் முதலாவது மாகாண சபையில் மத்திய மாகாணம் முழுவதற்குமே கல்வி அமைச்சராக இருந்தவர் ஆவார்.


# Bright ன் ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சை

வெற்றிக்கனி இதழ் மூலம் முன்னோடிப்பயிற்சி செய்து சித்தி அடைந்த நூற்றுக்கணக்கான மாணவர்களில் சில மாணவர் விபரம் வருமாறு

| | பெயர் | புள்ளி |
|---|---|---|
| 1. | N. பஜூமாவி - விஜயராட்ணம் இந்துகல்லூரி - நீர்கொழும்பு - | 163 |
| 2. | S. கேசவன் - கொ/இந்துக்கல்லூரி - பம்பலப்பிட்டி - | 147 |
| 3. | MZM முகமட் - தருந்துகவில ம.வி - அக்குறணை - | 139 |
| 4. | பேரி ஷமீனா - ரதம்ப முஸ்லிம்வித்திய - அம்பகஸ்டொவ - | 133 |
| 5. | M. அகல்யன் - வவுனியா சைவபிரகாச.வி - வவுனியா - | 130 |
| 6. | M.I.F. ரினோஸா - தாருன் உலூம் மு.ம.வி - ரம்புக்கன - | 112 |
| 7. | M.D. தலைஷாஉமமா - ரதம்ப முஸ்லிம் வி - அம்பகஸ்டொவ - | 111 |
| 8. | M.M.D. அகானபாஸ்ரி - இறத்தோட்டை அப்துல்றஹீம் மு.வி - | 106 |
| 9. | தாஜுத்தீன் ராசிதா - அ/ மனாருல் உலாம் மு.வித் - அபுரம் - | 97 |
| 10. | A.A முகமட் அனஸ் - ரதம்ப மு. வித்தி - அம்பகஸ்டொவ - | 96 |

பரீட்சையில் சித்தி யெய்திய மாணவ விபரம் தொடர்ந்து ஞாயிறு தோறும் வெளி வரும். வெற்றிக்கனி இதழ் - 9,10 வெளிவரும்.

1996 ஆண்டில் புலமைப்பரிசில் சித்தி பெற BRIGHT ன் வெற்றிக்கனியை பாவிக்கவும். 96 ஆண்டுகான முன்னோடி பயிற்சியில் இணைய விரும்புவோர் உடன் தொடர்புகொள்க.

**BRIGHT BOOK CENTRE (PVT) LTD**
S-27, FIRST FLOOR, P.O. BOX 162
Colombo central super market complex
Colombo - 11 T.P. 434770


# அலட்சியமான மேற்பார்வை

24-2-96 அன்று நடைபெற்ற தமிழ் மொழி ஆசியரியருக்கான போட்டிப் பரீட்சைக்கு மட்டக்களப்பில் இந்துக்கல்லூரியும் ஒரு பரீட்சை நிலையமாக தெரிவு செய்யப்பட்டிருந்தது. இங்கு மண்டப இல 01 இல் தோற்றிய சுமார் 100 பரீட்சார்த்திகள் அமருவதற்கு அவரவர்க்குரிய சுட்டெண் இடப்படவில்லை. இதனால் பரீட்சார்த்திகள் எங்கு அமருவது என்று தெரியாமல் திண்டாடினர். தாங்கள் விரும்பிய இடங்களில் பரீட்சார்த்திகள் அமரலாம். என பரீட்சை தொடங்க சிறிதுநேரத்திற்கு முன் தலைமை மேற்பார்வையாளரினால் அறிவித்தல் விடுக்கப்பட்டது.

நாடளாவிய ரீதியில் நடைபெற்ற போட்டிப்பரீட்சைக்கு பரீட்சைக் கட்டணம் செலுத்தியும் கூட பரீட்சைக்குரிய ஒழுங்குகளை அதற்குரிய மேற்பார்வையாளர்கள் கவனிக்காததையிட்டு சுட்டெண் தேடி அலைந்த பரீட்சார்த்திகள் விசனம் தெரிவித்தனர். இனி மேலாவது இது போன்ற தவறுகள் திருத்தப்படுமா? மேற்பார்வையாளர்கள் சிரத்தை எடுப்பார்களா?

ஏ.கலா, மட்டக்களப்பு.


வெளிவந்துவிட்டது...

வெற்றிக்கனி
ஆண்டு 5
இதழ் 7, இதழ் 8
கல்வி மஞ்சரி O/L
EFFECTIVE ENGLISH WITH GRAMMAR 1 & 2

**BRIGHT BOOK CENTRE**
S-27, First Floor, P.O. Box - 162
Colombo Central Super Market Complex
Colombo - 11. T.P. 434770


# விளம்பரப் பகுதி


## இசை இன்பம்

மிகப் பழைய, இடைக்கால, புதிய தமிழ், ஹிந்தி திரை இசைப் பாடல்களையும், மும்மத பக்தி கீதங்களையும் நவீன முறையில் ஒலிப்பதிவு செய்து கொள்ளுங்கள். V.P.P வசதி உண்டு.

காயத்திரி மியுசிக் சென்டர்
81 1/20 குமார வீதி,
புறக்கோட்டை.
தொ.பே:447312

## தேவை

ஆங்கிலம் / சிங்கள மொழி ஆற்றலுடைய க.பொ.த சித்தியடைந்த பெண் விற்பனையாளர் தேவை. கல்வித் தகைமையுடன் விண்ணப்பிக்கவும்

**BRIGHT BOOK CENTRE**
P.O. Box - 162
Colombo

## BRIGHT ன் தபால் மூலம் கல்வித்திட்டம்

மூன்றே மாதங்களில்
ஆங்கிலம்/சிங்களம் பேச, எழுத,
வாசிக்க கற்றுத்தரப்படும்
விபரங்களுக்கு கீழ்காணும்
விண்ணப்பத்துடன் தொடர்பு கொள்க

பெயர்: ..............................
விலாசம்: ..............................

**BRIGHT TRAINING CENTRE**
S-27, FIRST FLOOR. P.O. BOX. 162.
COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX.
COLOMBO 11. TEL: 434770



33 வருட கடும் சேவைக்கு பின் உலக மாந்திரீக சக்ரவர்த்தி என பட்டமெடுத்த எமது நிர்வாகத்தில் தெட்டத்தெளிவான சேவை என்னவென்றால் மலையாள மாந்திரீகமோ அல்லது ஜோதிட ஆயுள் கணிப்போ வீட்டுக்கு வீடு வாசல்படி உண்டு. பல மொழிக்கு ஒப்ப எனது நிர்வாகத்தில் எத்தனையாம் திகதி எத்தனை மணிக்கு என்ன கிழமை உங்கள் உந்தன் விடயம் சரிவரும் என்று கருதி உறுதிமுத்திரையுடன் வாங்கும் பணத்திற்கு அத்தாட்சி வழங்கி பெயர் வாங்கிக் கொண்டிருப்பது அரசு அங்கிகாரம் பெற்ற திரு.பி.கே.சாமி (ஜே.டி.ஜீ.என்)ஜே.பி.யின் பி.கே.சாமி அசோசியட் தனியார் நிறுவனம் உண்மை பொய் அறிய நேரில் வந்து காணலாம் திரு.பி.கே.சாமி அவர்களை காலை ஆறு முதல் மாலை 2.00 மணிவரையே சந்திக்கலாம். நேரில் மட்டுமே அவரின் ஆலோசனை பெறலாம். தெளிவுரையாளர் மூலமே தொலைபேசியில் பேசலாம். ஆலோசனைக் கட்டணம் ரூபா 250. வெளிநாட்டவர்கள் ஆலோசனைக் கட்டணம் ரூபா 2000. அவர் அவர் கையிலேயே மாந்திரீகப் பார்சலை ஒப்படைக்க அவர்களது உண்மையான தொலைபேசி சரியான இலக்கத்தை குறிப்பிட்டு அங்கத்தவர் கட்டணம் 2000 ரூபா அனுப்பினால், அவர் இல்லத்திலேயே அவர்களது கையிலேயே எமது பிரதிநிதி பார்சலை ஒப்படைப்பார். வெளிநாட்டவரோ உள்நாட்டவரோ மலையாள மாந்திரீக சக்தி உதவி தேவையென்றால் உண்மை சேவையான எமது ஸ்தாபனத்திற்கு வருகை தரலாம்.

**நேரிலோ, அல்லது தொலைபேசியிலோ, கடிதத்தொடர்புகளுக்கோ**

திரு.பி.கே.சாமி (J.D.G.A.N) JP
ஸ்ரீ துர்க்காதேவி ஸ்தானம்,
162, கொட்டாஞ்சேனை வீதி,
கொழும்பு-13.

தொலைபேசி வரிகள்:- 01-342463, 342464, 344432, 344431.
நுவரெலியா:- 052 3093, 2508, 3570, 3336.

இன்னும் உண்மை விளங்க எமது விளம்பர சேவை 'ஜோதிடம் பார்ப்போம்' நிகழ்ச்சி பிரதி சனிக்கிழமைதோறும் காலை 10.45 மணிக்கு FM 99இல் நடைபெறும் கேட்டு உண்மை அறியலாம்.

## மனோதத்துவ வைத்தியம்
## (GENERAL PSYCHIATRIST)

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை மனோதத்துவ சிகிச்சை மூலம் நீக்கி, உங்களை நீங்களே வெற்றி கொள்ள பிரபல மனோதத்துவ நிபுணர் டாக்டர் ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்.

இளம் சமுதாயத்தினர் மெலிந்து, சக்தியிழந்து, ஞாபக மறதி, பயம், நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், பீதி, நித்திரையின்மை என்று தன்னம்பிக்கை இழக்கக் காரணமான தீய பழக்கங்களை மனோதத்துவ சிகிச்சை மூலம் உடனே நிறுத்தி புத்துயிர் அளிக்கப்படும்.

தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும், 85% தாழ்வு மனப்பான்மையே காரணம் என்பதை 11/2 மணித்தியாலத்தில், தான் வீரியம் உள்ள ஆண்மகனாகி விட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்த பின்னரே பணம் பெறப்படும்.

மனநிலை பாதிப்புக்கள், மன நோய்கள் "ஹிஸ்டீரியா" ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளனர். மற்றும் ஆஸ்மா, தலையிடி, வாதம், பயோரியா, வெள்ளைபோதல், குழந்தைப்பேறு இன்மைக்கும் தீர்க்கமுடியாத வியாதிக்கும் மருந்து உண்டு.

மார்ச் 17 முதல் 28 வரை **Dr.P. ARUMUGAM,** AHMED TOURIST INN. BANG BANG BULDING NO: 10, RECLAMATION ROAD, (ENTRANCE BANKSHALL ST.,) COLOMBO 11. T.P. 436383, 436390 ஏப்ரல் **3 ,4** Dr. முகைதீன் டிஸ்பென்ஸரி ஒட்டமாவடியிலும், ஏப்ரல் **7, 8, 9** கல்முனை T.M.M. பாமசியிலும், மற்ற நாட்களில் **DR. P. ARUMUGAM** No: 50, TISSA WEERASINGAM SQ., BOUNDRY ROAD, BATTICALOAவிலும் சந்திக்கலாம்.

வெளி நாட்டில் இருப்பவர்கள் தங்களின் தாம்பத்திய குறைபாடுகளுக்கு விரிவான கடிதத்தொடர்பு கொண்டு மனோதத்துவ சிகிச்சையைப் பதிவு நாடாமூலம் பெற்றுச் சுகமாக்கலாம்.

www.padippakam.com

# தலைநகர்வரை நீளும் புலிகளின் கடல் வழி

**பு**லிகளது ஆயுதக் கப்பல் வந்து கொண்டிருக்கிறது. பாதுகாப்பு வட்டாரங்களுக்கு கிடைத்துள்ள தகவல் அது.

அதனையடுத்து வடக்கு-கிழக்கு கடற்பகுதிகளில் இலங்கை கடற்படையினர் தமது கப்பல்களின் ராடர் திரைகளை வைத்த கண் வாங்காமல் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள்.

'ஒப்பரேஷன் வலைவீச்சு' என்று பெயர் சூட்டி, கடற்பரப்பில் புலிகளது கப்பல் வருகிறதா என்று தேடிக்கொண்டிருக்கிறார்கள்.

இந்திய கடற்படையின் உதவியும் 'ஒப்பரேஷன் வலைவீச்சுக்கு' கிடைத்துக் கொண்டிருப்பதாக தகவல் ஒன்று தெரிவிக்கிறது.

புலிகளின் இராணுவபலம் கட்டுப்படுத்த முடியாதளவுக்கு வளர்ந்துவிடக் கூடாது என்பதில் இந்திய அரசுக்கும் அக்கறை இருக்கிறது.

புலிகளோடு நட்புறவு நிலவினால்கூட தம்மைமீறி புலிகள் ஆயுதங்கள் பெறுவதையோ, இராணுவரீதியில் ஊதிப் பெருப்பதையோ இந்தியா விரும்பாது.

இப்போது புலிகளோடு பகைமையும் இருப்பதால், புலிகளுக்கு வெளியில் இருந்து ஆயுதங்கள் வருவதை தடுப்பதில் இந்தியாதான் முன்வரிசையில் நிற்கும்.

புலிகளது வளர்ச்சி இந்தியாவுக்குள்ளும் அச்சுறுத்தலாக அமையும் என்பதால் புலிகளுக்கு வரும் ஆயுதங்களை தனக்கெதிரான சக்திக்கு கிடைக்கப் போகும் ஆயுதங்கள் என்ற கண்ணோட்டத்தோடு தான் இந்தியா நோக்குகிறது.

எனவே-ஒப்பரேஷன் வலைவீச்சுக்கு இந்தியாவின் உதவியும் கிடைத்துக் கொண்டிருக்கும்.

புலிகளைப் பொறுத்தவரை உடனடியாக தேவைப்படுவது கனரக ஆயுதங்கள் தான்.

யாழ்-குடாநாட்டுக்குள் தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபடுவது ஒரு புறமிருக்க, வன்னி பெரு நிலப்பரப்பில் படையினர் பாரிய நடவடிக்கைகளில் ஈடுபட்டால் எதிர்த்தாக்குதல் தொடுப்பதற்கும் கனரக ஆயுதங்கள்தான் அவசியம்.

வன்னி நிலப்பரப்பில் பாரிய நடிவடிக்கைகளில் படைத்தரப்பு ஈடுபடுமானால் புலிகளுக்கு பலத்த பாதகங்கள் ஏற்படும்.

வன்னிதான் பாதுகாப்பான பகுதி என்று மக்களுக்கு நம்பிக்கையூட்டியதும் பொய்த்துவிடும்.

யாழ். குடாநாடு முழுவதையும் படைத்தரப்பு தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தால்கூட வன்னியில் இருந்து புலிகளது அணிகள் உள்ளே ஊடுருவிக்கொண்டே இருக்கும்.

யாழ்-குடாநாட்டையும் கட்டுப்பாட்டில் கொண்டுவந்து, வன்னி நிலப்பரப்பையும் கட்டுப்பாட்டில் வைத்திருக்குமளவுக்கு படத்தரப்பின் பலம் இருக்கப் போவதில்லை.

ஆனால், வன்னி நிலப்பரப்பில் முன்னேறிச் சென்று தாக்கிவிட்டு முகாமுக்கு திரும்பும் நடவடிக்கைகளில் படைத்தரப்பு எதிர்காலத்தில் ஈடுபடக்கூடும்.

கிளிநொச்சியில் பாரிய முகாம் ஒன்றை நிறுவும் திட்டமும் படைத்தரப்புக்கு இருக்கிறது.

படையினரின் திட்டங்களை முறியடித்து வன்னி பெரு நிலப்பரப்பை பூரண கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டுமானால் புலிகளுக்கு இரண்டு வழிகள் இருக்கின்றன.

ஒன்று; படைத்தரப்பு நடவடிக்கைகளுக்கு தயாராக முன்னரே தேடிச் சென்று தாக்குவது.

அதாவது, ஆனையிறவு, பூநகரி, வெற்றிலைக்கேணி முகாம்கள்மீது தாக்குதல் நடத்துவது. அதில் ஒரு முகாமை என்றாலும் முற்றாக அழிப்பது.

அப்படியானால்தான் படைத்தரப்பு தற்காப்பு யுத்தக் கட்டத்தோடு நின்று கொள்ளும். புலிகளை தேடி முன்னேறும் நடவடிக்கையில் ஈடுபட முனையாது.

இரண்டாவது வழி; படைகள் முன்னேறும்போது பாரிய பதில் தாக்குதல் யுத்தத்தில் ஈடுபடுவது.

இந்த இரண்டு உபாயங்களுக்கும் கனரக ஆயுதங்கள் தேவை. ஆட் பலமும் தேவை.

தற்போது புலிகளிடம் பொதுமானளவு துப்பாக்கிகள், ரவைகள், குறும்தூர தாக்குதலுக்கு தோதான ஆயுதங்கள் என்பவை இருக்கின்றன.

துப்பாக்கிகளைப் பொறுத்தவரை புலிகள் இயக்கத்தில் உள்ள உறுப்பினர்களது தொகையைவிட மூன்று மடங்கு அதிகமான துப்பாக்கிகள் இருக்கின்றன.

ஆர்.பி.ஜி ரக லோஞ்சர்களும், கைக் குண்டுகளும் தாராளமாக உள்ளன. வெடி மருந்துகளைப் பொறுத்தவரை அவற்றை பெருந்தொகையாகப் பாவித்தால் பற்றாக் குறை ஏற்படலாம்.

தற்போது நவீனரக வெடிமருந்துகள் வெளிநாடுகளில் கிடைக்கின்றன. குறைந்தளவு வெடிமருந்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய சக்தி கொண்டவை.

சமீபத்தில் முல்லைக் கடலில் தாக்கப்பட்ட புலிகளது ஆயுதக் கப்பலில் வெடிமருந்துகளும் பெரியளவில் இருந்திருக்கின்றன.



புலிகளுக்கு வெடிமருந்தின் தேவை இருப்பதைத்தான் கப்பலில் கொண்டுவரப்பட்ட பெருந்தொகையான வெடிமருந்துகள் மூலம் அறியமுடிகிறது.

கரும்புலித்தாக்குதல்கள், குண்டுத் தாக்குதல்கள் என்பவற்றின்போது பெருந்தொகையான வெடிமருந்துகளை புலிகள் பயன்படுத்தியுள்ளனர்.

எனவே-வெடிமருந்துகளின் தேவை புலிகளுக்கு ஏற்படவே செய்யும்.

முகாம் தாக்குதல்கள், படையினர்மீதான தாக்குதல் போன்றவற்றில் வெடிமருந்துகள் புலிகளுக்கு கிடைப்பதில்லை.

தற்போது தமிழ் நாட்டிலிருந்துதான் வெடிமருந்துகள் புலிகளுக்கு ஓரளவு கிடைத்துவருகின்றன. இந்தியக்கடற்படையின் கண்களுக்குள் சிக்காமல் தற்போது கூட புலிகளது அதிவேக விசைப்படகுகள் இந்தியக்கரையோரங்களுக்கு சென்று திரும்புகின்றன.

சமீபத்தில் படை அதிகாரி ஒருவர் கொழும்பில் இருந்து விமானம் மூலமாக பலாலி இராணுவ முகாமுக்கு சென்று கொண்டிருந்தார்.

விமானத்திலிருந்து கடல் பரப்பை கவனித்தார் அதிகாரி. அங்கு 20க்கு மேற்பட்ட அதிவேக விசைப்படகுகள் இந்திய கடற்பகுதியில் இருந்து வந்து கொண்டிருப்பது தெரிந்தது.

கப்பல்கள் என்றால் தப்பியோட முடியாது. அதிவேக விசைப்படகுகளால் நீரைக் கிழித்துக்கொண்டு ஓடித்தப்பிவிட முடியும்.

எனினும் இந்தியாவில் நவீனரக வெடிமருந்துகளை பெரியளவில் பெறமுடியாது. அதனால் வெளிநாட்டு கறுப்பு சந்தைகளில் தான் புலிகள் கொள்வனவு செய்ய வேண்டும். அவற்றை கப்பல்கள் மூலமாகத்தான் கொண்டுவர வேண்டும்.

ஆக, எப்படிப்பார்த்தாலும் புலிகளது அடுத்த கட்ட தயாராதலுக்கு கடல்வழிப் பாதையின் உபயோகம் மிக முக்கியமானது.

ஹொரிசோன் கப்பல் தாக்கப்பட்டதால், மற்றொரு கப்பலை புலிகள் தருவித்தாக வேண்டும்.

ஆனால், அடுத்துவரும் கப்பலை இலங்கை, இந்திய கடல் எல்லைக்குள் கொண்டுவராமல் வெளியே வைத்து ஆயுதங்களை இறக்கிக்கொள்ள புலிகள் திட்டமிடலாம் என்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் சந்தேகப்படுகின்றன.

இந்திய- இலங்கை கடற்பரப்புக்கு வெளியே கப்பலை நிறுத்திவிட்டு; அதிவேக விசைப் படகுகள் மூலமாக ஆயுதங்களை முல்லைத்தீவுக்கு புலிகள் கொண்டு செல்லலாம் என்பதுதான் அந்த சந்தேகத்துக்கு காரணமான ஊகம்.

எனவே- கடற்பரப்பின் மூலமாக புலிகள் தமது கரங்களை பலப்படுத்த நினைப்பதால், இலங்கை கடற்படையினரும் கடற்பரப்பில் தமது பலத்தை உயர்த்துவதில் குறியாக இருக்கின்றனர்.

நவீனரக போர்க் கப்பல்கள், ரோந்துப் படகுகள் என்பவற்றை கடற்படையினர் கொள்வனவு செய்து வருகின்றனர்.

எனினும், சகல சண்டைகளிலும் போலவே கடற்சண்டையிலும் நவீனரக போர் கப்பல்கள் மட்டும் வெற்றி தோல்வியை தீர்மானிக்கப் போதுமானவையல்ல.

எந்நேரமும் விழிப்பாக இருந்து புலிகளது நடமாட்டங்களை கடலில் கவனிப்பது என்பது சிரமமான விஷயம்.

ஒரு மாதகாலம் விழிப்பாக இருந்து பார்க்கலாம். பின்னர் தானாகவே ஒரு அலட்சியம் ஏற்பட்டுவிடும். அந்த நேரம் பார்த்து கடற்கரும்புலிகள் தாக்குவார்கள். அதன்பின்னர் மேலும் நவீனரக கப்பல்கள் வேண்டும் என்று கடற்படையினர் கோரிக்கை வைக்கவேண்டியிருக்கும்.

ஆனால், ஹொரிசோன் கப்பலைத் தாக்கியது போல, தகவல் கிடைத்து சண்டைக்கு தயாராகச் செல்லும் சந்தர்ப்பங்களில் நவீனரக போர்ப் படகுகள், கப்பல்கள் என்பவை கடற்படையினருக்கு கைகொடுக்கின்றன.

கடற்படையினர் தயார் நிலையில் சண்டையை எதிர்ப்பார்த்து செல்லும் போது கடற்புலிகள் வெற்றிபெறுவது கடினம்தான். ஏனெனில் கடற்புலிகளிடம் நவீனரக போர் படகுகள் கிடையாது.

அதிவேகமான விசைப்படகுகளை புலிகள் தாங்களே கட்டியமைத்திருக்கிறார்கள். ஆனால் அவற்றால் நவீன ரக சண்டைப் படகுகளை நேரடிச் சமர்களில் எதிர்கொள்ள முடியாது. அதனால்தான் கடற்கரும்புலித் தாக்குதல்களை கடற்புலிகள் தமது முக்கிய தாக்குதல் முறையாக பயன்படுத்துகின்றனர்.

கடற்புலிகளது பலம் நேரடிச் சமரில் மேலோங்கக்கூடியதாக இருந்தால் ஹொரிசோன் ஆயுதக் கப்பலை புலிகளால் காப்பாற்ற முடிந்திருக்கும்.

**நாரதர்**

ஆனாலும், கடற்புலிகளது தாக்குதல்கள் கடற்படையினர் மத்தியில் அச்சுறுத்தலை ஏற்படுத்தியிருப்பது உண்மை.

என்னதான் நவீனரக ரோந்துப் படகுகள் கடற்படையினரிடம் இருந்தாலும், இலங்கையின் கடற்பரப்பு கடற்படையினரின் பூரண கட்டுப்பாட்டுக்குள் இல்லை என்பதும் உண்மை.

புலிகளது பிரதான தளமாக கருதப்பட்ட யாழ்ப்பாணத்தில் படையினர் கொடி நாட்டிய போதும், புலிகளின் கொடி வடக்கில் பறந்து கொண்டுதான் இருக்கிறது.

யாழ் குடாநாட்டில் தரைப்பகுதியை சுற்றி படைத்தரப்பு இராணுவ வேலியைப் போட்ட போதும், புலிகளின் தலைமை யாழ் குடா நாட்டைவிட்டு வெளியேறி வன்னியில் தளம் அமைத்துள்ளது.

வடக்கு-கிழக்கை தரைப்பகுதி மூலமாக படைத்தரப்பு பிரித்துள்ளபோதும், கிழக்கில் உள்ள புலிகளும், வடக்கில் வன்னியில் உள்ள தலைமையும் தொடர்பும், விநியோகங்களும் தமக்கிடையே நடத்திக்கொண்டிருக்கின்றன.

இந்தியா புலிகளை தடைசெய்துள்ளது. ஆனால் இந்தியாவில் இருந்து புலிகள் தமக்கு தேவையான பொருட்களை பெற்றுக் கொண்டுதான் இருக்கின்றார்கள்.

இத்தனைக்கும் காரணம் கடல்வழிப் பாதைதான்.

**எக்ஸ்ரே ரிப்போர்ட்**

கடல்பாதையை உபயோகிப்பதில் புலிகளுக்குள்ள திறன், கடல் அனுபவம் வாய்ந்த படகோட்டிகள், கடற்புலிகளது தாக்குதல்கள், கடற்கரும்புலிகளது உருவாக்கம் என்பவை தான் யுத்தத்தின் இன்றைய கட்டத்தில் புலிகளுக்கு மாபெரும் உபயோகமாக உள்ளன.

வடக்கு-கிழக்கில் மட்டுமல்ல, தலைநகரத் தாக்குதலுக்கு தேவையான வெடிமருந்துகளையும் கடல்வழிப்பாதை மூலமாகவே புலிகள் அனுப்பியிருக்கின்றனர்.

வவுனியா வழியாக லொறிகள் மூலமாக வெடிமருந்துகளையோ ஆயுதங்களையோ தற்போது கொண்டுவர முடியாது.

வடக்கிலிருந்து வரும் லொறிகள் தாண்டிக்குளம் தாண்டிவர அனுமதியில்லை. படையினர் முன்பாக பொருட்கள் இறக்கப்பட்டு, வவுனியாவில் இருந்து செல்லும் வேறு லொறிகளில் அந்தப் பொருட்கள் ஏற்றி எடுத்து வரப்படுகின்றன. நிவாரணப் பொருட்களுக்கும் அதே நிலைதான்.

எனவே லொறிகளுக்குள் மறைத்து தாண்டிக்குளத்தைத் தாண்டி வெடிமருந்துகள் கொண்டுவருவது கடினமாகிவிட்டது.

அதனால் கடல்வழிப்பாதையை பயன்படுத்தியே புலிகளது விநியோகம் தலைநகரில் உள்ள அவர்களது மறைவிடங்களுக்கு அனுப்பிவைக்கப்படுகிறது.

நீர் கொழும்பு, உடப்பு கடற்பகுதிகள் மூலமாக புலிகளது விநியோகங்கள் நடப்பதாக சந்தேகித்து அங்கு கண்காணிப்பு பலப்படுத்தப்பட்டது.

உடனே நேரடியாக கொழும்புக் கரையோரமான முகத்துவாரத்துக்கே தமது படகை அனுப்பி வெடிமருந்து இறக்கி விட்டார்கள புலிகள்.

சமீபத்தில் கொழும்பு மட்டக்குளிப் பகுதியில் வெடிமருந்துகள் கைப்பற்றப்பட்டன வல்லவா? முகத்துவாரம் கடற்கரை மூலமாகவே அவை வந்து சேர்ந்துள்ளன.

இலங்கை நாற்புறமும் கடலால் சூழப்பட்ட தீவு என்பது முன்னர் அழகுக்கு உரிய விஷயமாக இருந்தது.

இப்போது அதுவே ஆபத்துக்குரிய விஷயமாகிவிட்டது.

தரைப்பாதைகளில் என்றால் தடை அரண்கள் போட்டு வாகனங்களை நிறுத்தி சோதனையிடலாம்.

கடல்பாதையில் எவ்வளவு விழிப்பாக இருக்க நினைத்தாலும், ஏதாவது ஒரு வழியாக அதிவேக விசைப்படகு சீறிக்கொண்டு பறந்துவிடும். பரந்த கடற்பரப்பில் கண்காணிப்பு என்பது லேசுப்பட்ட வேலையல்ல.

ஆக, நீலக் கடல் இப்போது யுத்தக் கோலம் பூண்டுள்ளது.

சமீபகாலமாக கடற்புலிகள் தாக்குதல் எதிலும் ஈடுபடவில்லை.

யாழ்ப்பாணத்தில் படையினர் நிலை கொள்ள முன்னரே கடற்புலிகளது இரகசிய தளம் முல்லைத்தீவில்தான் இருந்தது.

கிட்டத்தட்ட குட்டித் துறைமுகம் போலவே வைத்திருக்கிறார்கள்.

'ஹொரிசோன்' கப்பல் தாக்கப்பட்டதுக்கு பதிலடியாக கடற்புலிகள் தாக்குதல் ஒன்றை நடத்தக்கூடும் என்பது எதிர்பார்ப்பு.

பாரிய இழப்புகளுக்கு பதிலடியில் ஈடுபடுவது மூலம் தமது அணிகளை உற்சாகப்படுத்துவது பிரபாவின் வழக்கம்.

எனவே கடற்புலிகள் தற்போது அமைதியாக இருப்பது, பதுங்குவது பாய்வதற்கு என்னும் அர்த்தத்தில்தானே?!

---

**பௌ**த்த மதகுருமார்களை ஐந்து தமிழ் கட்சிகள் ஆவலோடு சந்தித்து வருகின்றன.

மல்வத்தை பீடாதிபதியையும் சந்தித்துப் பேசியிருக்கின்றன.

கிட்டத்தட்ட அரைமணிநேரம் தமிழ் கட்சி பிரதிநிதிகள் இனப்பிரச்சனையின் வரலாற்றைச் சொன்னார்களாம். நீண்ட விளக்கம்தான்.

கதைபோல கேட்டுக் கொண்டிருந்து விட்டு பீடாதிபதி கேட்டாராம் ஒரு கேள்வி;

"தமிழ் மக்களுக்கு என்ன பிரச்சனை இருக்கிறது?" விளக்கிய பிரதிநிதிகள் திகைத்துப் போனார்கள். விடிய விடிய ராமர் கதை. விடிஞ்சபின்னர் ராமர் சீதைக்கு என்ன முறை என்று கேட்டால், கேட்பவரை முறைக்கலாம். நியாயம்தான். பீடாதிபதியை முறைப்பது முறையல்ல என்பதால் தமிழ் கட்சிகள் பாடு திண்டாட்டம்தான்.

கொழும்பில் பௌத்த மதகுருமார்கள் கூட்டத்தில் அதிகாரப் பரவலாக்கல் வழங்கினால் சிங்கள மக்கள் கடலில்தான் குதிக்க வேண்டும் என்று கூறப்பட்டதும் மற்றொரு அருமையான கண்டுபிடிப்பு.

பௌத்த மதகுருமார்களது கூட்டத்தில் வெளியாகியுள்ள கருத்துக்கள் ஒவ்வொன்றும் பிரபாகரனுக்கு உற்சாக மாத்திரைகள்தான்.

இத்தனை தூரம் வந்த பின்னரும் "தமிழருக்கு என்ன பிரச்சனை?" என்று கேட்பவர்களோடு எந்த முகத்தோடு பேசுவது?

புலிகளை முடித்துவிட்டு இனப்பிரச்சனை தீர்வு தொடர்பாக ஆராயலாம் என்று பௌத்த குருமார்கள் சிலர் முன்னர் சொல்லியிருந்தனர்.

அதன் அர்த்தம் என்ன என்பது இப்போது புரிகிறது.

ஒரு வேளை புலிகள் அழிக்கப்பட்டால் "தமிழ் பேசும் மக்கள் என்றால் யார்?" என்று கேட்கத் துணிவரோ என்று சாதாரண தமிழ், முஸ்லீம் மக்கள் நினைக்கத் தொடங்கியிருப்பதை பரவலாக அறிய முடிகிறது.

தமிழ் மக்களது மௌனம் கலைய வேண்டும், புலிகளுக்கு எதிராக பேச வேண்டும் என்கிறார் ஜனாதிபதி.

பௌத்த குருமார்களது நிலைப்பாடுகள் தமிழ் பேசும் மக்களது மனங்களைப் புண்படுத்தியுள்ளன. எனவே, பௌத்த குருமார்களது கருத்துக்கள் தொடர்பாக ஜனாதிபதியும், அரசாங்கமும் முதலில் தமது மௌனத்தைக் கலைக்க வேண்டும்.

இன்றைய தேதியில் தென்னிலங்கையில் பிரபாகரனுக்கு உதவுவது பௌத்த மதகுருமார்கள்தான். "புலிகள் இல்லையென்றால் என்னாகும்?" என்று ஒவ்வொரு தமிழ் பேசும் நபரையும் சிந்திக்கவைப்பது பௌத்த குருமார்கள் சிலர்தான்.

பௌத்த விகாரை வளாகங்களுக்குள் வெடிகுண்டு வாகனத்தை புலிகள் மறைத்து வைத்ததை படையினர் கண்டு பிடித்தனர்.

ஆனால், பௌத்த மதகுருமார் சிலர் இனவாதக் கருத்துக்கள் மூலம் புலிகளுக்கு தினமும் உதவிக் கொண்டேயிருக்கின்றனர். கண்டு பிடித்தாலும் தடுத்துநிறுத்த முடியாத விஷயம் அது.

---

## அதிரடி அப்பாத்துரை



**வ**வுனியாவில் இருந்து கொழும்பு வர கடும் கட்டுப்பாடு. ஏன் எண்டு கேட்டால், பாதுகாப்பு காரணம் எண்டு சொல்லுகினம். பசையுள்ள சிலர் நோட்டுக்களை நீட்டிப் போட்டு சுலபமாக வரமுடியுதல்லோ, அதுக்கு என்ன செய்மிறதாம்? தாமதங்களும் கெடுபிடிகளும் பலர் வாட சிலர் உழைக்கத்தான் வசதி பாருங்கோ. யாருக்கு விளங்குது,

**ம**தபீடத்தவர்களை தமிழ் கட்சிகள் சந்திச்சவையல்லோ. "தொண்டை வரள விளக்கம் கொடுத்ததுதான் வீணாகிப் போச்சு, அதைவிடுங்கோ ஒரு கிளாஸ் பச்சைத் தண்ணீர் கூட தராமல் அனுப்பிப் போட்டினம்" எண்டு குறைப்பட்டார் ஒரு பிரமுகர். பீடத்தில் சாதி பார்க்கும் பழக்கம் உண்டாம். பிரதிநிதிகளிடம் சாதி கேட்க முடியாது என்பதால் தண்ணீர்கூட கொடுக்கப்படவில்லையாம். இனப்பற்று, இனத்துக்குள்ளேயே சாதிப்பற்று, மொத்தத்திலை ஒரு பற்றையும் அவை விடேல்லையாக்கும்.

**பீ**டத்தவர்களுக்கு ஆங்கிலத்தில் தமிழ் கட்சி பிரதிநிதிகள் விளக்கம் கொடுத்தவையாம். பத்திரிகையாளர்களும் சந்திப்பு நடைபெறும் இடத்தில் குறிப்பு எடுக்க அனுமதிக்கப்பட்டவையாம். பிரதிநிதிகள் ஏதோ சொல்ல அதை தலைகீழாக விளங்கி சில நிருபர்கள் செய்தி போட்டவையாம். வடக்கில் ஒரு சபை. கிழக்கில் மற்றொரு சபை எண்டு பிரதிநிதிகள் சொன்னதாக தலைகீழான செய்தி வர, தமிழ் கட்சி வட்டாரங்களில் பரபரப்பு. உடனடியாக மறுப்பறிக்கை விடப்பட்டதாம். கட்சிகளின் நிலைப்பாடுகள் தெரியாதளவுக்கு பத்திரிகையாளர்கள் இருக்கலாமோ? எண்டு கேட்டார் ஒரு பிரமுகர். சரியான கேள்விதானே!

**தீ**ர்வு யோசனையை தமிழ் கட்சிகள் ஆதரிக்க வேண்டும் என்று 'அயலகம்' விரும்புவதாகத் தகவல். தலைநகரில் உள்ள அயலக தூதரக வட்டாரம் தீர்வு யோசனைக்கு சார்பாக பேசுவதாகக் கேள்வி.

**ரெ**ண்டு எழுத்துக்காரரை பேச்சுக்கு கொண்டுவரும் முயற்சியில் இங்குள்ள சர்வதேச நிறுவனம் ஒன்று ஈடுபட்டிருக்குதாம். நிறுவனப் பிரமுகர் ஒருவர் தமிழ் கட்சிகளையும் சந்தித்து பேசினவராம். ரெண்டு எழுத்தாருடன் பேச வேண்டுமானால் யாருடன் பேசுவது எண்டு கேட்டாராம். 'மூலவர் ஒருவர் மட்டும்தான். அவரின்றி யாரும் அவர்களது நிலைப்பாடு அறியாரய்யா' என்று சொல்லப்பட்டதாம்.

**வ**சந்தமான ராஜாவின் பிரசார வேகத்தால் பிரான்ஸ் திலகத்தார் கூட கலங்கிப் போயிருக்கிறாராம். ரெண்டு எழுத்தாரின் வெளிநாட்டு பிரதிநிதியாக இருந்து திலகத்தார் செய்ய முடியாத விஷயங்களை வசந்தமானவர் செய்து முடிச்சுப்போட்டார். தலைவர் தன்னைப் பற்றி குறைவாக நினைப்பாரோ என்று கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறார் திலகமானவர். எண்டாலும் புத்திசீவித்தனமானவர்களை ரெண்டு எழுத்து தலைவர் பயன்படுத்துவாரே தவிர, பதவி கொடுக்கமாட்டார். அதுதான் அவரது விழிப்புக் குணம்.

**கொ**ழும்பில் கடை ஒன்றில் சிக்கிய ஆயுதங்கள் புகையிலைகளுக்குள் மறைத்து பக்குவமாக கொண்டுவரப்பட்டதாம். பொருட்கள் மாட்டினாலும் மெயின் மாட்டுப்படேல்லையாம்.

**சீ**மெந்து விவகாரத்திலை சம்பந்தப்பட்ட அமைச்சர்தான் வடக்கு புனர்வாழ்வு சமாச்சாரங்களுக்கும் பொறுப்பானவர். 'வரமாட்டேன் எண்டு பாகிஸ்தானுக்கு ஓடிவிட்டார்' எண்டு 'ராவய' பத்திரிகை செய்தி போட்டிருக்குதாம். புத்தளம் விவகாரத்திலை தொலைபேசி மூலம் நடந்த பேர உரையாடலை பச்சைக் கட்சிக்காரர் பதிவு செய்துவைத்திருக்கினம் எண்டு கேள்வி. நம்பிக்கையில்லா தீர்மானமும் கொண்டுவரப்போகினம். குறிப்பிட்ட அமைச்சர்மீது அவரது அணிக்குள் பலருக்கே காய்ச்சல்தானாம்.

**பா**ம்பாட்டிச் சித்தருக்கு பாவையர்மீது ஏன் இந்த வெறுப்பு? பாடலைப் பாருங்கோ.

"வெயில் கண்ட மஞ்சள் போன்ற மாதர் அழகை
விரும்பியே மேல்விழுந்து மேவுமாந்தர்
ஒயில் கண்டே இலவுகாத்து ஓடும் கிளிபோல்
உடல் போனால் ஓடுவாரென்று ஆடுபாம்பே."


படிப்பகம்

www.padippakam.com

70

# ஈழம் முத்திரையும் தபால் சேவையும்

**வீடியோ படம்**

**1986** மே மாதம் 5ம் திகதி. பிரிட்டன் தொலைக்காட்சியில் வீடியோ படம் ஒன்று ஒளிபரப்பப்பட்டது.

அரைமணிநேரம் மட்டுமே ஒளிபரப்பப்பட்ட அந்தப் படத்திற்கு பெயர்:

**'குழப்பம் நிறைந்த சொர்க்கபூமி'**

படத்தை தயாரித்தவர் ஒரு பெண் நிருபர்: பெயர் அலிசன் போர்டியஸ்.

இலங்கைக்கு வந்து யுத்தப்பிரதேசங்களுக்கு விஜயம் செய்து கிட்டத்தட்ட 17 கஸட் ஃபிலிம்களில் படம்பிடித்தார்.

அலிசனோடு அவரது நண்பர் ரிம் கூப்பரும் இலங்கை வந்திருந்தார்.

யுத்தப்பிரதேசங்களில் வெளிநாட்டு நிருபர்கள் தகவல்களைத் திரட்டுவதை அரசாங்கம் விரும்பவில்லை.

அலிசன் போர்டியஸையும், கூப்பரையும் பொலிசார் கைதுசெய்தனர். இருவரையும் ஏற்றிச் சென்ற டாக்ஸி சாரதி நையப் புடைக்கப்பட்டார்.

அந்தக் குழப்பத்தில் அலிசன் போர்டியஸ் ஒரு காரியம் செய்தார்.

தனது கமராவிலிருந்த கஸட் ஃபிலிமை கழற்றித் தனது பொக்கற்றுக்குள் போட்டுக்கொண்டார்.

பொலிஸ் நிலையத்தில் இருவரும் விசாரிக்கப்பட்டனர்.

தாங்கள் இருவரும் உல்லாசப் பயணிகள் என்று சாதித்தனர். வெளிநாட்டவர்கள் என்பதால் வேறுவழியில்லாமல் இருவரையும் விடுதலைசெய்து அனுப்பியது பொலிஸ்.

அதன்பின்னர் தொடர்ந்து தங்கள் வேலையைக் காட்டினார்கள் அலிசன் போர்டியசும், ரிம் கூப்பரும்.

அதன்பயனாகத்தான் 'குழப்பம் நிறைந்த சொர்க்கபூமி' பிரிட்டன் தொலைக்காட்சியில் ஒளிபரப்பானது.

பிரிட்டனிலுள்ள இலங்கைத் தூதரகம் அரண்டு போனது. அந்தப் படத்தில் 'காண்பிக்கப்பட்டவை உண்மையில்லை' என்று தூதரக அறிக்கை தெரிவித்தது.

'தி கஸட்' என்ற பிரிட்டிஷ் பத்திரிகையில் அலிசன் போர்டியல் கட்டுரை ஒன்று எழுதியிருந்தார்.

அக்கட்டுரையில் ஒரு இடத்தில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

"ஆயுதங்கள், சாதனங்கள் வசதிக் குறைவாக இருந்தாலும் தமிழ் தீவிரவாதிகள் தொடர்ந்து போராடுவதற்கு உறுதி பூண்டுள்ளனர்."

யாழ்ப்பாணத்தில் இருந்து இந்தியா திரும்பியதும் தனது அனுபவங்களை விபரித்து பல பத்திரிகைகளுக்கு எழுதினார்: பிரபலமாகியும் விட்டார்.

'துக்ளக்' சஞ்சிகையிலும் பகவான் சிங்கின் இலங்கைப் பயணக் கட்டுரை வெளியானதாக ஞாபகம்.

**ஜேர்மன் பத்திரிகையாளர்**

அதேபோல ஜேர்மன் பத்திரிகையாளர் ஒருவரையும் தமிழ்நாட்டிலிருந்து படகு மூலமாக யாழ்ப்பாணம் அழைத்து வந்தது ரெலோ.

வெள்ளையினத்தவரான அந்தப் பத்திரிகையாளருக்கு ஒரே குஷி. வீடியோ கமரா, புகைப்படக் கமராக்கள் சகிதம் இயக்கங்களின் நடவடிக்கைகளை சுட்டுத் தள்ளிக் கொண்டிருந்தார்.

அவருக்காகவே ரெலோ உறுப்பினர்களும் அதிகப்படியாகவே ஆக்ஷன் போஸ்களில் நின்று படமாகிக் கொண்டிருந்தார்கள்.

கோட்டையில் இருந்து ஷெல் தாக்குதல். படையினர் முன்னேற முயல்வதும், இயக்கங்கள் பதில் தாக்குதல் நடத்தி படையினரை திருப்பி அனுப்புவதும் போன்ற காட்சிகளை ஓடியோடிப் படமாக்கினார்.

ரெலோ முகாமிலேயே தங்கியிருந்தார். திடீரென்று ஒருநாள் ரெலோமீது புலிகள் தாக்குதல் தொடுத்ததும் அவருக்கு ஒன்றுமே புரியவில்லை.

இராணுவத்தினர்தான் முகாமை விட்டு வெளியேறி யாழ்ப்பாணத்திற்குள் புகுந்து விட்டார்களோ என்று நினைத்தார்.

இயக்க மோதல் என்பதை அவர் விளங்கிக் கொண்டபோது அதிர்ச்சியடைந்து விட்டார். அவரைப் பாதுகாக்கக்கூடிய நிலையிலும் ரெலோ இருக்கவில்லை.

இறுதியில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பிடம் போய்ச் சேர்ந்தார்.

கமிட்டிக்கு சந்தேகம்.

ஈழம் முத்திரை வெளியிடும் யோசனையை கொண்டுவந்தவர் டேவிற்சன். அதனை நடைமுறைப்படுத்தமுடியும் என்று பொறுப்பெடுத்தவர் ரமேஷ்.

புலிகளும் தனி முத்திரை வெளியிடும் திட்டத்தோடு இருந்தனர். திலீபன், கிட்டு ஆகியோர் அதற்கான யோசனையில் ஈடுபட்டிருந்தனர்.

ஆனால், ஈ.பி.ஆர்.எல்.எஃப். முந்திக் கொண்டது.

'ஓஃப்செட்' முறையில் அச்சிட்டால்தான் முத்திரை அழகாக வரும். யாழ்பாணத்தில் இருந்தது ஒரே ஒரு ஓஃப்செட் பிரஸ்தான். விஜயா ஓஃப்செட் பிரஸ் என்று பெயர் இருந்ததாக ஞாபகம். புலிகளுக்கும் அந்த அச்சகத்தோடு தொடர்பு இருந்தது.

அங்குதான் 'ஈழம் முத்திரை' அச்சிடப்பட்டது. முதல் கட்டமாக பதினைந்தாயிரம் முத்திரைகள் அச்சிடப்பட்டன. முத்திரை வடிவமைப்பை டேவிற்சன்தான் உருவாக்கியிருந்தார்.

யாழ்ப்பாணம் நல்லூரில் உள்ள நாவலர் மண்டபத்தில் 'ஈழம் முத்திரை வெளியீட்டு விழா' நடைபெற்றது.

விழாவுக்கு டேவிற்சன் தலைமை தாங்கினார். பிரதம பேச்சாளராக கலந்துகொண்டவர் எச்.என்.பெர்னாண்டோ. அவர் பிரபல தொழிற்சங்கவாதி. சிங்கள முற்போக்காளர்.

தென்னிலங்கையில் பொலிசார் அவரை வலைபோட்டுத் தேடிக்கொண்டிருந்தார்கள்.

அவர் யாழ்ப்பாணத்தில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பினருடன் தங்கியிருந்தார்.

ஈழம் முத்திரை விழாவில் கலந்து கொண்ட எச்.என்.பெர்னாண்டோ சிங்களத்தில் உரையாற்ற, அதனை தமிழில் மொழி பெயர்த்தார் சிவதாசன்.

"தமிழர்கள் ஒரு தேசிய இனம். அவர்களுக்கு சுயநிர்ணய உரிமை இருக்கிறது. பிரிந்து செல்ல அவர்கள் விரும்பினால் அதனைத் தடுக்க முடியாது." என்று பேசினார் எச்.என்.பெர்னாண்டோ.

சீல் அடிக்குமாறு உத்தரவிட்டது. ஊழியர்களுக்கு உள்ளூர சந்தோசம்தான்.

அதேவேளையில் ஈழம் முத்திரைக்கு சீல் அடிக்கக்கூடாது என்று தடைவிதித்த சில உயரதிகாரிகள் எச்சரிக்கப்பட்டனர்.

ஈழம் முத்திரை விடயத்தில் மற்றொரு வேடிக்கையும் நடந்தது.

யாழ்ப்பாணத்தில் வாங்கிய ஈழம் முத்திரையை கொழும்பில் இருந்த தன் நண்பருக்கு அனுப்பியிருந்தார் ஒருவர்.

அந்த நண்பர் என்ன செய்தார் தெரியுமா? முத்திரை அனுப்பிய நண்பருக்கு ஒரு கடிதம் எழுதி. அதிலே ஈழம் முத்திரையை ஒட்டி அனுப்பிவிட்டார்.

கொழும்பு தபாலக சீலுடன் யாழ்ப்பாண முகவரிக்கு சென்றடைந்தது கடிதம்.

ஈழம் முத்திரையை ஒட்டி கடிதங்கள் போடுவதில் யாழ்ப்பாண மக்களுக்கு அலாதிப்பிரியம்.

திட்டமிட்ட செயற்பாடு காரணமாக கிட்டத்தட்ட ஒரு மாதகாலமாக ஈழம் முத்திரையும், தபால்சேவையும் அரச தபால் சேவை மூலமாக சிறப்பாக நடைபெற்றன.

**ஒழுங்கு நடவடிக்கைகள்**

ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்புக்குள் ஏற்பட்டிருந்த உட்பிரச்சனைகள் பற்றி பேச்சு நடத்த டக்ளஸ் தேவானந்தா தமிழ்நாடு சென்றார்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்க தலைமைப் பீடத்தில் கடும் முரண்பாடு எழுந்திருந்த நேரம் அது.

தலைமைப்பீடத்தில் முரண்பாடு என்பதை தெரிந்துகொண்டு ஈ.பி.ஆர்.எல்.எஃப். இராணுவப்பிரிவு உறுப்பினர்கள் சிலர் கட்டுப்பாட்டை மீறி நடந்துகொள்ளத் தொடங்கினார்கள்.

யாழ்ப்பாணம் ஆரியகுளத்தைச் சேர்ந்த மதன் என்னும் உறுப்பினர் ஒருவர் தனியார் கொள்ளைகளில் ஈடுபடுவதாக கண்டுபிடிக்கப்பட்டது.

இயக்கத்தின் ஆயுதத்தை பயன்படுத்தி பல தனியார் கடைகளில் கொள்ளையிட்டிருந்தார்.

அவருக்கு ரமேஷின் சம்மதத்தோடு மரண தண்டனை கொடுத்துவிட்டார்கள் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இராணுவப்பிரிவினர்.

இன்னொரு உறுப்பினர் ரவி. அவரும் இயக்கப் பெயரைப் பயன்படுத்தி கொள்ளைகளில் ஈடுபட்டார்.

அவரைப்பிடித்து வந்து தடுத்துவைத்தனர். அவர் தப்பியோடினார். துரத்திப் பிடித்துக் கொண்டுவந்து அடித்தபோது உயிர் போய்விட்டது.

இரவோடு இரவாக உடலை கொண்டு போய் ஆரியகுளம் சந்தியில் உள்ள மின்கம்பத்தில் கட்டி விட்டு துப்பாக்கியால் சுட்டார்கள்.

"எமது இயக்கத்தில் இருந்து மக்கள் விரோத செயற்பாடுகளில் ஈடுபட்டதால், மரண தண்டனை வழங்கப்படுகிறது" என்று ஒரு அட்டையில் எழுதி கழுத்தில் கட்டி விட்டு வந்துவிட்டார்கள்.

இராணுவப்பிரிவில் இருந்து கொண்டு மக்கள் மத்தியில் அத்துமீறல்களில் ஈடுபட்ட உறுப்பினர்கள் பத்துப்பேர்வரை மொட்டை அடிக்கப்பட்டு மின்கம்பத்தில் கட்டி வைக்கப்பட்டு நையப்புடைக்கப்பட்டார்கள்.

இராணுவப்பிரிவில் இருந்து விலக்கப்பட்ட உறுப்பினர்களது பட்டியலும் வெளியிடப்பட்டது.

இந்த நடவடிக்கைகள் ஈ.பி.ஆர்.எல்.எஃப். யாழ் பிராந்தியக் கமிட்டிக்கு பிடிக்கவில்லை.

மரண தண்டனைகள் வழங்குவது முறையல்ல என்று கமிட்டி உறுப்பினர்கள் பலர் அபிப்பிராயம் தெரிவித்தனர்.

"நடவடிக்கைகள் அவசியமானவை. இயக்கம் உருவாக்கிவிடும் ஒரு நபர், மக்கள் விரோதியாக மாறும்போது தண்டிக்க வேண்டிய பொறுப்பு இயக்கத்திற்கு இருக்கிறது. அதனைத்தான் செய்திருக்கிறோம்" என்று விளக்கம் அளித்தார் ரமேஷ்.

யாழ் பிராந்திய கமிட்டியில் ரமேஷ், மோகன் இருவர் மட்டுமே மரண தண்டனைகள், ஒழுங்கு நடவடிக்கைகள் கடுமையாக மேற்கொள்வது தவிர்க்க முடியாதது என்று வாதிட்டனர்.

**கடலில் கைது**

ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்க முரண்பாடுகள் காரணமாக வெளியேறியவர்களில் இருவர் கடல்வழியாக தனியார் படகொன்றின் மூலம் தமிழ்நாடு நோக்கி சென்றுகொண்டிருந்தனர்.

ஒருவர் தயாபரன். இன்னொருவர் சுதன். குருநகரில் இருந்து புறப்பட்டது படகு.

தமிழ் நாட்டுக்குச் செல்லப் புறப்பட்ட அகதிகளும் படகில் இருந்தனர்.

இரணைதீவு என்னுமிடத்தில் வைத்து படகு கடற்படையினரால் வழிமறிக்கப்பட்டது.

"நாங்கள் எல்லாம் அகதிகள்" என்று கூறினார்கள் படகில் இருந்தவர்கள்.

படகோடு அவர்களை தலைமன்னார் துறைமுகத்திற்கு அழைத்துச் சென்றார்கள்.

தயாபரன் முன்னரே பொலிசாரால் தேடப்பட்டவர். லெபனானில் இராணுவப் பயிற்சி எடுத்தவர். அகதி என்று நடித்துக் கொண்டிருந்தார்.

தலைமன்னார் கடற்படை முகாமில் படகில் வந்தவர்கள் அனைவரும் ஒரு இரவு முழுவதும் தங்கவைக்கப்பட்டனர்.

விஷயமறிந்து அவர்களை பார்வையிட வந்தனர் இரண்டு பௌத்த குருமார்.

## அரசியல் தொடர் அற்புதன் எழுதுவது

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

கடற்படை வீரர்களை தனியே அழைத்து அவர்களில் ஒருவர் சொன்னார்; "இவர்களை விட்டுவிடாதீர்கள்".

அவர் சொன்னது தயாபரனின் காதில் விழுந்தது. அவருக்கு சிங்களம் தெரியும்.

எனவே, எப்படியாவது தப்ப வேண்டும் என்று சுதனுக்கு சொல்லி உஷார்படுத்தினார்.

மறுநாள் காலையில் படகில் இருந்து கைது செய்யப்பட்ட அனைவரையும் மீண்டும் அதே படகில் ஏற்றினார்கள்.

படகுக்குள் இரண்டு இராணுவத்தினர் ஆயுதங்களோடு காவலுக்கு ஏறிக் கொண்டார்கள்.

மற்றொரு கடற்படைப் படகில் கடற்படையினர் 9 பேர் அகதிகளின் படகுக்கு பின்னால் வந்து கொண்டிருந்தனர்.

தள்ளாடி இராணுவ முகாமை நோக்கி இரண்டு படகுகளும் சென்றுகொண்டிருந்தன.

**காரியப்பாட்டு**

பாதிவழியில் இராணுவ வீரர்கள் இருவரையும் பழக்கம் பிடித்துக் கொண்டனர் தயாபரனும், சுதனும்.

பாட்டுப் பாடச் சொல்லிக் கேட்டனர் இராணுவத்தினர். பாடத்தொடங்கினார்கள்.

எப்படியாவது தப்பிக்கொள்ள வேண்டும். தள்ளாடி முகாமுக்கு சென்றால் மீட்சி இல்லை என்று தயாபரனுக்கும், சுதனுக்கும் உறுதியாக தெரிந்துவிட்டது.

பாடலின் மத்தியில் பாட்டாலேயே பேசிக்கொண்டார்கள் இருவரும்.

"நான் மடக்குவேன், நீ செய்வியா கண்ணே கலைமானே லல்லல்லா.. லல்லல்லா இப்போது விட்டால் தொலைந்தோமடா லல்லல்லா......."

உடனே அடுத்தவர் பாடினார், சோளஞ்சோறு பொங்கட்டுமா, நான் பொங்கட்டுமா? முடியட்டும் பாடி முடியட்டும், பொங்குமாமா......."

இராணுவ வீரர்கள் விஷயம் புரியாமல் பாடலை இரசித்துக் கொண்டிருந்தார்கள்.

பாடல் முடியப்போகிறது. படகில் இருந்த ஏனையோருக்கு ஏதோ நடக்கப்போகிறது என்று தெரிந்துபோனது.

எல்லோருக்கும் திக், திக்,

பாடல் முடிந்தது.

ஒரே பாய்ச்சல்.

இரண்டு இராணுவ வீரர்களும் அதனை எதிர்பார்க்கவில்லை.

இராணுவ வீரரின் துப்பாக்கியைப் பறித்து சுட்டுத்தள்ளினார் தயாபரன். இராணுவ வீரர் இருவரும் படகுக்குள் விழுந்தனர்.

பின்னால் வந்த கடற்படைப் படகு, ஏதோ அசம்பாவிதம் என்று விரைந்து அருகில் வந்தது.

தயாபரனும், சுதனும் அப்படகு மிக அருகில் வரும்வரை காத்திருந்தனர்.

அருகே வந்தது படகு.

இருவரும் துப்பாக்கிகளை இயக்கி ரவைகளைப் பொழிந்தார்கள்.

சூடுபட்ட கடற்படையினரில் சிலர் கடலில் விழுந்துகொண்டிருக்க, படகு தப்பியோடத் தொடங்கியது.

படகைச் செலுத்திய கடற்படைவீரர் தவிர படகில் இருந்த எட்டு கடற்படை வீரர்களும் பலியானார்கள்.

முதல் படகில் கொல்லப்பட்ட இரு இராணுத்தினரோடு சேர்த்து மொத்தம் 10 படையினர் பலியானார்கள்.

உண்மையாகவே துணிகரமான தாக்குதல்தான். இது நடந்தது 1986 ஜுன் 19ம் திகதி.

(தொடர்ந்து வரும்)

# கடலில் நடந்த அதிரடித் தாக்குதல்

**வெளிநாட்டு நிருபர்கள்**

வெளிநாட்டு நிருபர்கள் தொடர்பாக ஒரு பொதுவான விடயத்தைக் குறிப்பிட்டேயாக வேண்டும்.

அவர்களுக்கு சூடான செய்திகள் தேவை: பரபரப்பான தகவல்கள் தேவை.

தங்கள் பேனாக்களோடும், கமராக்களோடும் அவர்கள் புறப்பட்டுவிடுவார்கள். எங்கெங்கு மோதல்கள், சண்டைகள் நடக்கின்றனவோ ஆங்காங்கெல்லாம் பறந்து போய்விடுவார்கள்.

உள்நாட்டு யுத்தங்கள், அரசுகளுக்கு எதிரான கலகங்கள் என்பவை நடைபெறும் நாடுகளில் உள்ள அரசுகள் பத்திரிகையாளர்களைக் கண்டு பயப்படுகின்றன.

அதனால் பத்திரிகையாளர்களோடு- குறிப்பாக வெளிநாட்டு பத்திரிகையாளர்களோடு ஒத்துழைக்க மறுக்கின்றன. இடையூறுகளை விளைவிக்கின்றன.

அதன்பலனாக வெளிநாட்டு நிருபர்கள் மத்தியில் ஒரு வன்மம் ஏற்பட்டுவிடுகிறது.

"தடுக்கவா பார்க்கிறாய்? உன் தடையை மீறிக்காட்டுகிறோம் பார்" என்று தீர்மானித்து விடுகிறார்கள்.

அதன் விளைவு, அரசாங்கத்திற்கு எதிராகப் போராடும் அமைப்புகள் பக்கம் அவர்கள் சாய்ந்து விடுகிறார்கள்.

அதுமட்டுமல்ல, அரசாங்கத்திற்கு எதிராகப் போராடும் இயக்கங்கள், சாகசங்கள், புகைப்படங்கள் என்பவை தான் புதிய ஆச்சரியமான தகவல்கள்.

வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களுக்குத் தேவையானவை அவைதான்.


இலங்கை ஒரு சொர்க்கபூமியாக இருந்தால் உல்லாசப் பயணிகள் வந்து குவிந்துகொண்டிருப்பார்கள். ஆனால் பத்திரிகையாளர்கள் வரமாட்டார்கள்.

குழப்பபூமியாக மாறியதால்தான் வெளிநாட்டு பத்திரிகையாளர்கள் படையெடுக்கத் தொடங்கினார்கள்.

இந்திய நிருபர்கள் சிலர் இயக்கங்களின் படகுகளில் ஏறி யாழ்ப்பாணம் வந்து தகவல் சேகரித்தனர்.

தமிழ்நாட்டில் இருந்து படகு மூலமாக முதன் முதலாக வந்த பத்திரிகையாளர் பகவான்சிங். ரெலோ இயக்கதினர்தான் அவரை அழைத்து வந்திருந்தார்கள்.

படகில் அவர் வரும்போது கடற்படைப்படகால் அவர் வந்த படகு துரத்தப்பட்டது. கடலுக்குள் தன் கதை முடிந்தது என்றுதான் நினைத்தார் பகவான்சிங். ஆனால் கடற்படைப் படகால் ரெலோ படகை பிடிக்க முடியவில்லை. பகவான் சிங் தப்பினார்.




1986ல் வெளியான ஈழம் முத்திரை.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். படகுமூலமாக தமிழ் நாட்டுக்கு அழைத்துச் செல்லப்பட்டார். ஜேர்மன் திரும்பியதும் தனது அனுபவங்களை புகைப்படங்களோடு வெளியிட்டார்.

**ஈழம் முத்திரை**

1986 இல் ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பால் 'ஈழம் முத்திரை' வெளியிடப்பட்டது.

பணநோட்டு, முத்திரை இரண்டும் மிக முக்கியமான விடயங்கள்.

'முத்திரை' வெளியிட்டு அதனைவைத்து தபால்சேவை நடத்துவது என்பது வடக்கில் தனியான அரசு ஒன்று இயங்குவதற்கான அடையாளமாகிவிடும்.

முத்திரை வெளியிட்டால் அதனை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த முடியுமா என்று ஈ.பி.ஆர்.எல்.எஃப். யாழ் பிராந்தியக்

அவரது பேச்சுக்கு மண்டபம் அதிரும் கரவொலி எழுந்தது.

**தபால் சேவை**

ஈழம் முத்திரைகளை யாழ்குடாநாடு முழுக்க விற்பனை செய்தது ஈ.பி.ஆர்.எல்.எஃப்.

'ஈழம் தபால்சேவை' என்று தனியான மஞ்சள் நிற வாகனமொன்று நடமாடும் முத்திரை விற்பனை நிலையமாகச் செயற்பட்டது.

ஈழம் முத்திரைகளோடு யாழ் பிரதம தபாலகத்தில் கடிதங்கள் மலைபோலக் குவிந்தன.

'ஈழம் முத்திரை' ஒட்டப்பட்ட கடிதங்களை தனியாக எடுத்துவைக்குமாறு உயரதிகாரிகள் கூறிவிட்டார்கள். அதனையறிந்து ஈ.பி.ஆர்.எல்.எஃப். தபாலகத்திற்குள் சென்று, ஈழம் முத்திரைகள்மீது தபாலக



படிப்பகம்

www.padippakam.com

அலசுவது—இராஜதந்திரி

# ஒரு புறம் பேராசிரியர்-மறுபுறம் ஜெனரல்

## இனப்பிரச்னையை இருமுனைகளில் அணுகும் சந்திரிகா அரசு!

பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் நடவடிக்கைகள் சுமுகமாக இடம்பெற்று வருகின்றன என்று அத்தெரிவுக்குழுவின் தலைவரான அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் குறிப்பிட்டுள்ளார்.

அரசின் தீர்வுத்திட்டத்தை விரிவாக ஆராய்வதும், அத்திட்டத்தில் புதியனவற்றைச் சேர்க்கவும், திருத்தங்களை மேற்கொள்ளவும் இடமளிக்கப்படும் என்று பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் குறிப்பிட்டுள்ளார்.

எனவே அரசு முன்வைத்துள்ள தீர்வுத்திட்டமென்பது இறுதியும், முடிவுமானதல்ல என்பதுமட்டும் பேராசிரியரின் இக்கருத்து மூலம் தெளிவாகியுள்ளது.

இலங்கையின் இன்றைய வடக்கு-கிழக்குப் பிரச்னையை ஆராயும் பட்சத்தில், அப்பிரச்னை ஒரு அரசியல் நெருக்கடிக்குள்ளாகியிருப்பதைவிட, யுத்தக் கெடுபிடிக்கே உட்பட்டிருக்கின்றது.

இந்நிலையில் வடக்கு-கிழக்கில் எல்.ரி.ரி.ஈ. யினரது இராணுவ ரீதியான நடவடிக்கைகள் விரிவடைந்திருப்பதையும், அதனை எதிர்கொள்ள ஆட்சியாளர்களும். பூரண போர்க்கோலம் பூண்டிருப்பதையுமே காணமுடிகின்றது.

கொழும்பில் உள்ளவர்கள் வடக்கு-கிழக்கு பிரச்னையை அக்குவேறு ஆணி வேறாக ஆராயலாம். திருத்தங்களைக் கொண்டுவரலாம்; புதியனவற்றையும் சேர்க்கலாம்.

ஆனால் அத்தீர்வுத்திட்டம் வடக்கு-கிழக்கில் உள்ள தமிழ் மக்களின் முற்றுமுழுதான ஆதரவைப் பெற வேண்டியது அவசியமாகின்றது.

தீர்வு என்பது வடக்கு-கிழக்கு மக்களுக்கே தேவை. அம் மக்களின் கோரிக்கைகள் என்பன அவர்களது தனித்துவங்கள், அடிப்படை அரசியல் உரிமைகள் என்பவற்றை வலியுறுத்துவதாக இருக்கின்றன.

எனவே அரசு கொண்டுவரமுயலும் எத்தகைய தீர்வுத்திட்டமும் வடக்கு-கிழக்கு மக்களையும், இன்று அவர்களின் தலைவிதியை நிர்ணயித்திருக்கும் எல்.ரி.ரி.ஈ.யினரையும் திருப்திப்படுத்த வேண்டியது அவசியமானதாகின்றது.

எல்.ரி.ரி.ஈ.யினர் அரசியல் பேச்சுக்களுக்கு வராதவர்களாக இருக்கின்றனர். அவர்களை பேச்சுக்களுக்கு வரவழைப்பதில் ஆட்சியாளர்களும் அக்கறை காட்டாதவர்களாக இருக்கின்றனர்.

இந்த இரு சாராரும் இணங்காதவரை வடக்கு-கிழக்குப் பிரச்சனைக்கு ஓர் ஆரோக்கியமான தீர்வு ஏற்பட்டுவிடும் என்று எதிர்பார்க்க முடியாது.

வடக்கே யாழ்குடா நாட்டின் பெருநிலப் பகுதியைப் படையினர் ஆக்கிரமித்துள்ளனர். ஆனால் கடந்த வாரங்களில் அங்கு இடம் பெற்ற மோதல்களில் படையினர் தரப்பில் உயிரிழப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

எல்.ரி.ரி.ஈ.யினர் யாழ்ப்பாணப் பெருநிலப் பகுதிக்குள் ஊடுருவித் தாக்குதல்களை நடத்தியிருந்தனர். இதன் மூலம் படையினரால் நிரந்தரமாக அங்கு உறுதியுடன் இருந்துவிட முடியாதென்பதே தெளிவாகியுள்ளது.

பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் பாராளுமன்றத் தெரிவுக்குழு நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ள அதே சமயம், ஜெனரல் ரத்வத்த யுத்த முஸ்தீபுகளை முடுக்கிவிடும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றார்.

கேர்ணல் தரத்தில் இருக்கும்போது வடக்கே 'ஒப்பரேஷன் சூரியக்கதிர்' இராணுவ நடவடிக்கையை நெறிப்படுத்திய அமைச்சர் ரத்வத்த, தற்போது ஜெனரலாக பதவியுயர்த்தப்பட்ட நிலையில் தமது யுத்த முஸ்தீபுகளை தீவிரப்படுத்துவார்

எல்.ரி.ரி.ஈ.யினரைப் பொறுத்தவரை தமிழீழம் என்ற தனிநாட்டுக் கோரிக்கையே வலியுறுத்தப்பட்டுள்ளது. இருந்தபோதிலும் சமஷ்டி அடிப்படையிலான தீர்வுத் திட்டத்தைப் பரிசீலிக்கத் தயாராக இருப்பதாகவும் அவர்கள் கூறியுள்ளார்கள்.



என்றே உணரமுடிகின்றது.

ஜனாதிபதி சநதிரிகாவின் அரசியல் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் ஒரு புறம் ஆரசியலைப் பேசிவர, மறுபுறம் ஜெனரல் ரத்வத்தை இராணுவ அணுகுமுறைகளை மேற்கொண்டிருக்கிறார்.

சந்திரிகா அரசுக்கும், எல்.ரி.ரி.ஈ.யினருக்குமிடையிலான உறவுகள் முறிவடைந்து ஓராண்டுகாலம் பூர்த்தியாகவுள்ளது.

இந்த ஓராண்டுகாலத்தில் மீண்டும் எல்.ரி.ரி.ஈ.யினருடனான உறவுகளை ஆரம்பித்து அவர்களுடனான பேச்சுக்களை நடத்துவதற்கான நடவடிக்கைகள் எதுவுமே நம்பிக்கை தரக்கூடிய விதத்தில் ஆரம்பிக்கப்படவில்லை.

மாறாக கடந்த ஒரு வருடகாலத்தில் யுத்த நடவடிக்கைகளே உக்கிரமடைந்து தொடர்ந்து அந்த யுத்தம் நீடித்துச் செல்வதையே அவதானிக்க முடிகின்றது.

எமது அரசாங்கத்தினால்

இருக்கவேண்டியதே அவசியமானதாக இருக்கின்றது.

கடந்த ஐ.தே.க ஆட்சியிலும் பாராளுமன்றத் தெரிவுக்குழு இயங்கியது. ஆனால் அப்போது அத்தெரிவுக்குழு எதனையும் உரிய வகையில் ஒரு நிரந்தரத்தீர்வை நோக்கியதாக ஆராயவில்லை.

எனவே அன்றைய பாராளுமன்றத் தெரிவுக்குழு நடவடிக்கையை ஒரு படிப்பினையாகக் கருதி இன்றைய பாராளுமன்றத் தெரிவுக்குழுவை வெறுமனே சந்திப்புக்களுக்கும், வாய்ப்பேச்சுக்களுக்குமான ஓர் அரங்காக மட்டும் கருதாது அர்த்தபுஷ்டியான தீர்மானங்களையும், முடிவுகளையும் எடுக்கக்கூடிய ஓர் அமைப்பாகவே

ஏற்படும் என்று அவர்கள் கூறியிருந்தனர்.

ஆனால் தற்போது நாட்டில் இருக்கின்றபோதே கடலுக்குள் வீழ்வதைவிட அபாயகரமான சூழ்நிலைகளுக்கு அப்பாவிச் சிங்களமக்களும், தமிழ் மற்றும் ஏனைய இனமக்களும் முகங்கொடுத்துள்ளனர் என்பதை இந்த 'பெளத்த தர்மத்தை உணராத பக்தி மான்கள்' ஏன் புரிந்து கொள்ளத் தவறியுள்ளனரோ என்பது புரியாத புதிராக இருக்கின்றது.

இலங்கையின் இனப்பிரச்சனை ஒரு சிறிய பிரச்னையாக வடிவமெடுத்தது முதல் தற்போது பூதாகரமாக வெடித்திருப்பதுவரை கொண்டுவரப்பட்ட அனைத்து தீர்வு முயற்சிகளையும் முறியடிப்பதில் இந்த பிக்குமார் கூட்டமே முனைப்புடன் இருந்து வந்துள்ளது.

தற்போது சந்திரிகா அரசு கொண்டு வந்துள்ள தீர்வுத்திட்டம் உரிய வகையில் பரிசீலிக்கப்படுமுன்னரே அதற்குத் தடங்கல்களைக் கொண்டுவர பிக்குமார்கள் முனைந்திருப்பது கவலை தருவதாகவே இருக்கின்றது.

மானிட வாழ்வில் சாந்தமான தன்மைகளையே போதித்த புத்த பகவானின் வேத வாக்குகளை குழிதோண்டிப் புதைப்பவர்களாகவே இந்த காவிதரித்த கூட்டத்தினர் காணப்படுகின்றனர்.

எனவே அரசின் எந்தவொரு தீர்வுத்திட்டத்துக்கும் இந்தப் பிக்குமார்களினாலேயே ஆபத்து என்பதையே ஆட்சியதிகாரங்களில் உள்ளவர்கள் உணர வேண்டியவர்களாகின்றனர்.

## புத்த பகவான் ஒரு தீர்வை முன்வைத்தாலும் இலங்கைப் பிக்குமார் அதற்கு வேட்டு வைக்கவே செய்வர்

எனவே அரசியலுக்குப் பேராசிரியரும், யுத்தத்துக்கு ஜெனரலும் என்ற நிலையிலேயே சத்திரிகா அரசு இனப்பிரச்னையை இரு வேறு முனைகளில் அணுகிவருவதை அவதானிக்க முடிகின்றது.

இலங்கையின் இனப்பிரச்னைத் தீர்வுத்திட்டம் தொடர்பாக சர்வதேச சமூகத்தின் நிலைப்பாட்டிலிருந்து நோக்கும் பட்சத்தில் எல்.ரி.ரி.ஈ.யுடனான பேச்சுக்களே இன்றியமையாதவையாக இருக்கின்றன.

சந்திரிகா அரசு பதவிக்கு வந்ததும் எல்.ரி.ரி.ஈ.இயக்கத்துடன் ஏற்படக்கூடிய ஒரு தீர்வே நிரந்தரமானதாகவும், ஆக்கபூர்வமானதாகவும் இருக்கமுடியுமென்று குறிப்பிட்டிருந்தது.

எல்.ரி.ரி.ஈ.யினருடன் 1994ம் ஆண்டில் சந்திரிகா அரசு பேச்சுக்களை ஆரம்பித்தபோது கூட, ஜனாதிபதி சந்திரிகா; எல்.ரி.ரி.ஈ.யினர் பலம் வாய்ந்த அமைப்பாக இருக்கின்றனர்; எனவே அவர்களுடன் பேசுவதே மிக அவசியமானதாக இருக்கின்றது என்று கூறியிருந்தார்.

முடியாவிட்டால் வெளிச்சக்தி ஒன்றின் துணையுடனாவது, சமாதான முயற்சிகளை முன்னெடுப்போம் என்றே சந்திரிகா ஆட்சியாளர்கள் கூறியிருந்தனர். ஆனால் எல்.ரி.ரி.ஈ., அரசு யுத்தம் ஆரம்பித்ததையடுத்து இதுவரை எந்தவொரு வெளிச்சக்தியும் தலையிட்டுப் பிரச்னைக்குப் பரிகாரம் தேட உதவவில்லை.

கூடவே ஆட்சியாளர்களும் வெளி நாடுகளிடம் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான உதவிகளைக் கோருவதை விட யுத்தத்தை மேற்கொள்வதற்கான ஆயுத தளபாடங்களையே வாங்கிவரக் காணப்படுகின்றனர்.

ஆட்சியாளர்களின் அரசியல் அணுகுமுறைகள் ஆமைவேகத்தில் இருக்கின்றன என்ற குற்றச்சாட்டுத் தெரிவிக்கப்பட்டு வந்தது. எனவே ஏதோ ஒரு வகையில் பாராளுமன்றத் தெரிவுக்குழு மூலமாக ஆட்சியாளர்கள் தீர்வுத்திட்டம் பற்றி ஆராய்ந்து வருவது வரவேற்கப்படவேண்டியதே.

ஆயினும் அரசியல் அணுகுமுறைகள் என்பன அர்த்தமுள்ளவையாக

கருதவேண்டியது இன்றியமையாததாகின்றது.

இந்நிலையில் இன்றைய தெரிவுக்குழு தனது நடவடிக்கைகளில் ஓர் இணக்கப்பாட்டை எட்டும் பட்சத்தில், அது குறித்து எல்.ரி.ரி.ஈ.யினருடனும் ஆராய்ந்து, அவர்களது நிலைப்பாடுகளை செவிமடுக்க வேண்டியதும் அவசியமானதாகின்றது.

சந்திரிகா அரசு பாராளுமன்றத் தெரிவுக்குழு நடவடிக்கைகள் ஆரம்பித்த தறுவாயிலேயே சுமார் 32 பௌத்த அமைப்புக்களைச் சேர்ந்த இரண்டாயிரத்துக்கும் அதிகமான பௌத்தபிக்குகள் பண்டாரநாயக்கா சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் கூடியிருந்தனர்.

இப்பிக்குமார் கூட்டம் பண்டாரநாயக்கா சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் தெரிவித்த கருத்துக்கள் சமாதான முயற்சிகளுக்கு வேட்டு வைப்பவையாகவே இருந்தன.

அரசின் தீர்வுத்திட்டம் நிறைவேறினால் இந்த நாட்டிலுள்ள சிங்களவர்கள் கடலுக்குள் பாய வேண்டிய நிலையே

உயர்ந்த தர்மத்துடனும், உடுத்த காவியுடனும் உயர்ந்த புத்த தர்மத்தைப் போதிக்க வேண்டியவர்கள், அரசியல்பேசி, வக்கிரமான இனவாதக் கருத்துக்களை வெளியிட்டு வரக்காணப்படுகின்றனர்.

'கடவுள் இடங்கொடுத்தாலும், பூசாரி இடங்கொடுப்பதில்லை' என்று தமிழில் கூறப்படுவதுண்டு.
எனவே புத்த பகவான்தான் உயிர்த்தெழுந்து வந்து ஒரு தீர்வைக் கூறினால் கூட, இந்த இலங்கைப் பிக்குமார்கூட்டம் அத்தீர்வையும் நிராகரிக்கவே செய்யும் என்பதையே அறியமுடிகின்றது.

---

இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் கம்ப்யூட்டர் உதவியோடு எழுதியுள்ள நாவல் விரைவில் வெளியாக உள்ளது. அதிலிருந்து சுவையான பகுதி.

### அரசியல்

அரசியல் என்பது விசித்திரங்களின் விசுவ ரூபமாகும். விபரீதங்களுக்கு அரசியல் அரங்கில் பஞ்சமில்லை.

கொள்கையைப் பற்றி விளக்கமளிக்கும் தலைவர்களுக்குக்கூட கொள்கையின்மீது பிடிப்பு இருப்பதில்லை. அரசியல்வாதிகளின் சொல்லுக்கும், செயலுக்கும் தொடர்பே இருப்பதில்லை.

எளிமையாக வாழவேண்டும் என்று உபதேசிப்பவர்களின் தனிப்பட்ட வாழ்க்கை ஆடம்பரமாக இருக்கிறது. கொடுத்த வாக்குறுதிகளை காப்பாற்ற வேண்டும் என்று யாரும் நினைப்பதில்லை.

அரசியல்வாதிகளின் ஒரே குறிக்கோள் பணமும், அதிகாரமும்தான்.

மனச்சாட்சியைப்பற்றி எப்போதுமே கவலைப்பட்டுக்கொண்டிருப்பவர்கள் நடைமுறை அரசியலில் ஓரம்கட்டப்பட்டுவிடுகிறார்கள் என்பதே நிகழ்கால நிலவரமாக உள்ளது.

### அரசியல்வாதி

அரசியல்வாதிகள் மனத்தளவில் பலவீனமானவர்கள். நிலையான மனம் அவர்களுக்குக் கிடையாது. அவர்களுக்கு உறுதிப்பாடு கிடையாது.

முந்தானையைக்கண்டு முறுவலிக்காத அரசியல்வாதிகளே கிடையாது. பெரும்பாலும் ஒவ்வொரு அரசியல்வாதிக்குப் பின்னாலும் ஒன்றுக்கு மேற்பட்ட பெண்கள் உள்ளனர்.



மனைவியின் பேச்சைக் கேட்டு செயற்படும் அரசியல்வாதிகளைவிட, மனதுக்கினிய மங்கையர்களின் பேச்சைக்கேட்டு செயற்படும் அரசியல்வாதிகளே அதிகம்.

பெண்களைத் திருப்திப்படுத்தும் பொருட்டு சில அரசியல் முடிவுகளே மாற்றப்பட்டுள்ளன.

ஆனால் சில அரசியல்வாதிகள் பெண்களைப் பயன்படுத்திக்கொண்டாலும்கூட அவர்களது பேச்சுக்கு மிகையாக மரியாதை கொடுப்பதில்லை. அவர்களை எங்கே வைக்க வேண்டுமோ, அங்கே மட்டுமே வைத்துக் கொண்டு அரசியலில் அவர்கள் தலையிடாமல் பார்த்துக் கொள்கின்றனர்.

ஆனால் அப்படிப்பட்ட சாமர்த்தியம் அனைவருக்கும் கைவந்த கலையாகிவிடாது.

### அதிகாரம்

மதுவை விட போதைமிக்கது அதிகாரம். அதிகாரத்தைப் பெற வேண்டும் என்பதற்காக தொடர்ந்து போராட்டம் நடத்தப்பட்டு வருகிறது.

அதிகாரத்தில் உள்ளவர்கள் அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக

"மங்கையரிடம் மயங்காத அரசியல்வாதிகளே இல்லை."

"அதிகாரம் நல்லவர்களை கெட்டவர்களாக்கிவிடுகிறது."

எல்லா வழிகளிலும் முயற்சித்து வருகிறார்கள்.

அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக மக்களை போலியாக சந்திப்பதும், போலியான வாக்குறுதிகளைக் கொடுப்பதும், போலியாக புன்னகைப்பதும் சர்வ சகஜமானது.

மக்களை அறியாமையில் ஆழ்த்தி வைத்திருக்க வேண்டும் என்பதுதான் அரசில்வாதிகளின் பாலபாடமாகும்.

மக்கள் விழிப்புணர்ச்சி பெற்றுவிட்டால் தங்களது கபட நாடகம் வெளிப்பட்டுவிடும் என்ற கலக்கம் அதிகாரவர்க்கத்தினருக்கு எப்போதுமே உண்டு.

அதிகாரத்தில் உள்ளபோது நல்லவராக இருப்பவர்கள்கூட, அதிகாரபீடத்தில் அமர்ந்த பிறகு கெட்டவராக மாறிவிடுவதைக் கண்கூடாகக் காண்கிறோம்.

மனித மனதின் பலவீனம்தான் இது என்று விளக்கம் சொல்லப்பட்டாலும்கூட, அதிகார போதைதான் மனிதனின் தடுமாற்றத்திற்கு காரணம் என்று கூறப்படுகிறது.

அதிகார நாட்டம் இல்லாதவர் அரசியலில் ஈடுபாடு காட்ட முடியாது. அரசியலில் ஈடுபாடு காட்ட முடியாதவர் அதிகாரப் போராட்டத்தில் பின்தங்கிவிடுவர். இது ஒரு வித சக்கரம்போல இருக்கிறது.

அதிகாரத்தால் வேண்டியவர்களுக்கு நன்மை செய்யவேண்டும் என்பதைவிட, வேண்டாதவர்களுக்கு தீமை செய்ய வேண்டும் என்ற போக்கே மேலோங்கி உள்ளது.

# உலகைக் கலக்கிய கடத்தல்

## ஒப்பரேஷன் என்டபே!

"நான்தான் கார்லோஸ்" என்று சொன்னபோதே அவள் முகத்தில் வெளிச்சமடித்தது.

தீர்மானிக்கப்பட்ட முடிவோடு எழுவதுபோலத் தெரிந்தாள். நேராக கார்லோஸ் அருகே வந்தாள்.

"நில்" என்றான் கார்லோஸ். மேலே கம்பளியில் சுவெற்றர் போட்டிருந்தாள். நடந்து வரும்போது சுவெற்றருக்குள் குதித்தவை கார்லோஸ் கண்களுக்கு தப்பவில்லை.

நின்றாள். கார்லோஸ் பிஸ்டலை அவள் நெஞ்சுக்கு நேரே நீட்டியபடி "என்ன வேண்டும்?" என்றான். அழகாக இருந்தாள். நெற்றியில் புரண்ட முடிக் கற்றைகளை அலட்சியமாக பின்தள்ளினாள். உதடுகளுக்கு மிக



லேசாக சாயமிட்டிருந்தாள். சாயமிடாவிட்டாலும் போதுமான சிவப்புடன்தான் இருந்திருக்கலாம் என்று கார்லோஸ் நினைத்தான். நாவால் இதழ்களை ஈரப்படுத்திவிட்டு, "ஓட்டோ கிராப் வேண்டும்" என்றாள்.

கார்லோஸுக்கு நம்புவதா, விடுவதா என்று தெரியவில்லை.

உயிர்களுக்கே ஆபத்து. இந்த நேரத்தில் 'ஓட்டோ கிராப்' கேட்க வருகிறாளே. நடிப்பாக இருக்கலாம். இஸ்ரேலிய மொசாட் ஆளாக இருப்பாளோ? அவள் பார்வையில் ஊடுருவும் தீட்சண்யம் இருந்தது. கார்லோஸ் அவள் கண்களைப் பார்ப்பதை தவிர்த்தான். மனம் தடுமாறிவிடும் என்று பயம்.

அந்த நேரத்தில் தளபதி வாடி ஹறட்டாட் கார்லோஸ் அருகில் வந்தார். அவரும் கடத்தல் நடவடிக்கையில் நேரடியாக ஈடுபட்டிருந்தார்.

ஆனாலும், நடவடிக்கைக்கான பொறுப்பு அன்ரன் பௌலியரிடம்தான் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

**தருவது ரசிகன்**

பெண்களைக் கண்டால் கார்லோஸ் சபலப்பட்டுவிடுவான் என்று தளபதிக்கு தெரியும்.

"ஓட்டோ கிராப் கேட்கும் நேரமா பெண்ணே?" என்றார். அவள் தன் கைகளை மார்புக்கு குறுக்காக கட்டிக் கொண்டாள். கார்லோஸ் கவலைப் பட்டான்.

'மறைகிறதே.'

"கார்லோஸ் பற்றி அறிந்திருக்கிறேன். நேரில் காண ஆசைப்பட்டிருக்கிறேன். சாகும் முன்னராவது கண்டதில் சந்தோசம். அதனால்தான் ஓட்டோ கிராப். முத்தமா கேட்க முடியும்?" கண்ணடித்தாள். பயணிகள் மட்டும் இன்னும் அதிர்ச்சியில் இருந்து மீளாமல் இருந்தனர்.

"ஓட்டோ கிராப் எங்கே?"

"இதோ இதுதான் தற்போதைக்கு!" இடது உள்ளங்கையை விரித்துக் காட்டினாள். தளபதி வாடி ஹறட்டாட் கார்லோஸைப் பார்த்தார். 'செய்' என்றார் கண்களால்.

பிஸ்டலை வாடி ஹறட்டாட்டிடம் கொடுத்துவிட்டு, அவரது சட்டைப்பையிலிருந்து பேனாவை உருவி, அவள் உள்ளங்கைகளில் கையொப்பமிட்டான். கை மென்மையாக இருந்தது. அழுத்தி தன் பிரியத்தைக் காட்டிவிட்டு, அவளிடமிருந்து வந்த வாசனையை ரசித்துக் கொண்டு, "சந்திக்கலாம்" என்றான். அவள் தனது இருக்கைக்கு போய் விட்டாள்.

ஆச்சரியமா, அபாயமா? கார்லோஸுக்கு மனதில் உறுத்தல் இருந்தது.

இத்தனையும் நடந்து கொண்டிருக்கும் போதே அன்ரன் பௌலியர் விமானிகளது பகுதிக்குள் புகுந்து, முன்னரே திட்டமிட்டபடி விமானத்தை என்டபே விமான நிலையம் நோக்கி செலுத்த வைத்திருந்தான்.

விமானம் இப்போது உகண்டாவின் என்டபே விமான நிலையம் நோக்கிப் பறந்து கொண்டிருந்தது.

விமானம் கடத்தப்பட்ட செய்தியும், இஸ்ரேலிய பிரஜைகள் உள்ளே இருப்பதும் இஸ்ரேலுக்கு எட்டியது.

பாதுகாப்பு மாநாடு அவசரமாக கூடியது.

"என்டபேயில் விமானம் தரையிறங்கியிருக்கிறது. இடி அமீன் அனுமதி கொடுக்க தயக்கம் காட்டியமாதிரியே தெரியவில்லை. அதனால்....."

"இடி அமீனுக்கும் இதிலே உடன்பாடுதான் என்கிறீர்கள்?" என்று முதல் அதிகாரி விட்ட இடத்தை பூர்த்தி செய்தார் வழுக்கை தலை அதிகாரி. 50 வயதிருக்கலாம். பழுத்த மீசை.

"கடத்தியது யார்?"

"ஒரு நிமிஷத்திற்கு முன்னர் கிடைத்த உளவுத்துறை ரிப்போர்ட்டின்படி கார்லோஸ்!"

"எ....என்ன." என்றன பல குரல்கள் ஒரே நேரத்தில்.

விவாதம் தொடர்ந்தது.

சூடுபிடித்தது.

பயங்கரமான திட்டம் வகுக்கப்பட்டது.

✓ ✢ ☎ ✉

கறுப்பான, குள்ளமான, குட்டி யானை மாதிரியான தோற்றத்தில் இருந்த இடி-அமீன்:

"கார்லோஸா வந்திருக்கிறானா?" என்றார் உற்சாகமான குரலில்.

உறுதிப்படுத்திச் சொன்னார்கள்



**சென்ற வாரம்**

ஐரோப்பிய நாடுகளின் சிறைகளில் நூற்றுக்கணக்கான பாலஸ்தீனப் போராளிகள் அடைக்கப்பட்டிருந்தார்கள். அவர்களை மீட்க திட்டமிட்டான் கார்லோஸ். ஏதென்ஸ் நகரில் இருந்து புறப்பட்ட இஸ்ரேலிய பயணிகள் அடங்கிய விமானத்தைக் கடத்தினார்கள். விமானத்தில் 250 பயணிகள் இருந்தனர். எல்லோரும் பீதியில் உறைந்திருந்தனர். அந்த விமானம் பறந்து கொண்டிருக்கிறது.

இனி....(2)

அதிகாரிகள்.

"கார்லோஸ், மக்கள் முன்னணி தலைவர் வாடி ஹறட்டாட், அன்ரன் பௌலியர் ஆகியோர் முக்கியமானவர்கள்.

விமானம் தரையிறங்கி ஆறு நாட்கள். பாலஸ்தீன் போராளிகளை விடுவிக்கத் தவறினால் விமானம் தூளாகும் பயணிகளோடு! என்று கார்லோஸ இஸ்ரேல் உட்பட பல நாடுகளுக்கு செய்தி அனுப்பியிருக்கிறான்" ஒரு அதிகாரி பவ்வியமாக குனிந்து நின்று விளக்கினார்.



மனித மாமிசம் என்றால் பிரியமாக சாப்பிடுவான் என்று பேசப்பட்ட பயங்கரமான சர்வாதிகாரியான இடி அமீன் தன் கீழ் உதட்டை கட்டை விரலால் தேய்த்தான். யோசித்தான்.

"கார்லோஸ்" என்று ஒரு முறை உரத்துச் சொல்லிப் பார்த்துக் கொண்டான்.

"கார்லோஸையும் முக்கியமான மற்றும் இருவரையும் ராஜமரியாதையோடு அழைத்து வாருங்கள். நான் விருந்து தரப்போவதாகச் சொல்லுங்கள்."

அதிகாரிகள் பறந்தார்கள்.

கார்லோஸுக்கும் இடி அமீனைக் காண வேண்டும் என்று ஆசைதான்.

அதனால் இடி அமீனிடம் இருந்து அழைப்பு என்றதும் புறப்பட்டுவிட்டான்.

தளபதி வாடி ஹறட்டாட், அன்ரன் பௌலியர் ஆகியோரும் கூடவே புறப்பட்டனர்.

பிரமாண்டமான மோட்டார் வண்டி விமான நிலையத்தில் காத்திருந்தது.

கம்பலா நகருக்கு வெளியே புறநகர் பகுதி ஒன்றில்தான் இடி அமீன் தனியான பங்களாவில் தங்கியிருந்தான்.

அந்த பங்களா நோக்கி கிட்டத்தட்ட கார் பவனிபோலவே அழைத்துச் செல்லப் பட்டனர்.

நான்கு பெண்கள் மத்தியில் குட்டி யானை போல வெற்றுடம்போடு கிடந்தான் இடி அமீன்.

நான்கு பெண்களும் வெகு சிரத்தையாக இடி அமீனுக்கு உடம்பு பிடித்து மசாஜ் செய்து கொண்டிருந்தார்கள்.

நான்கு பேருமே வாளிப்பாகத்தான் இருந்தார்கள்.

நான்கு பேருமே பெயருக்காக மட்டுமே உடம்பில் துணி போட்டிருந்தார்கள். அதில் ஒருத்தியின் தொடையில் கிள்ளினான் இடி அமீன்.

"வேலைக்கு புதுசா? பிடிக்கவே தெரியவில்லையே!" என்றான். அவள் கண்களில் மிரட்சி.

"ஒருவாரம்தான்" என்றாள்.

அழகான பெண்கள் கண் எதிரில் தென்பட்டால் போதும், இடி அமீனின் கட்டிலறையை அலங்கரிக்க பிடித்து வந்துவிடுவார்கள்.

"நேற்றிரவு என்னிடம் வந்தது நீதானே!" 'ஆம்' என்று தலையசைத்தது. "நன்றாகத்தான் இருக்கிறாய் குதிரை மாதிரி" என்றுவிட்டு சிரித்தான். அவசரமாக நான்கு பெண்களும் சிரித்தார்கள். தவறினால் இடி அமீனுக்கு கோபம் தலைக்கேறிவிடும்.

கதவு தட்டப்பட்டது. கார்லோஸ் வரும் கார் எல்லைக்குள் வந்து விட்டதாக தகவல் சொல்லப்பட்டது.

குட்டி யானை எழுந்தது.

உடையணிய உதவினார்கள். தயாராகி காத்திருந்தான்.

கார்லோஸ் வந்து இடிஅமீனின் பங்களாவுக்கு முன்னால் இறங்கிய போது, ஒரு ஆச்சரியம் காத்திருந்தது.

இடி அமீன் வாசல்வரை வந்து கார்லோஸை வரவேற்றதுதான் அந்த ஆச்சரியம்.

சாதாரணமாக யாரையும் பங்களாவுக்கு வெளியே வந்து வரவேற்பது இடி அமீனுக்கு பழக்கமில்லாதது.

எல்லோரும் தன்னைத் தேடி வரவேண்டும். தன் முன்னால் தலை குனிந்து நிற்க வேண்டும் என்பதுதான் இடி அமீனின் ஆசை.

அப்படிப்பட்ட இடி அமீன் தன்னை வரவேற்க வந்து காத்திருந்ததைக் காண கார்லோஸுக்கு உச்சி குளிர்ந்து போனது.

காரைவிட்டு முதலில் இறங்கியது தளபதி வாடி ஹறட்டாட்தான். அவரை கைகுலுக்கி வரவேற்ற இடி அமீன், கார்லோஸ் காரை விட்டு இறங்கியதும் கட்டியணைத்து மார்போடு தழுவிக் கொண்டான்.

அன்ரன் பௌலியர் மூன்றாவதாக இறங்கியபோது, இடி அமீனிடமிருந்து புன்னகை மட்டும்.

மாலையில் தடபுடலான விருந்து.

கார்லோஸ் இடி அமீனிடம்: "ஒரு சந்தேகம்?" என்றான்.

"என்ன?"

"இதில் மனித மாமிசம் எதுவுமில்லையே,"

இருளில் மின்னிய வெளிச்சம்போல தனது பல்வரிசை தெரியச் சிரித்தான் இடி அமீன்.

"இதுவரை எந்த மனிதனும் உன்னைப் போல என்னிடம் துணிச்சலாக ஜோக் அடித்ததில்லை. தவிர பிறர் சொல்லும் ஜோக்குகளுக்கு நான் சிரித்தும் பழக்கமில்லை. இன்று இரண்டையும் மாற்றிவிட்டாய்! நீ துணிச்சல்காரன்! எனக்குப் பிடிக்கிறது: கார்லோஸ் உன்னை எனக்குப் பிடிக்கிறது" என்றான் இடி அமீன் ஒரு கோழிக்காலை எடுத்து முரட்டுத்தனமாக கடித்துத் தின்னத் தொடங்கினான்.

விருந்து பரிமாறும் பெண்களில் ஒருத்தியைக் குறிப்பாக கவனித்தான் கார்லோஸ்.

அதனைக் கடைக்கண்ணால் கவனித்து விட்டான் இடி அமீன்.

"எல்லாமே கார்லோஸுக்கு பெரிசாக வேண்டுமோ?" என்றான். கார்லோஸ் புரியாமல் பார்க்க, "கோழியைச் சொன்னேன். சின்ன பதமான கோழியாக உனக்காக தயார் படுத்தச் சொன்னேன். நீ இன்னும் ஆரம்பிக்கவேயில்லையே: அதைச் சொன்னேன், அதில்பார் கார்லோஸ், எப்போதுமே ஆரம்பிப்பதில் தயக்கம் கூடாது, குறிப்பாக உன்னையும், என்னையும் போன்ற ஆண்களுக்கு!"

கார்லோஸுக்கு ஒன்றும் புரியவில்லை. வெறுமனே புன்னகைத்தான். விடை விருந்து முடிய தெரியப்போகிறது என்பது கார்லோஸுக்கு தெரிந்திருக்க நியாயமில்லை.

➤ ➡ ➤

இஸ்ரேலிய மொசாட் உகண்டாவில் நடக்கும் சகல சமாச்சாரங்களையும் தனது நாட்டுக்கு அனுப்பிக் கொண்டிருந்தது.

இடி-அமீன் கார்லோஸை வரவேற்ற செய்தியும் இஸ்ரேலுக்கு பறந்தது.


இஸ்ரேலில் பாதுகாப்பு அமைச்சரிடமிருந்து பறந்தது; உத்தரவு:

"செல்க, வெல்க, வருக"

(அடுத்த வாரம் அதிரடியோடு வரும்.)

# துணிச்சலான கப்டன்

விளையாட்டில் வெற்றி தோல்வி சகஜம் தான். ஆனால் விளையாட்டை விளையாட்டாக மதித்து ஈடுபாட்டோடு விளையாடுவது முக்கியம்.



ஜிம்பாப்பே கிரிக்கெட் அணியைப் பொறுத்தவரை அதன் ஈடுபாடு அசத்தலானது.

1983 இல் இந்தியாவை தோல்வியின் விளிம்பில் கொண்டுபோய் நிறுத்தியது ஜிம்பாப்பே. அந்த நேரத்தில் களத்தில் இறங்கினார் கபில்தேவ். 5 விக்கெட் இழப்புக்கு 17 ரன்களை மட்டுமே எடுத்திருந்த இந்திய அணியை தூக்கி நிறுத்த ஆரம்பித்தார்.

அடித்து தூள் பண்ணினார் கபில். 175 ரன்களை குவித்து அவுட்டாகாமல் திரும்பினார். அப்படியிருந்தும் ஜிம்பாபே அணி துவண்டுவிடவில்லை. சிறப்பாக துடுப்பெடுத்தாடி இந்திய அணியை வேலை வாங்கிவிட்டுத்தான் தோல்வியடைந்தது.

இம்முறை 96 இலும் இந்தியாவை ஆரம்ப ஓவர்களில் நிலைகுலைய வைத்துவிட்டது ஜிம்பாப்பே. நட்சத்திர ஆட்டக்காரர் டெண்டுல்கரை 3 ரன்களோடு திருப்பி அனுப்பிவைத்தது.

ஜிம்பாவே அணியின் கப்டன் ஆன்டி பிளவர் இளைஞர். துடிப்பானவர். அவரது சகோதரர் கிராண்ட் பிளவரும் துடிப்பான துடுப்பாட்ட வீரர். இருவரும் அணியின் தூண்கள்தான்.

அவுஸ்ரேலியா, மேற்கிந்திய அணிகள் இலங்கையில் விளையாட மறுத்த நேரத்தில், ஒரு குரல் கேட்டது;

"இலங்கையில் விளையாடுவது பற்றி நாங்கள் கவலைப்படவில்லை." என்றார் ஆன்டி பிளவர். உண்மையாகவே துணிச்சலான கப்டன் என்பதை நிருபித்தார்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் பிளவர் ஆடியுள்ள சர்வதேச ஒருநாள் போட்டிகளில் அவரது திறமை அதிகரித்து வருகிறது.

இன்னமும் நீண்டகாலம் விளையாடக் கூடிய வயது இருப்பதால் ஜிம்பாப்பே அணிக்கு மேலும் நீண்டகாலம் கப்டனாக இருப்பார்.

டெஸ்ட் போட்டிகளில் விளையாடும் அணி என்ற அந்தஸ்து 96 உலகப் போட்டிக்கு முன்னர்தான் ஜிம்பாப்பேக்கு கிடைத்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# [illegible]

## உலக அழகிகளின் சினிமா மோகம்

இந்தியாவின் முன்னாள் உலக அழகிகள் ஐஸ்வர்யாராய், சுஷ்மிதா இருவருமே சினிமா என்ற புளியங்கொம்பைப் பிடித்துக் கொண்டார்கள். உடும்புப்பிடி.



சுஷ்மிதா

சினிமா உலகில் நடிகைகள் முன்னேற வேண்டுமானால் சில விதிமுறைகள் இருக்கின்றன. அந்த விதிமுறை உலக அழகிகள் என்பதால் தளர்த்தப்படமாட்டாது.

***அது என்ன விதி முறைகள்?***

1. அனுசரித்துப் போவது:-

தயாரிப்பாளர், இயக்குநர், ஹீரோ ஆகிய மூவரில் ஒருவரை குளிர வைத்தால்தான், புகழேணியின் படிக்கட்டில் முதல் அடியை வைக்க முடியும்.

உலக அழகி என்ற பிரபலம், மற்றும் வேறு பிரபலங்கள் இருக்கும் ஒரு பெண் நடிகையானால் சில சாதகங்கள் இருக்கின்றன. கண்டவர்கள் எல்லாம் கைபோடத் துணியமாட்டார்கள்.

திரையுலகப் பிரமாக்களாக இருக்கும் சிலரை மட்டும் கவனித்துக் கொண்டால் போதும்.

அனுசரித்துப்போகவே மாட்டேன் என்றால் ஓரிரு படங்களில் மட்டும் நடிக்கலாம். அதிலே படுபிரபலம் கிடைத்துவிட்டால் மட்டும் பிழைத்துக் கொள்ளலாம். அதன் பின்னர் பந்தா காட்டலாம்.

ஆனால், தற்போது வளர்ந்து புகழ் பெற்ற நடிகைகள்கூட பிரபல நடிகர்களின் அழைப்புக்களுக்கு. வளைந்து கொடுக்க வேண்டியிருக்கிறது. அந்தளவுக்கு போட்டி இருக்கிறது. 'நீ வராவிட்டால் போ' என்று வேறு ஒரு நடிகையை பிடித்துப் போட்டுவிடுவார்கள்.

ஆகவே அனுசரித்துப் போதல் என்பதுதான் தற்காலிக சினிமா உலகில் அதி



அவசிய ஆயுதம்.தந்திரம் எல்லாம்.

2. ஆடைக்குறைப்பு:-

இதற்கும் தயாராக இல்லையா? கலைப்பட நடிகை என்று முத்திரை குத்திவிடுவார்கள். சம்பாதிக்க முடியாது.

3. நெருக்கமான காட்சிகள்:-

கதைகளைத் தேடிக்கொண்டிருக்க நேரம் இல்லை. கவர்ச்சி பாதி, தொழில் நுட்பம் மீதி என்றளவில் படங்கள் தயாராகத் தொடங்கிவிட்டன.

பெண்களின் உடலின் வளைகளில் கமராவும், கதாநாயகனின் கையும் படாத இடமே இல்லை. குளோசப் காட்சிகள் தனி.

பெண்கள் மட்டுமல்ல, ஆண்களும் தமது சட்டைகளை களையத் தொடங்கிவிட்டார்கள். ரசிக்கவும் படுகிறார்கள். பாடல்காட்சிகளின் கமராவுக்கே தெரியாமல் சில ஹீரோக்கள் சில்மிஷம் செய்தாலும் நடிகைகள் கண்டு கொள்ளக்கூடாது. இதிலே கொடுமை என்னவென்றால் சில நடிகர்களும் நடிகைகள்மீது அதே மாதிரியான புகார் தெரிவிப்பதுதான். என்றாலும் நடிகைகளுக்குத்தான் பெரும்பாலும் அவஸ்தை. முகம்சுளித்தால் சான்ஸ் போச்சு.

மேற்கண்ட மூன்று முக்கிய விதிமுறைகளை தாண்டித்தான் சுளை சுளையாக சம்பாதிக்கும் நடிகைகள் உருவாகிறார்கள். உலக அழகிகளின் கதையும் அதுதான்.

ஐஸ்வர்யா ராய் ஏற்கெனவே மொடலிங் செய்து பழக்கப் பட்டவர். அனுசரித்துப்போவது எப்படி என்றும் அறிந்தவர். தமிழில் மணிரத்னம் படத்தில் நடிக்கிறார்.

அதைவைத்தே இந்தியில் பெரிய பட்ஜெட் படமாகத் தேடுகிறார். அதற்கிடையே பாபிதியோல் என்னும் இந்தி நடிகரோடு சுற்றிக் கொண்டிருக்கிறார்.

சுஷ்மிதா சென் ஆடைக்குறைப்புச் செய்து சுண்டி இழுக்கும் விதமான போஸ் கொடுக்கிறார். இந்தியில் இளம் நடிகரான அக்ஷய் குமாரோடு ஒட்டிக் கொண்டுவிட்டார்.

காதலிப்பதும், ஜாலியாக இருப்பதும் அவர்களது தனிப்பட்ட விவகாரம். ஆனால், ஒருவருடத்தின் முன்னர் முடிசூடிய ராணிகளாக, பட்டம்பெற்ற இலச்சனைகளோடு காட்சியளித்தவர்கள் இப்போது கட்டியணைத்துக் கொண்டும், கையளவு உடையிலும் தோன்றுவதுதான் சகிக்கவில்லை. நம் நாட்டில் கூட ஐஸ்வர்யாராய்க்கு யானை மாலை போட்டது.

உலகக்கிண்ணப் போட்டி 96 தொடக்க விழாவில் நாட்டுக்கொடிகளை ஒரு தேவதைபோல வந்து விநியோகித்தார் சுஷ்மிதா. அந்தத்தேவதை சினிமாவுக்காக தன்னைத்தானே துகிலுரிந்து கொண்டிருக்கிறார்.



www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com



## உங்களால் முடியாது தம்பி

மாமிச மலை. ஒரே ஒரு குத்து. நாம் காணாமல் போய்விடப் போதுமானது. காலுக்குள் மிதிபட்டால் சதக் சதக். மரியாதைக் குரிய மாமிசமலை அண்ணரின் பெயர் ரக்கனோஹானா. சூமோ மல்யுத்தத்தில் அருமை அண்ணர்தான் கிரான்ட் சாம்பியன். உயரம் 6 அடி. எடை 335 இறாத்தல்.

அண்ணரிடம் சூமோ மல்யுத்தம் பயிலும் மாணவர்களுக்கு தரப் படும் பயிற்சிகளில் ஒன்று தள்ளுப் பயிற்சி. பலத்தை திரட்டி கச்சித மாக தள்ளவேண்டும். மூச்சைப் பிடித்து முயன்றாலும் மாணவர்களால் முடியாது. எந்த மலை சாய்ந்தாலும் இந்த மலை சாயாது.

## ஒரே முகம்



இது உலகப் புகழ்பெற்ற புகைப்படம். படத்தில் இருக்கும் சிறுமிகள்தான் உலகப் புகழுக்கு காரணம். ஐந்து பேரும் ஒரு தாய் மக்கள். கனடாவைச் சேர்ந்தவர்கள். ஒரே முகத்தோடு இவர்கள் பாடசாலை சென்றபோது ஆசிரியர்கள் பாடு பெரும் குழப்பமாகிவிட்டதாம். அதனால் வேறுவேறு பாடசாலைகளில் சேர்த்து படிப்பித்தார்கள்.

எல்லாம் சரி, இப்போது இவர்கள் என்ன செய்கிறார்கள் என்று தெரியுமா? பாட்டிகளாக இருக்கிறார்கள். 61 வயது.

கல்யாணமானதுமே வேறு வேறு ஊர்களுக்கு சென்றுவிட்டார்களாம். இல்லாவிட்டால் கணவர்மார்கள் பாடு கஸ்டமாக இருந்திருக்கும்.

## தகவல் பெட்டி

## குடிமக்களுக்கு நற்செய்தி

குடிமக்களுக்கு ஒரு நற்செய்தி. படத்தில் இருப்பதுதான் உலகிலேயே மிகப் பெ.....ரி....ய்....ய பியர் போத்தல்.

இந்தியாவில் மிகப் பிரபலமான பியர் கிங்ஃபிசர். அதனை விளம்பரப்படுத்த மிகப் பெரிய பியர் போத்தலை உருவாக்கினார்கள்.

625.5 லிட்டர் பியர் கொள்ளக்கூடிய போத்தல் இது. இதனைத் திறக்க விசேஷமாக உருவாக்கப்பட்ட திறக்கும் கருவி தேவைப்பட்டது.


பியர் போத்தலை பார்வையிட கின்னஸ் சாதனைப் புத்தக உறுப்பினர்கள் வந்தார்கள். படுதிருப்தி. உலகிலேயே இன்றுவரை மிகப் பெரிய பியர் போத்தல் இதுதான் என்று பதிவு செய்து விட்டார்கள்.




பியர் போத்தலை திறப்பவர்தான் உரிமையாளர். அருகில் நிற்பவர்கள் கின்னஸ் சாதனைப் புத்தக உறுப்பினர்கள்.

இந்தளவு போத்தல் பியர் கிடைத்தால் கொண்டாட்டம் தான் என்று குடிமக்கள் வாய் ஊறினால் நாம் பொறுப்பல்ல.


பி.கு:- குடிமக்கள் என்பது இங்கு உற்சாகபானப் பிரியர்களைக் குறிக்கிறது.



## வானத்தில் டைனோசர்

'ஜுராசிக் பார்க்' திரைப்படம் வெளியானதை அடுத்து டைனோசருக்கு பயங்கரமான மவுசு. பல நாடுகளில் முக்கிய விழாக்களிலும், களியாட்டங்களிலும் டைனோசர்களை ராட்சத அளவில் செய்துவைத்து வியப்பேற்றுகிறார்கள்.

படத்தில் இருப்பது ராட்சத அளவில் பலூனில் செய்யப்பட்ட டைனோசர். இந்தியாவில் புதுடில்லியில் நடைபெற்ற பலூன் விழாவில் பறக்கவிடப்பட்டபோது எடுக்கப்பட்ட படம், பலூனில் டைனோசர் வடிவத்தை தத்ரூபமாக உருவாக்கியது உலக சாதனைதான். பார்வையாளர்களை பிரமிக்கவைத்த காட்சி இது.



## பறக்கும் கண் ஆஸ்பத்திரி

### உலகம் சுற்றும் உன்னத சேவை

கண்கள்தானே மனிதனின் விலைமதிப்பற்ற சொத்து. அந்தக் கண்களுக்கே தீங்கு வந்தால் மனிதன் துடித்துத்தான் போவான். கண்களின் பெறுமதியை உணர்ந்து பல டாக்டர்கள் ஒன்று சேர்ந்து ஆர்பிஸ் என்னும் அமைப்பை உருவாக்கியுள்ளனர். அமெரிக்க நியூயோர்க்கில் இந்த அமைப்பின் தலைமையகம் இருக்கிறது.

அங்குபோய் சிகிச்சைபெறுவது சாதாரண காரியமா? என்று சலித்துக் கொள்ளாதீர்கள்.

உங்களைத்தேடி பறந்துவரத் தயாராக இருக்கிறது. கண்வைத்தியசாலை. முதன் முதலாக 'பறக்கும் கண் ஆஸ்பத்திரியை' உருவாக்கியிருக்கிறார்கள் 'ஆர்பிஸ்' அமைப்பினர்.

படத்தில் இருப்பதுதான் 'பறக்கும் கண் ஆஸ்பத்திரி'யின் தோற்றம். டி.சி. 10 ரக விமானத்தில் இந்த பறக்கும் கண் ஆஸ்பத்திரி இயங்குகிறது. இந்த விமானத்தை உருவாக்க மூன்று வருடங்கள் தேவைப்பட்டன. விமானத்திற்குள் 7 அறைகள் உள்ளன. அறுவைச் சிகிச்சை அறை, ஒலி, ஒளி, விளக்கப்பட அறை, வகுப்பறை ஆகியவை உட்பட கண் சிகிச்சைக்கு தேவையான சகல வசதிகளும் உள்ளன.

அதுமட்டுமல்ல கண் டாக்டர்களுக்கு பயிற்சி கொடுக்கும் வசதியும் இதில் இருக்கிறது. கண் அறுவைச் சிகிச்சை நடக்கும்போது அதனை புகைப்படக் கருவி ஒன்று படமெடுத்து திரையில் காண்பித்துக் கொண்டிருக்கும். புதிய டாக்டர்கள் கற்றுக் கொள்ளலாம்.

இதுவரை 71 நாடுகளுக்கு பறந்து சென்றுள்ள இந்த நவீன வைத்தியசாலை தற்போது இந்தியாவில் சுற்றி சிகிச்சை வழங்கிக் கொண்டிருக்கிறது.


படிப்பகம்

www.padippakam.com

# சிகரத்தின் அறிவிப்பு

பிரபு-மீனாட்சி சேஷாத்திரி நடித்த 'டுயட்' படத்தை இயக்கிய இயக்குநர் சிகரம் கே.பால சந்தர் அதன் பின்னர் ஒரு படமும் இன்னமும் இயக்க வில்லை. அந்தக் குறையை இந்த ஆண்டு போக்க முன் வந்திருக்கி றார். ஒரு படத்தை அவர் இயக்கவுள்ள தாக அறிவித் துள்ளார்.


சத்யராஜ்-சௌந்தர்யா
படம் : சேனாதிபதி

# சங்கவி கலக்கல்

'பிரசாந்த்'நடித்த 'கல்லூரி வாசல்'படம் வெளிவந்துவிட்டது. 'கிருஷ்ணா'படம் விரை வில் வெளிவரவுள்ளது. 'புலித்தேவன்', 'வைரம்', ஜோக்கர், 'மன்னவா' ஆகிய படங்களில் நடித்துக் கொண்டிருக் கிறார்.

'மன்னவா' படத்தில் சங்கவி முதன்முதலாக ஜோடி சேரு கிறார். முதல் படம் என்ப தால் பிரசாந்த் அசரும் விதமாக காதல் காட்சிகளில் அமர்க் களப் படுத்துகிறா ராம் சங்கவி.

# சுந்தர் இயக்கத்தில் கார்த்திக்

சி.சுந்தர் இயக்கி, கார்த்திக், ரம்பா நடித்து வெற்றிகரமாக ஓடிக்கொண்டி ருக்கும் படம் 'உள்ளத்தை அள்ளித்தா!'

அதனையடுத்து சி.சுந்தர் இயக்கத்தில் கார்த்திக் புதிதாக நடிக்கும் படம் 'மேட்டுக்குடி'.

கார்த்திக் ஜோடியாக நடிக்க முன்னணி நடிகை ஒருவரைப் போடப் போகிறார்கள்.

கவுண்டமணி, செந்தில், மணி வண்ணன், கசன்கான், மலையாளவில்லன் நடிகர் திலகன் ஆகியோரும் நடிக்கவுள்ளனர். இசை: சிற்பி. வசனம்: செல்வபாரதி.

ராஜபரம்பரை ஒன்றில் நடைபெறும் சம்பவங்களை வைத்து சி.சுந்தர் திரைக்கதை எழுதிக் கொண்டிருக்கிறார். ஏப்ரல் மாதம் படப்பிடிப்பு ஆரம்பமாகிறது.

# சினி...

## கற்றும்...

'லவ் பேர்ட்ஸ்' ...
அடுத்து வரப்போ...
மார்க்கெட்டை தூ...
நக்மா ராசியு...
இல்லாததுதான்...
வைத்திருக்கேன்...
அந்தச் சூடு மின்...
அதனால் 'மி...
கொண்டிருக்கிறா...
பிரபுதேவா. "புரி...
முழுமையாக க...
வளர்த்துவரு கிற...

## பட...

'காத...
பிருக்கிறா...
படத்தயா...
போட்டிரு...
ரூபாய்...
குஞ்சமோ...
வி...
'காதல...
போகி...



# உயர்ந்தது ஊதியம்

அஜித்குமார்-சுவாதி நடித்த வான்மதி, விஜய்-சங்கீதா நடித்துள்ள 'பூவே உனக்காக' பிரசாந்த், அஜித்குமார் பூஜாபட் நடித்த 'கல்லூரி வாசல்' ஆகிய மூன்று படங்களும் நன்றாக ஓடுகின்றன.

பார்த்தார்கள் தயாரிப் பாளர்கள். ஓடுகிற குதிரை களில் பணம் போட்டால் லாபம்தானே! மூவரையும் தேடி ஓடுகிறார்கள். பிரசாந்த், அஜித்குமார், விஜய் மூவரும் இப்போது தமது ஊதியத்தை உயர்த்தி விட்டார்கள்.

# முக்கோணக் காதல்

இரண்டு பெண்களி டம் சிக்கித் தவிக்கும் ஒரு ஆணின் கதையை சுவாரசியமாகச் சொல் லும் படம் 'கிருஷ்ணா.' ஹீரா, கஸ்தூரி இருவரும் பிரசாந்த்தைக் காதலிக் கிறார்கள். முக்கோணக் காதல். ஹீரா இந்தியில் போய்கற்று வந்த கவர்ச்சி அஸ்திரங்களை ஏவுகிறா ராம். படம் நீண்ட நாள் தயாரிப்பில் இருந்து திரைக்குவரத் தயா ராகிறது.

# சுவலட்சுமியின் காதல்

தமிழில் 'ஆசை'படத்தின் மூலம் அறிமுகமானவர், பிரபலமானவர் சுவலட்சுமி.

தற்போது வாணி மஹால் படத்தில் விக்னேஷின் ஜோடியாக நடித்துக் கொண்டிருக்கிறார்.

சுவலட்சுமிக்கு கவர்ச்சியாக நடிக்கப் பிடிக்காது. அதனால் தயாரிப்பாளர்களும், இயக்குநர்களும் சுவலட்சுமியை நினைவில் வைத்திருப்பதில்லை.

தரமான பாத்திரங்களைத் தேடிக்கொண்டிருக்கும் சுவலட்சுமிக்கு அவை சுலபத்தில் கிடைப்பது மாதிரித் தெரியவில்லை. ஆனால் காதலர் கிடைத்துவிட்டார். யார் அந்தக் காதலர்? விக்னேஷ்தான்.

வாணிமஹாலில் இருவரும் ஈடுபாடாக நடித்துக்கொண்டிருந்தபோது ஏதோ ஒரு கணத்தில் மின்சாரம் போல் காதல் வந்துவிட்டதாம்.

முன்னர் யுவராணியோடு ராசியாக இருந்தவர் விக்னேஷ்.

தான் செல்லும் இடமெங்கும் விக்னேஷ் துரத்திவருவதாகவும், ஹோட்டலில் வந்து தங்குமாறு தொல்லைப்படுத்துவதாகவும் யுவராணி சொல்லியிருந்தார்.

யுவராணியே ஒருமாதிரித்தான். அவர்தான் என்னை வளைத்துப் போடப் பார்த்தார். அடிக்கடி போன் செய்து வீட்டுக்கு வருமாறு தொல்லை தந்தார் என்று பதிலடி கொடுத்தார் விக்னேஷ். அத்தோடு விக்னேஷ்-யுவராணி விவகாரம் பொசுக்கென்று போய்விட்டது.

இப்போது விகனேஷ் ராசியாகியிருப்பது சுவலட்சுமியுடன். அரசல் புரசலாக இந்த விவகாரம் சுவலட்சுமி வீட்டில் தெரியவந்துவிட்டதால் இரகசிய கண்காணிப்புக்கு ஆள் போட்டிருக்கிறார்களாம்.

## நாசரின் புதிய படங்கள்

பொங்கல் வெளியீடாக வந்த 'அருவா வேலு'வைத் தொடர்ந்து கமலின் 'கண்டேன் சீதையை' படத்தில் நடித்து வருகிறார் நாசர். 'கண்டேன் சீதையை' படத்தில் நாசருக்கு நகைச்சுவையான வேடம்.

ஏ.வி.எம். தயாரிக்கும் 'மின்சாரக் கனவுகள்' படத்தில் கண் பார்வையற்றவராக முற்றிலும் வித்தியாசமான வேடத்தில் நடித்துவருகிறார்.

## பின்னணி பேசிய நடிகைகள்

கமலின் 'இந்தியன்' படத்தில் நடிக்கும் இந்தி நடிகைகளான மனிஷா கொய்ராலாவுக்கும், ஊர்மிளாவுக்கும் தமிழில் பின்னணி பேசியுள்ளவர்கள் யார் தெரியுமா?

மனிஷாவுக்கு ரோஹிணி யும், ஊர்மிளாவுக்கு பானுப்பிரியாவும் பின்னணி பேசி யுள்ளார்கள்.

☆

## சுவாதியின் தத்துவம்

## ஏன் மறுத்தார்?


சோனாலி

# நக்மாவிடம் பயமா?

மனிஷா கொய்ராலாவுக்கும் நக்மா வுக்கும் எட்டாம் பொருத்தம்.

நாகார்ஜுன் விஷயத்தில் மனிஷா வோடு போட்டி போட்ட நடிகைகளில் நக்மாவும் ஒருவர்.

தெலுங்கில் நக்மாவுக்கு செல்லும் வாய்ப்புக்களை மனிஷா தனது தந்திரங் களால் தட்டிப் பறித்தது பழைய கதை.

இப்போது தமிழுக்கும் வந்துவிட்டார் மனிஷா. 'இந்தியன்' படம் நன்றாக ஓடினால் நக்மாவை தமிழிலிருந்தும் விரட்டிவிடு வாராம் மனிஷா.

நக்மாவை வளரவிட்டால் ஆபத்து. மறுபடியும் இந்திக்கு வந்து தனக்கு போட்டி யாகிவிடுவார் என்று பயப்படுகிறார் மனிஷா.

# சுனிலும் சோனாலியும்

இந்தியில் சர்ச்சைக்குரிய நடிகைகளில் ஒருவர் சோனாலி.

சோனாலியுடன் இணைந்து கிசுகிசுப்படாத இந்தி நடிகர்களே இல்லை என்று சொல்லலாம்.

தற்போது சுனில் ஷெட்டியோடு இணைந்து பேசப்படுகிறார். இருவரும் இணைந்து சிங்கப்பூர் சென்று திரும்பியிருக்கிறார்களாம்.

பம்பாயிலிருந்து புறப்படும்போது இருவரும் தனித்தனியாக கிளம்பி, சிங்கப்பூரில் சேர்ந்து கொண்டார்களாம். அங்கு ஐந்துநட்சத்திர ஹோட்டல் ஒன்றில் ஒருவாரம் தங்கினார்கள். செலவு முழுக்க சுனில் ஷெட்டியின் தலையில். உபயோகமான செலவுதானே என்கிறது பம்பாய் குறும்புவட்டாராம்.

| | | |
|---|---|---|
| அசைபோம் | ராம்கி<br>படம்:- ராஜாளி | ரேவதி<br>படம்:- மீண்டும் சாவித்திரி |
| | சுவலட்சுமி<br>படம்:- வாணி' மஹால் | |


அருண்குமார்-மந்த்ரா
படம் : பிரியம்

# ஆணவமான ஸ்ரீவித்யா

'மாமன் மகள்' படத்தில் திமிர் பிடித்த மாமியாராக நடித்தார் ஸ்ரீவித்யா. படம் நன்றாக ஓடியது. அதனால் 'கட்டப்பஞ்சாயத்து' படத்திலும் திமிர் பிடித்த பொன்னழகி நாச்சியராக ஸ்ரீ வித்யாவை நடிக்க வைத்துள்ளனர்.

பொன்னழகி நாச்சியாரின் ஆணவத்தை அடக்கும் வேலை கார்த்திக்கிற்கு. கார்த்திக்கின் ஜோடி கனகா.

விரைவில் திரைக்கு வரப்போகும் படம் கட்டப் பஞ்சாயத்து. இயக்கம்: ஆர்.ரகு.

# பிடிக்கக்கூடி...

'முறைமாப்பிள்ளை' படத்தின் பின்... நடித்து வெளிவரவுள்ள படம் 'பிரியம்'.

'முறைமாப்பிள்ளை படத்தில் அருண்கும... காட்சிகளைப் பாராட்டி ஏராளமான கல்... கடிதம் எழுதியிருந்தார்களாம்.

சென்னைக் கல்லூரி மாணவி ஒருவர் ... "இளம் நடிகர்களில் ஆண்மைத்தனமான தோ... நீங்கள்தான்" என்று பாராட்டியிருந்தாரா...

'பிரியம்' படமும் காதலும், மோதலும் நி... ரசிக, ரசிகையர்களின் எதிர்பார்ப்பை நி... படம்" என்கிறார் அருண்குமார்.

'லவ் ஸ்டோரி' என்ற படத்திலும் ... பி.வாசுவின் இயக்கத்திலும் நடிக்கிறேன். இ... இடத்தையும், பெயரையும் பிடித்துவிடு... அருண்குமார்.

'முறைமாப்பிள்ளை' படம் பார்த்துவிட்டு ... பாராட்டினாராம். சென்னை லயோலா க... இரண்டாம் ஆண்டு படித்தவர் அருண்... வாய்ப்பு தேடி வந்தமையால் படிப்பை உதறி...

…ரி விசிட்

## …கொள்கிறார் சில்பா

…ல்வியால் பிரபுதேவா மார்க்கெட் பெரிதாகப் பாதிக்கப்படவில்லை. … 'மிஸ்டர் ரோமியோ','மின்சாரக் கனவு' இரண்டும் தனது … நிறுத்தும் என்று மலைபோல நம்புகிறார்.

…ரியாக வரவில்லை. காதலனில் இருந்த சூடு 'லவ் பேர்ட்ஸில்' …ணமாம். 'கோபாலா,கோபாலா, கோபாலா கோழிக்குஞ்சு …பாலா' போன்ற பாடல்காட்சிகளில் படுசூடு. லவ்பேர்ட்ஸில் … என்கிறார்களாம் விநியோகஸ்தர்கள்.

… ரோமியோ' படத்தில் ஷில்பா ஷெட்டியை ஒரு வழிபண்ணிக் …. ஷில்பாவுக்கு நடன அசைவுகளை சொல்லிக்கொடுக்கிறார் …யாக கற்றுத்தருகிறார். படம் முடிவடைவதற்கிடையில் …டித்துவிடுவேன்" என்று தனது நடனத்திறமையை … ஷில்பா.

## …திற்காக ஒரு நகரம்

…சம்' படத்திற்காக ஒரு நகரத்தையே உருவாக்கி …. அதற்காக ஒரு கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. …ளர் குஞ்சுமோன் ஐந்து கோடி ரூபாய் பட்ஜெட் …ர். பணம் தண்ணீராய் பாய்வதால் மேலும் 2 கோடி …வப்படுமாம். கொட்டத் தயாராக இருக்கிறார்.

… ஆகியோர் நடிக்கும் பாடல் காட்சிகள் ஒவ்வொன்றும் … படத்தை தூக்கிச் சாப்பிடுவதுபோல இருக்கப் ….



பிரபுதேவா
படம் : மிஸ்டர் ரோமியோ

## சுஷ்மிதாவின் காதலர்

உலக அழகி சுஷ்மிதா சென் இந்திப் படங்களில் நடிப்பதற்காக பலவிதமான போஸ்களில் தோன்றியிருக்கிறார். பம்பாய் பத்திரிகை ஒன்றில் உடல் வனப்பு தெரியும் ஆடைகளில் தோன்றியிருக்கிறார்.

இதற்கிடையே இந்தி நடிகர் அக்ஷய்குமாரையும் சுஷ்மிதாவையும் இணைத்து பம்பாய் பத்திரிகைகள் செய்திகளை வெளியிட்டுள்ளன.

அக்ஷய்குமாரை விருந்து நிகழ்ச்சி ஒன்றில்தான் முதன்முதலாக சந்தித்தாராம் சுஷ்மிதா. இருவரும் பரஸ்பரம் அறிமுகம் செய்து கொண்டார்கள்.

அக்ஷய் குமாரின் படங்களை தான் விரும்பிப் பார்ப்பதாகச் சொன்னாராம் சுஷ்மிதா. அக்ஷய்குமாரின் உடலமைப்பையும் பாராட்டினாராம். தொடர்பு வளர்ந்தது. நட்பு இறுக்கமானது. சந்திப்புக்கள் தித்திக்க ஆரம்பித்தன. அக்ஷய்குமாரும் சுஷ்மிதா என்றால் மெழுகாக உருகுகிறார். சுஷ்மிதாவோ அக்ஷய்குமார் என்றால் பைத்தியமாக இருக்கிறார்.

இதெல்லாம் பம்பாய் செய்திகள். சுஷ்மிதா சென்னிடம் கேட்டதற்கு அவர் …பாதி மறுப்பு வெளியிட்டிருக்கிறார். "அக்ஷய்குமார் எனது நண்பர் என்பது உண்மை. காதல் என்பது பொய்" என்கிறார் சுஷ்மிதா. யாரைத்தான் நம்புவதோ?

## சுகன்யாவுக்கு மூன்று கார்

நடிகை சுகன்யாவுக்கு மூன்று கார், ஒரு பங்களா பரிசாகக் கிடைத்திருக்கிறது.

பரிசை வழங்கியிருப்பவர் தமிழக அமைச்சர் கண்ணப்பன். கோடி கோடியாக குவியும் இலஞ்சப் பணத்தில் தனது பிரிய நடிகைக்கும் பரிசு வழங்கி மகிழ்கிறார் அமைச்சர்.

சுகன்யா நடித்துள்ள 'மகாபிரபு' படம் நன்றாக ஓடினாலும் சுகன்யாவுக்கு சந்தோசமில்லை. சுகன்யாவின் தோற்றம் இளமையாக இல்லை என்று ரசிக மகா ஜனங்கள் அபிப்பிராயப்படுகிறார்களாம். அதனால் வருத்தத்தில் இருக்கிறார் சுகன்யா. பரிசுகளும், அமைச்சரும் தான் ஆறுதல்.



சுகன்யா
படம் : ஞானப்பழம்

## காதோடு சொல்லுகிறோம்

'ஐஸ்' நடிகை மறுபடியும் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டாராம். போதை மருந்துப் பழக்கம் எல்லை மீறிவிட்டதுதான் காரணம். லட்சுமிகரமான தாயாருக்கு விஷயம் எட்டாமல் இரகசியமாக வைத்தியசாலையில் சேர்ப்பித்தாராம் கணவர்.

படப் பூஜைகளுக்கு முதல் ஆளாக செல்லும் நடிகையாக மாறிவிட்டார் 'ரஞ்சித'நடிகை. வீட்டில் இருந்தால் பட வாய்ப்பு தேடி வருமோ? பூஜைக்குப் போனால் நாலு பேரின் அறிமுகம் கிடைக்கும். சரியான புளியங் கொப்பாக பிடித்து உலுக்கினால் சமபாதியம் நடக்கும் என்று நினைக்கிறார்.

'ர'என்ற எழுத்தில் பெயர் ஆரம்பமாகும் 'வாளி' நடிகை இயக்குநர் ஒருவரைக் காதலித்தாராம். இயக்குநர் காரியம் முடிந்ததும் 'டாட்டா' சொல்லிவிட்டாராம்.

தமிழில் இருந்து தெலுங்குப் பக்கம் போன 'ரம்ய'நடிகைக்கும் ரஜினியின் இஷ்டதெய்வத்தின் பெயர் கொண்ட இயக்குநருக்கும் இடையே விரிசலாம். 'சிவ'ந்த ரஞ்சனி நடிகை மீதும் இயக்குநர் கண்போட்டதால் 'ரம்ய'நடிகை கோபத்தின் உச்சியில் ஏறிவிட்டாராம்.

"மாங்காய் பாலுண்டு மலைமேலே இருப்போருக்கு தேங்காய் பால் ஏதுக்கடி?"

'பா'பிரிய நடிகை தனது சொந்தப் படத்தை இயக்கும் பொறுப்பை யாரிடம் கொடுக்கலாம் என்று யோசித்து வருகிறார். அவர் கதாநாயகியாக நடித்தால் இயக்குவதற்கு ஆள் கிடைப்பது முயற்கொம்பு தான்.



அமீர்கான்-தபு

## மினி சினி

* 'ஜல்லிக் கட்டுக்காளை'யை பிரபு நடிக்க இயக்கியவர் மணிவாசகம். இவர் மீண்டும் பிரபு நடிக்கும் படமொன்றை இயக்கவுள்ளார். இப்படத்தில் செண்பகம் கதாநாயகியாக நடிக்கிறார்.
* 'கோயமுத்தூர் மாப்ளே' படத்தினை இயக்கியவர் சி. ரங்கநாதன். இவர் அடுத்ததாக 'ஆயுதபூஜை' படத்தின் தயாரிப்பாளரான பழனிச்சாமி தயாரிக்கும் படமொன்றை இயக்கவுள்ளார்.
* கலைப்புலி எஸ். தாணு தயாரிப்பில் பிரபுதேவா கதாநாயகனாக நடிக்கும் 'மன்மதன்' படத்தில், பிரபுதேவாவுக்கு ஜோடியாக நடிக்க வைக்க டிவிங்கிள் கன்னாவை அணுகியுள்ளனர்.
* 'அம்மன் கோவில் வாசலிலே' படத்தை இயக்கி நடித்த ராமராஜன் 'தங்கம்','காளையன்' ஆகிய படங்களில் நடித்து வருகிறார். இதைத் தொடர்ந்து 'விவசாயி மகன்' என்ற படத்தை இயக்கி நடிக்கவுள்ளார்.
* 'உள்ளத்தை அள்ளித்தா' படத்தைத் தொடர்ந்து பிரபுவுடன் 'சிவசக்தி', அர்ஜுனுடன் 'செங்கோட்டை' ஆகிய படங்களில் கதாநாயகியாக நடித்து வரும் ரம்பா, 'மாஸ்டர்' படத்தில் ஒரு பாடல்காட்சியில் நடனமாடியுள்ளார்.
* எஸ்.ஏ. சந்திரசேகரன் இயக்கத்தில் விஜய் கதாநாயகனாக நடிக்கும் 'மாண்புமிகு மாணவன்' படத்தில் பொன்னியின் செல்வன் என்ற புதிய கவிஞர் ஒருவர் பாடல் எழுதியுள்ளார்.
* 'நாட்டாமை' படத்திற்குப்பின் ஆர்.பி. சௌத்திரி தயாரிப்பில் சரத்குமார் நடிக்கும் 'தர்பார்' படத்தில் சரத்குமாருக்கு ஜோடியாக நக்மாவின் தங்கை ராத்திகா நடிப்பார் என்று தெரிகிறது.
* பாலுமகேந்திராவின் 'வண்ண வண்ணப் பூக்கள்' படத்தில் இரண்டு கதாநாயகிகளில் ஒருவராக நடித்தவர் மௌனிகா. இவர் நீண்ட இடைவெளிக்குப் பின் ஒளிப்பதிவாளர் அப்துல் ரகுமான் இயக்கும் 'மனசு' படத்தில் நடிக்கிறார்.
* 'அமராவதி' படத்தின் மூலம் அறிமுகமாகிய அஜித்குமார், 'வான்மதி'யில் சொந்தக் குரலில் பேசி நடித்தார். இனிமேல் தான் நடிக்கும் படங்களில் எல்லாம். சொந்தக் குரலிலேயே பேசி நடிக்க முடிவு செய்திருக்கிறார்.
* சத்யராஜின் மனேஜர் ராமநாதன் தற்போது தயாரித்து வரும் 'தமிழ்ச்செல்வன்' படத்தை சித்திரைப் புத்தாண்டிலும் 'வள்ளல்' படத்தை இந்திய சுதந்திர தினமான ஆகஸ்ட் 15 இலும் வெளியிடத் திட்டமிட்டிருக்கிறார்.

## அனுஷாவுக்கு ரோஜா எச்சரிக்கை
### என் காதலர் எனக்கு மட்டும்தான்

ஆடை அவிழ்ப்புப் போரில் வெற்றிபெற்றுவிட்டுத்தான் மறுவேலை என்பதுபோல கலக்கிக் கொண்டிருக்கிறார் அனுஷா.

'ராஜாளி', 'இசைப்பயணம்' இரண்டிலும் போதுமானளவு ஆடைகளைத் தியாகம் செய்திருக்கிறாராம்.

ஜோதிமீனாவும், அனுஷாவும் கவர்ச்சி நடிகைகளில் புதிதாக களத்தில் குதித்துள்ள போட்டியாளர்கள்.

ஜோதிமீனாவுக்கு அம்மா ஜோதிலட்சுமி தனது பழைய அனுபவங்களை மந்திரம் போல ஓதிவிடுகிறார்.

காலையிலிருந்து மாலை வரை படப்பிடிப்பு, மாலை மயங்கிய பின்னர் பிரபல தயாரிப்பாளர்களின் அழைப்பை ஏற்று நட்சத்திர ஹோட்டலில் வலைவிரிப்பு. ஜோதி மீனாவின் நேர அட்டவணை அதுதான்.

அவருக்குப் போட்டியாக அனுஷாவும் களத்தில் இறங்கியிருக்கிறாராம். 'ராஜாளி' படப்பிடிப்பில் இயக்குநர் செல்வமணியுடன் ஒட்டப்பார்த்தாராம் அனுஷா.

அனுஷாவின் நோக்கத்தை அறிந்த ரோஜா நேரடியாகவே அனுஷாவிடம் போய் வாயால் விளாசிவிட்டாராம். "ஒழுங்காக நடிப்பதென்றால் நடி, இல்லாவிட்டால் படத்திலிருந்தே தூக்கச் சொல்லி விடுவேன்" என்று விட்டார் ரோஜா.

## மலையாளத்தில் விஜயசாந்தி

தமிழில் இருந்து தெலுங்குக்கு சென்று வெற்றிக்கொடி நாட்டியவர் விஜயசாந்தி. இப்போது தெலுங்கில் இருந்து மலையாளப் படவுலகுக்கு செல்கிறார்.

யங் டர்க் என்ற பெயரில் மலையாளத்தில் தயாராகும் படத்தில் துப்பறியும் அதிகாரியாக நடிக்கிறார். இந்தியாவில் பிரபலமாக அடிபடும் ஹவாலா ஊழலைவைத்து கதை பண்ணியிருக்கிறார்கள்.

மம்முட்டி நடித்த 'அய்யர் தி கிரேட்', மோகன்லால் நடித்த 'யுத்தம்' போன்ற வெற்றிப்படங்களை இயக்கிய பத்ரன் விஜயசாந்தியின் படத்தை இயக்குகிறார். அதனால் படத்தின் வெற்றிக்கு உத்தரவாதமிருக்கிறது.



ஆனந்தராஜ்-சங்கீதா
படம் : நிலம் பார்க்கும் நிலவு


www.padippakam.com
படிப்பகம்

# எப்பொழுதும் புத்துணர்ச்சி

## எடுப்பான அழகு கைப்படும்



✳ நடக்கையில் அன்ன நடை நமக்காக ஏற்பட்டது என்பது உணர்ந்து நடக்கவும். ஹை ஹீல் ஷு அணிவதை நிறுத்தவும். இதனால் இதயம் பலவீனமடையும். நிதானமாக நடந்தால் உடலுக்கு மிகவும் நல்லது.

✳ நிற்கும்போது நிமிர்ந்து நில்லுங்கள். பாத மையத்தில் உடல் பாரம் படியுமாறு நிற்க முயற்சிக்கவும். இவ்வாறே உட்காரும் போதும் முடிந்தவரை நேராக உட்காருங்கள்.

✳ முதுகுவலி: இது பெண்களுக்கு அடிக்கடி வரும் வியாதியாகும். தரைலிருந்து ஏதாவது எடுக்க வேண்டும் என்று வைத்துக் கொள்ளுங்கள். இடுப்பை வளைத்துக் குனிந்து எடுக்காமல் முழங்கால்களை மடக்கி அப்பொருளை எடுக்க முயற்சியுங்கள். முதுகு வலி இதனால் குறையும்: வராமலும் இருக்கும்.

✳ சமையலறையில் எந்தப் பொருளையும் உங்கள் உயரத்திற்கு ஏற்ற வகையில் இருக்கும் இடங்களில் வைத்துக் கொள்ளுங்கள். மிகவும் குனியும்படி வைத்துக் கொள்ளாதீர்கள். முதுகு வலியுள்ள பெண்கள் உணவு மேசையில் உட்கார்ந்து உணவு உண்பது நலம். இத்தகைய பெண்கள் தரையில் உட்காரும்பொழுது கால்களைக் குறுக்காக வைத்துக் கொண்டே, உட்காராமல் மடித்து வைத்துக்கொண்டு உட்காருங்கள்.

பாத்திரங்களைக் கழுவுவதோ, அல்லது துணிகளைத் தோய்ப்பதோ எதையும் உங்களுக்குச் சௌகரியமான உயரத்தில் இருந்து கொண்டு செய்யுங்கள். குழந்தைகளுக்கு நீராட்டும் பொழுதோ குழந்தையைச் சற்று உயரமான இடத்தில் உட்கார வைத்து நீங்கள் சற்றுத் தாழ்வான இடத்தில் அமர்ந்து கொள்ளுங்கள். இதனால் முதுகுவலி உள்ள பெண்களுக்கு முதுகுவலி குறையும்.

✳ பருமனாக இருப்பவர்கள் தங்கள் எடை குறைய தினமும் காலையில் ஒரு டம்ளர் வெதுவெதுப்பான வெந்நீரில் ஒரு மூடி எலுமிச்சம்பழச்சாற்றைப் பிழிந்து அதனுடன் அரைத் தேக்கரண்டி தேனும் கலந்து அருந்தி வாருங்கள். இரண்டு மாதங்களுக்குள் கண்டிப்பாக நீங்கள் நினைக்கும் அளவிற்கு எடைகுறைந்துவிடும்.

✳ உங்கள் முகத்தில் சுருக்கங்கள் இருந்தால் அவற்றைப் போக்க உதவும் கிறீம்களைப் பயன்படுத்துங்கள். அடிக்கடி முகத்தைச் சுளித்தல், முகத்தைக் கடுகடுவென்று வைத்துக்கொள்ளுதல், கோபப்படுதல், உதடுகளைக் கடித்தல் போன்ற செயல்களினால் சுருக்கங்கள் அதிகமாகும். இந்தப் பழக்கங்களை அடியோடு விட்டு விடுங்கள்.

# லேடீஸ் ஸ்பெஷல்

## கூந்தல் அழகுக்கு 'ஷேப்பர்'

### உபயோகிக்கும் முறைகள்

வாரத்திற்கு ஒருமுறை அல்லது இருமுறை அழகு நிலையங்களுக்குப்போய் இருநூறு, முந்நூறு என்று கொடுத்து விட்டு சிகை அலங்கரம் செய்து கொள்வது நல்லலுதான். கணவனின் மாதச் சம்பளத்தை மட்டுமே நம்பிக் கொண்டிருக்கும் சராசரி குடும்பத் தலைவியால் அது முடியுமா? அதுவும் இன்றைய விலைவாசியில்.....?

உங்களது கேள்வி நியாயமானதுதான்-நேற்றுவரை! தலைமுடியை அழகுபடுத்திக் கொள்ள அழகு நிலையங்களுக்குத் தான் போகவேண்டுமென்று எவ்வித அவசியமும் இல்லை. உங்கள் வீட்டிலேயே நீங்கள் சிறப்பாகச் செய்துகொண்டு விருந்து வைபவங்களுக்குப் போகலாம். பெண்டர்ஸ், கேர்லர்ஸ், ஷேப்பர்ஸ் (நீங்கள் எப்படி வேண்டுமானாலும் அழைத்துக் கொள்ளலாம்) வந்துவிட்டது.

உயர்ந்த ரக இரப்பரினால் ஆன இந்த கைக்கு அடக்கமான அழகிய ஷேப்பர்கள் பல்வேறு விதமான வடிவில் வடிவமைக்கப் பட்டுள்ளன. உங்கள் முகத்திற்கு எந்தவித சிகை அலங்காரம் பொருத்தமாக அமையும் என்பதை நீங்களே வெவ்வேறு வித ஷேப்பர்களை தலையில் பொருத்தி சோதனை ஓட்டம் நடத்தி விட்டுப் பிடித்தவற்றைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

**கவனிக்க வேண்டியவை:-**

ஷேப்பரை தலையில் பொருத்திக் கொள்வதற்கு முன்பு கவனிக்கப்பட வேண்டிய சில விஷயங்கள்: முதலில் நல்ல தரமான ஷம்புவைப் போட்டு சுத்தமாகத் தலையை அலச வேண்டும். இதமான சூடிருக்கும் நீரை தலையை அலசுவதற்குப் பயன்படுத்துவது நல்லது. பிறகு தலை முடியை நன்றாக உலர வைக்க வேண்டும். தலைமுடியின் ஏதாவது ஒரு பகுதியில் ஈரம் இருந்தாலும் ஷேப்பர்களைப் பயன்படுத்தும் போது அந்த இடத்தில் எதிர்பார்த்த சுருள் கிடைக்காது.

அடுத்து வயர் மூலம் ஷேப்பரை பிளக்கில் செருக வேண்டும். வேண்டிய அளவு சூடு ஏறியவுடன் அதிலுள்ள சிவப்புப்புள்ளி கறுப்பாக மாறும். அதாவது அப்போதுதான் ஷேப்பரை தலையில் பொருத்திக் கொள்ளச் சரியான நேரம். மின்சாரத்தைத் துண்டித்து விட்டு ஷேப்பரைத் தனியாக எடுத்து தலைமுடிக்குள் விட்டுக்கொள்ள வேண்டியதுதான். ஷேப்பரில் மின்சாரம் பாயும் போதே தலைமுடியைக் கற்றை கற்றையாகப் பிரித்துக் கொண்டு ஆயத்தமாகி விட்டால் பின்னால் பதட்டப்படாமல் கச்சிதமாகக் காரியத்தில் இறங்கும் வசதி இருக்கும். சுருட்டிக் கொண்டுள்ள தலைமுடி ஷேப்பரில் பதினைந்து நிமிடத்தில் இருந்து இருபது நிமிடம் வரை இருக்கலாம். இப்போது ஷேப்பரில் சூடு இறங்கி சாதாரண நிலைக்கு இறங்கி வந்துவிடும். அடுத்தது தலையில் இருந்த ஷேப்பரை எடுக்கும்போது மிகக் கவனமாக இருக்க வேண்டும். அவசரப்பட்டு 'வெடுக்'கென்று உருவிவிட்டால் சுருள்சுருளான மயிற்கற்றைகள் சிதைந்து விடும்.

எவ்வளவுக்கு எவ்வளவு மயிற்கற்றையை ஒரு ஷேப்பருக்குள் செருகுகிறோமோ அந்த அளவுக்கு சுருள் அருமையாக விழும். பிறகு சீப்பால் இறுதி 'டச்-அப்' செய்து விட்டால் போதும். கண்ணாடி முன்நிற்கும்போது 'நம்முடைய முடியா இது?' என்று ஒரு நிமிடம் உங்களையே பிரமிக்க வைக்கும்.

நேரம் பொதுவாக எல்லோருக்கும் ஏறத்தாழ கால் மணிநேரம் தலையில் ஷேப்பர்கள் இருந்தால் போதுமானது என்றாலும் சில பெண்களின் தலைமுடிக்கு அதிக நேரம் தேவைப்படும். எனவே முதன் முறையாக ஷேப்பர்களை உபயோகிக்கும் பெண்கள், எடுத்த எடுப்பிலேயே எல்லா ஷேப்பர்களையும் பொருத்திக் கொள்ளாமல் ஒன்றை மட்டும் எடுத்துச் செருகிக் கொண்டு கால்மணி நேரத்தில் சுருள் அழகாக விழுகிறதா என்று சோதித்துப் பார்ப்பது நல்லது. சுருள்களைக் கலைத்து விட்டு சிகை அலங்கரத்தை மாற்றிக்கொள்ள விரும்பினால் மீண்டும் ஒரு ஷம்பு குளியல் போதும்.



விசாலமான முகம், நல்ல உயரம், அதற்கேற்ற உடலமைப்பு உள்ள பெண்களுக்கு பெரிய பெரிய சுருள் அழகாக இருக்கும். சில பெண்களுக்கு அளவுக்கு அதிகமான சுருள்கள் அழகைக் கெடுத்து விடும். ஆகவே உங்கள் உயரம் முக அமைப்பு, நிறம், தலைமுடி அடர்த்தி போன்ற பல விஷயங்களை மனதில் கொண்டே ஷேப்பர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். குஷ்புவுக்கு அழகாக இருக்கும் சிகை அலங்கரம் இன்னொரு பெண்ணுக்கு அசிங்கமாக இருக்கும் என்பதை மறந்து விடக் கூடாது. சட்டென்று எந்த ஸ்ரைல் தனக்கு அழகாக இருக்கும் என்று தீர்க்கமாக முடிவெடுக்க முடியாத பெண்கள் முதல் முறை அழகு நிலைய நிபுணர்களை ஆலோசிப்பது நல்லது.

ஆக சிகை அலங்காரம் என்பது ஏதோ மேல் தட்டு நவநாகரீக யுவதிகளுக்கும், ஷில்பா ஷெட்டிகளுக்கும் தான் சொந்தம் என்பதில்லை. உங்களுக்கும்தான்!

# சிறந்த சகலதுறை ஆட்டக்காரர்கள்

## (1975-1992 வரையான உலகக்கோப்பை சாதனைப் பட்டியல்)

### துடுப்பாட்டம்

| பெயர் | போட்டிகள் | இன்னிங்ஸ் | ஆட்டமிழக்காமல் | ஓட்டங்கள் | அதிக | சராசரி | 100 | 50 | கட்ச் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ★ இம்ரான் கான் (பாகிஸ்தான்) | 28 | 24 | 5 | 666 | 102★ | 85.05 | 1 | 4 | 6 |
| ★ ஸ்டீவ் வோவ் (அவுஸ்திரேலியா) | 16 | 15 | 5 | 354 | 55 | 35.04 | 0 | 1 | 5 |
| ★ இயன் பொத்தம் (இங்கிலாந்து) | 22 | 18 | 2 | 297 | 53 | 18.56 | 0 | 1 | 10 |
| ★ கபில் தேவ் (இந்தியா) | 26 | 24 | 6 | 669 | 175★ | 37.16 | 1 | 1 | 12 |
| ★ றிச்சட் ஹாட்லி (நியூசிலாந்து) | 13 | 10 | 1 | 149 | 42 | 16.15 | 0 | 0 | 3 |
| ★ பிரைன் மக்மில்லன் (தென் ஆபிரிக்கா) | 9 | 5 | 3 | 125 | 33★ | 62.50 | 0 | 0 | 4 |
| அர்ஜுன ரணதுங்க (இலங்கை) | 19 | 18 | 4 | 594 | 88★ | 42.42 | 0 | 5 | 5 |
| ★ ஹார்ல் ஹூப்பர் (மேற்கிந்தியத் தீவுகள்) | 14 | 12 | 3 | 162 | 63 | 18.00 | 0 | 1 | 8 |
| ★ ஷா (ஸிம்பாப்வே) | 16 | 16 | 1 | 267 | 60★ | 17.80 | 0 | 1 | 3 |

# துடித்துக் கொண்டிருந்த பல கோடி நெஞ்சங்கள்

## மார்ச் 9இல் நடந்த கிரிக்கெட் போர்

மார்ச் 9ம் திகதி, பெங்களூரில் 55 ஆயிரம் இரசிகர்களால் பார்வையாளர் பகுதி நிரம்பியிருந்தது. எள் போட்டால் எண்ணெய் கிடைத்திருக்கும்.

தொலைக்காட்சிகள், வானொலிகள் முன்பாக பல கோடி இரசிகர்கள் கண்களையும், செவிகளையும் திறந்து வைத்துவிட்டு துடிக்கும் நெஞ்சங்களோடு காத்திருந்தனர்.

பூவா-தலையா போட்டுப் பார்த்ததில் ஜெயித்து, முதலில் துடுப்பாட்டத்தை எடுத்தது இந்தியா.

முதலில் துடுப்பெடுத்தாடினால் இயற்கை வெளிச்சத்தில் விளாசலாம். இரவில் செயற்கை ஒளியில் பந்துகளை கவனித்து விளாசுவதை விட சுலபம் என்பது அசாரின் திட்டம்.

**ஆரம்பம் மெல்ல...**

இந்தியா துடுப்பெடுத்தாடியபோது ஆரம்பத்தில் தூள் கிளப்பாத ஆட்டம். டெண்டுல்கர்மீதுதான் பாகிஸ்தான் அணியின் குறியிருந்தது. அதனால் அதிகம் விளாசாமல் 51 பந்தகளை சந்தித்து 31 ரன்களோடு திரும்பினார் இந்தியாவின் இளம்புயல்.

சித்துவும், ஜடோஜாவும்தான் துடுப்பாட்டத்தில் விசுவரூபம் எடுத்து விளாசித் தள்ளினார்கள். 25 பந்துகளில் 45 ரன்களை எடுத்தார் ஜடோஜா.

சித்து 93 ரன்களை குவித்தார். தனக்காக விளையாடமல் அணிக்காகவே ஆடினார். தனது பட்டியலில் மேலும் ஒரு சதம் சேர்க்க நினைத்திருந்தால் சித்து நிதானமாக ஆடி சிலபந்துகளுக்கு மட்டை போட்டிருக்க வேண்டும். ரன் விகிதத்தை உயர்த்துவதற்காக மட்டுமே விளாசியதால் அவுட்டாகிப்போனார்.

ஜடோஜாவும் அப்படித்தான். அரைச்சதம் போடும் வாய்ப்பைவிட அணியின் வெற்றியே குறியாக இருந்தது.

பந்துவீச்சு, பீல்டிங் இரண்டிலும் சமீப காலமாக இந்திய அணியிடம் காணவே முடியாத ஆவேசமும், வெறியும் காணப் பட்டதுதான் மகா ஆச்சரியம்.

ஒரு யுத்தத்தில் எதிர்த்தரப்பை இரண்டில் ஒன்று பார்த்துவிடும் வெறியை இந்திய



ஜடோஜா-விளாசல்

அணியின் பந்துவீச்சிலும், பந்து தடுப்பிலும் காணமுடிந்தது.

ஒவ்வொரு வீரரையும் கமரா குளோசப்பில் காட்டியபோது கோபக்கார போர் வீரர்கள் போல தெரிந்தார்கள்.

அனில் கும்ளே, ஸ்ரீநாத், வெங்கடேஷ் பிரசாத் மூவரும் பெங்களூர் வாசிகள். போட்டி பெங்களூரில் நடந்ததால் தோல்வியடைந்தால் அதிகம் பாதிக்கப் படுவது தாங்கள்தான் என்று மூவருக்கும் தெரிந்தே இருந்தது.


இந்திய பந்துவீச்சு, பந்து தடுப்பு, இரசிகர்களின் பலத்த ஆரவாரம் மூன்றும்தான் பாகிஸ்தானின் துடுப்பாட்ட வீரர்களை கட்டிப்போட்டு விட்டது.

இல்லாவிட்டால் 288 ரன்களை பாடிப்பாடியே அடித்துத் தள்ளிவிட்டு, வெற்றித் தேவதையோடு திரும்பியிருப்பார்கள்.

**சமபல அணிகள்**

சமபலம் மிக்க இரண்டு அணிகள் மோதும்போது, ஆவேசமும் இரு தரப்பிடமும் இருந்தால் சர்வதேச ஒரு நாள் போட்டி என்பது சூடு கிளப்பும்.

அதுவும் இந்திய-பாகிஸ்தான் போருக்குப் பின்னர் இருநாடுகளும் மோதும் கிரிக்கெட் போட்டிகள் யுத்தம் போலவே நடந்து வருகின்றன.



மியாண்டாட்-வயதான சிங்கம்

"உலகக் கோப்பை எங்களுக்கு வேண்டாம். பாகிஸ்தானை வென்றால் போதும்" என்ற சுலோக அட்டைகள் பெங்களூர் மைதானத்தில் காணப்பட்டதையும் கவனிக்க முடிந்தது.

1992 இல் ஒரு லீக் போட்டியில் பாகிஸ்தானை இந்தியா-வீழ்த்தியது. ஆனால் இறுதிப் போட்டியில் இந்தியா இடம்பெற முடியவில்லை.

இம்முறை பாகிஸ்தான் இறுதிப் போட்டியில் ஆடமுடியவில்லை.

1983 இல் உலகக் கோப்பையை வென்ற இந்தியா 1992 இல் இறுதிப்போட்டிக்கு செல்லவில்லை. 1992 இல் கிண்ணத்தைக் கைப்பற்றிய பாகிஸ்தான் இம்முறை-96 இல் இறுதிப்போட்டிக்கு செல்ல முடியவில்லை.

**உறுதியான அடி**

பாகிஸ்தானின் பந்து வீச்சும், துடுப்பாட்ட வரிசையும் பலமாகத்தான் உள்ளன.

முதல் பதினைந்து ஓவர்களில் இந்திய இரசிகர்களையே மௌனிக்க வைத்துவிட்டு விளாசித் தள்ளியது பாகிஸ்தான்.

இந்திய வீரர்களைவிட பாகிஸ்தான் துடுப் பாட்ட வீரர்களது அடி உறுதியானது. ஓங்கி விசையாக அடிப்பதில் கெட்டிக்காரர்கள். பந்து அலறிக்கொண்டு பவுண்டரிக்கு பறந்துவிடும்.

பாகிஸ்தானின் பலவீனம்:- அதிகளவான தன்னம்பிக்கை. இந்திய அணி எந்நேரமும் கிளர்ந்தெழக்கூடிய அணி என்பதை கணிப்பிடத்தவறியது.

அதற்கு ஒரு உதாரணம்: வெங்கடேஷ் பிரசாத் வீசிய பந்தை அமீர் சொகைல் பவுண்டரிக்கு விரட்டிவிட்டு 'அடியைப்பார்' என்று வெங்கடேசுக்கு காட்டினார். வெங்கடேஷ் வீசிய அடுத்த பந்தில் அமீர் சொகைல் 'கிளீன் போல்ட்'.

சலீம் மாலிக்கும், மியாண்டாட்டும் எதிர் தரப்பு உசுப்பேற்றப்பட்டுவிட்டதை உணர்ந்து கொண்டு பொறுப்போடு ஆடினார்கள். மியாண்டாட் அணிக்காக இறுதிவரை சளைக்காமல் போராடும் கிரிக்கெட் போராளி. ஆனாலும் சிங்கத்திற்கு வயதாகிவிட்டது-38 வயது.

'வைட்' பந்து என்று மியாண்டாட் அப்பீல் செய்ய, நடுவர் கொடுக்கவில்லை. உடனே பழைய மியாண்டாடாக மாறி, கேலியாக அபிநயம் செய்துகாட்டினார் மியாண்டாட்.

இந்திய இரசிகர்கள் பாகிஸ்தான் அணி பீல்டிங் செய்தபோது கல்லெறிந்தது சுத்தமான அநாகரிகம்.

அரை இறுதியில் வெற்றி பெற்றால் பாகிஸ்தான் சென்றுதான் இந்திய அணி ஆடவேண்டியிருக்கும் என்பதை இந்திய இரசிகர்கள் மறந்து போய்விட்டனர்.

ஆட்டம் படு சூடாக இருந்தமையால் கமராக்களும் சூடு தாங்காமல், பார்வையாளர் வரிசையில் இருந்த இரசிகைகள் மீது அடிக்கடி பட்டுத்திரும்பின. ஒரே ஒரு குளிர்ச்சியான விஷயம் அதுதான்.


**இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?**
**காரைதீவு வாசகிக்கு அதிஷ்டம்**

இவ் வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்.
திருமதி. ஜெஸ்மின் பைஸர்.
304, "ஜெஸ்மின் மன்ஸில்",
மாளிகைக்காடு-02, காரைதீவு-(கி.மா).

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.
அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!
இவ்வாரம் பரிசுக்குரியவர் மார்ச் 30ம் திகதிக்கு பின்னர் முரசு அலுவலகத்தில் காலை 12 மணி முதல் 4 மணிக்கு முன்னர் வந்து (ஞாயிறு, புதன் தவிர) பட்டுச்சேலையை பெற்றுச் செல்லலாம்.

முகவரி: இல 5, காலிங்க பிளேஸ், கிருலப்பனை, கொழும்பு-06.



**பட்டுச் சேலை பரிசுத் திட்டம்**
**மகளிர் மட்டும் மகளிர் மட்டும்**



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கபடுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.
★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)
★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** F
பெயர்:............................
முகவரி:............................
............................
கையொப்பம்:............................
**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப் படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 23-03-1996
அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

www.padippakam.com

## பாலைவனம்

இருவிழிக் கவிதையால்
நெஞ்சள்ளிப்போன
தூண்டில்காரி—நீ!
●+●
கனவுகள் களைந்து
நிஜம் துடைத்து
இதயம்—
நனைத்தவளே!
●+●
மல்லிகையில் புகுந்து
தேன்குடித்து
முத்தமிடத்தான் ஆசை!
●+●
சிநேகிதி—நீ
கண்ணுக்கும்
கண்ணிருக்கும்
மில்லிமீட்டர் தொலைவில்— —
●+●
உன்
இருதய துண்டுகளில்
சிதறிய வாழ்க்கை!
●+●
உன் சிரிப்பு துண்டுகள்
என் உயிரில் முன்னேற்றிவிட்டது!
●+●
என் உயிர் போகும் போது
உயிர் அணுக்களுக்கு—
ரத்தப்பாலூட்டி
உன் நினைவுகளில்
ஓர்ரத்த தாஜ்மஹால்
வரைவேன்!!
●+●
நீ மௌனத்தை
சுவாசிக்கிறாய்;
நான் மரணத்தை
வாசிக்கிறேன்!
●+●
ஏன்—நீ
இன்னும்
அணைந்த தீபமாய்......!
●+●

எம்.ஏ-தஸ்ரீப், அக்கரைப்பற்று.

## இறுதி மடல்

அம்மணி....!
ஏன்
இந்தக் கோபம்?
இதுவரை
அனுப்பிய மடலுக்கு
ஏன்
பதிலிடவில்லை.
***
பல
நாட்களாக
மணிக்கணக்காக
காத்திருந்த — எனக்கு
கிடைத்தது
ஏமாற்றம் — நம்
நாட்டின்
சமாதானம் போல....!
***
பாடம் மறந்து
பாடல் மறந்து
காத்திருந்தேன் — உன்
மடலுக்காக
நீரிடைப்
பாசி போல!
***
இனியும்
என்னால்
காத்திருக்க முடியாது.
விரைவில்
அனுப்பிவிடு
உன்
இறுதி மடலை.
***

எஸ்.ஸ்ரீ,மன்னம்பிட்டி.

## காதலி

சம்மதம்
தரும் வரை
தெய்வம்
திருமணம்
முடியும் வரை
தேவதை.
***
சிலருக்கு
துன்பத்தில் ஒரு
இன்பம்
பலருக்கு
இன்பத்தில் ஒரு
துன்பம்!
***
தொட்டால்
விடுவது கடினம்.
தொடாமல்
தொடர்வது கடினம்!
***
எம்.சுரேஷ்.

## மனதுருக்கம்

தூறல் மழையிலும்
கோரவெயிலிலும்
மூங்கில் வரிசையில்
முண்டியடித்து மோதி
ஒரு வேளை
உணவுக்காக
உருக்குலைந்து நிற்கும்
அகதிகள்..............!
**
மனித உடல்களில்
குண்டுகளின் உறவுகளால்
நெஞ்சு விறைக்க
புலம்பி அழும்
உறவுகளின் ஒப்பாரி
ஓசைகள்..........!
**
மருத்துவம் செய்து
மரத்துப் போன
சரீரங்கள்
உயிரை எடுமென்று
உரத்துக் கத்தும்
நோயின் பயங்கரங்கள்!
**
யாரோ
இன்புற்றிருக்க
இத்தேசத்துக்கு
இலவசமாய் கிடைத்த
அநாதைகள்
அடைக்கலம் தேடி,
ஆதரவு தேடி
அலைந்து திரியும்
பரிதாபக் காட்சிகள்..!
ஓ.................!
எத்தனை எத்தனையோ
அவலங்கள்..........
**
இந்தத்
தேசம்
அனுதினமும்
செத்துக் கொண்டு
இருக்கிறது...................!

** —சகோ.எஸ்.யேசுநாதன் செங்கலடி.

## தேன் கிண்ணம்

## கவிதை மடல்

இன்றும் நான்
உனக்கொரு கடிதம் எழுதுவேன்!
**
நான் திறந்து கொட்டிய
என் நெஞ்சத்தை அணைத்து,
கசக்கி கசக்கி;
முத்தமிடுவாய் உச்சவெறியில்....
**
உன் மடல் பிரித்து
நான் படித்து முடிக்கையில்,
நிலா உடைந்து
என் காலில் குத்தும்;
விழிகள் ததும்பும்
கொதி நீராய்!
**
என் பிரிய தோழி!
இரவின் கல்லறைக்குள்
நீ சுவாசிக்கும் காற்றாய்,
என் கவிதைகளை படித்துக் கொள்.
**
என் மனசின் இறுக்கமும்
தளர்ந்து போகும்,
இனிவரும் உன்பதில் மடலில்
எழுதுவாய்தானே
உன் இதயம்விரித்து?
**

அறபா-ஷமீனா ஜெலீல்

## விதி

ஞாயிறு தவறாமல்
கோவிலுக்கு போனோம்...
திங்கட்கிழமைகளில்
தருமங்கள் செய்தோம்...
●●●
செவ்வாயும் புதனும்
புனித நாட்களாக
வழிபட்டோம்...
●●●
வியாழன் வெள்ளி
தவறாமல்
விரதமிருந்தோம்...
●●●
எல்லா நாட்களிலும்
நன்மைகள் செய்தோம்...
●●●
சனிக்கிழமை—
'செல்' விழுந்து
செத்துப் போனோம்.
●●●

அ.டக்ளஸ் ஜேய செகரன்,
வவுனியா.

## தொடரும் துவம்சங்களால்....!

மனிதங்களின்
சிரிப்பொலி கேட்ட
நம்
தேசத்தில்
துப்பாக்கி நாய்களின்
குரைப் பொலி!
*
அதனால்தான்
இப்போ
இலையுதிர்காலம்
இல்லாமலாகி
கொலை யுதிர்காலம்
உண்டாகியிருக்கின்றது.
*
எமது தேசத்தில்
மனிதாபிமானம்
மரணமாகி
அராஜகங்களே
ராஜ்யம்
அமைத்துக் கொண்டுள்ளது!
*



இன்று
பயணிப்பவர்கள் கூடத்தான்
தங்கள்
உயிர்களை
பணயம்வைத்தாக வேண்டிய
அபாக்கிய நிலை!
*
தென்றல்கூட
இரத்த வாடைகளையே
பெரிதும்
அள்ளிக்கொண்டுவந்து
சுவாசத்தில் சொரிகின்றது!
*
இப்போ
படு கொலைகளே
பெரிதும்
மலிவாகிப்போனதால்
இயற்கை மரணங்கள்
அரிதாகிப்போனது!
*
மனிதவிழுமியங்கள்
தொடர்ந்து
துவம்சம் செய்யப்படுவதான
இந்நிகழ்வுகளால்தான்
மனித
விழிகள் கூட
இன்று
இரத்தச் சிவப்பேறிப் போனது!
*

காவத்தமுனை ஹாறூன்

## மூன்று முதல்வர்கள்



படத்தில் உற்றுப்பாருங்கள் மூன்று முதல்வர்கள் இருக்கிறார்கள். மூவரும் திரையுலகில் இருந்து மாநில முதல்வரானவர்கள். 1. மு.கருணாநிதி 2. என்.டி.ராமராவ். 3.எம்.ஜி.ஆர். எம்.ஜி.ஆர் தி.மு.கவில் இருந்தபோது அவர் கலைஞர் கருணாநிதியின் நண்பர். படப் பூஜை ஒன்றில் எடுக்கப்பட்ட படம். அரிதான படம்தானே!

## ஐந்து தடவை ஒரே முறை

உலகக்கோப்பை போட்டிகளில் இதுவரை 5 விக்கெட்டுக்களை ஒரே போட்டியில் கைப்பற்றியவர்கள் விபரம்:

ஒருவர் கபில்தேவ். 1982 இல் 43 ரன்களுக்கு 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினார் கபில்தேவ்.

1982 இல் அவுஸ்திரேலிய அணிவீரர் சென்மெக்லேன் 39 ரன்களுக்கு 6 விக்கெட்டுக்களை சாய்த்தார்.

இலங்கையின் பந்து வீச்சாளர் டி மெல் 39 ரன்களுக்கு 5 விக்கெட்டுக்களையும். பாகிஸ்தானின் சாதர் 44 ரன்களுக்கு 5 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்கள்.



## இதுவரை மூன்று முறை



உலகக் கோப்பை போட்டியில் இதுவரை மேற்கு இந்திய அணியும், இங்கிலாந்து அணியும் தலா மூன்று முறை இறுதி ஆட்டத்தில் விளையாடி உள்ளனர். ஆனால் இங்கிலாந்து அணி இதுவரை ஒருமுறைகூட கோப்பையைக் கைப்பற்றவில்லை. இத்தனைக்கும் கிரிக்கெட்டை உலகுக்கு அறிமுகப்படுத்தியது இங்கிலாந்துதான். இம்முறையும் இங்கிலாந்துக்கு கோப்பை கிடைக்கப்போவதில்லை.

மேற்கிந்திய அணி இதுவரை இரண்டுமுறை உலக கோப்பை வென்றுள்ளது. இனி எப்போதுதான் வெல்லப்போகிறதோ?!

## குமார புரம்

தமிழன்மேல் சாதித்ததில்
இன்னோர் மைல்கல்.
*
இனப்பிரச்சினைக்கு(?)
தீர்வு கூறப்பட்ட
இடம்.
*
உழுது களைத்தவரின்
களைப்பகற்ற
இரத்த நடனம்.
*
புலிகள் செய்யலாம்
நாங்கள் செய்ய கூடாதா?
கேட்கலாம்.
*
நீங்கள்தான் சொன்னீர்கள்:
"அவர்கள் பயங்கரவாதிகள்"
அப்படித்தான் செய்வார்கள்.
*
"நீங்கள்"
நாட்டை காப்பவர்."
எப்படி நம்புவது?
*
நடந்து முடிந்தது.
இருவருக்கும் தெரியாது
"சுதந்திர ஊடகம்"
*
ஐ.நா பாராட்டு,
மனித உரிமை
முன்னணி நாடு
யாருக்கு வேணும்.
*
மரணச் சடங்கு
செலவும்
விசாரணை கமிசனும்
உயிரை மீட்குமா?
*
கண்ணுக்கு கண்
காதுக்கு காது
பல்லுக்கு பல்லு
தீர்வாகுமா?
* சுபாவரன், கண்டி.

## கஷ்டமான கவிதை

சா...
இப்பதான் நீ
கடுமையான அழகு
= 0 =
தாமரை இலையில்
வெண் பனித்துளிபோல
என்ன மாத்தான்
உருளுது
உன் விழிகள்
= 0 =
அந்த
நாவல் தாவணியும்
குங்கும உதடும்
சந்தன நிறமும்
உனக்கு
எடுப்பாத்தாவிருந்தது
= 0 =
அத
நெனைக்க நெனைக்க
என் மனசும் துடித்துதுடித்து
அந்துவிழப்பாக்குது
= 0 =
பின்னேரம்
உன்னை பார்க்கவராமல்
சும்மாவாவது
கிடந்திருக்கலாம்
= 0 =
சீ போ..
ரெண்டும் கெட்டான் நேரத்தில்
ஓடிவந்து
கனவுகளில் தொட்டுப்பார்ப்பதும்
உணர்வுகளில் எட்டிப்பார்ப்பதும்
= 0 =
இந்த
திண்டான் பாஞ்சான்
சரசம்
மனசுக்கு கஷ்டம் தான்
= 0 =

ஸாபிறா ஏ மஜீத்,
அக்கரைப்பற்று-01

## இந்த வாரம் உங்கள் பலன்

( 17.03.96 முதல் 23.03.96 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| மீனம் | - சூரியன், புதன், கேது, செவ்வாய். |
| மேடம் | - வெள்ளி. |
| கன்னி | - இராகு. |
| தனு | - வியாழன். |
| கும்பம் | - சனி. |

சந்திரன்- கும்பம், மீனம், மேடம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### மீனம்:

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பணவரவு குன்றும், மனக் கலக்கம். | பி.ப. 2 மணி |
| திங்கள்- வீண் முயற்சி, பணச் செலவு. | மு.ப. 9 மணி |
| செவ்வாய்- துயர் நீங்கும், பிரயாண மிகுதி. | பகல் 12 மணி |
| புதன்- அந்நியர் சகவாசம், மனக் கலக்கம். | பி.ப. 1 மணி |
| வியாழன்- தொழில் சிறப்பு, பணவரவு. | காலை 6 மணி |
| வெள்ளி- புதிய முயற்சி, இனசன நன்மை. | பகல் 12 மணி |
| சனி- பொருள்வரவு தடை, செலவு மிகுதி. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்- வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### மேடம்:

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, பணவரவு. | பி.ப. 1 மணி |
| திங்கள்- பயனுள்ள செயல், கௌரவம். | காலை 6 மணி |
| செவ்வாய்- அந்நியர் சகவாசம், உயர்ந்த நிலை. | பகல் 12 மணி |
| புதன்- வெளியிடப் பயணம், மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| வியாழன்-காரியானுகூலம், பணவரவு. | காலை 7 மணி |
| வெள்ளி- தொழில் மந்தம், பணச் செலவு. | பகல் 12 மணி |
| சனி- அந்நியர் உதவி, மன மகிழ்ச்சி. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

### இடபம்:

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, கௌரவம். | பி.ப. 2 மணி |
| திங்கள்- புதிய முயற்சி, பணச் செலவு. | காலை 7 மணி |
| செவ்வாய்- வெளியிடப் பயணம், மனக் கலக்கம். | பகல் 12 மணி |
| புதன்- பொருள் வரவு, காரிய சித்தி. | காலை 6 மணி |
| வியாழன்- தொழில் சிறப்பு, பணவரவு. | பகல் 12 மணி |
| வெள்ளி- வீண் கலக்கம், உறவினர் பகை. | பி.ப. 1 மணி |
| சனி- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### மிதுனம்:

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பொருள் வரவு, இனசன நன்மை. | காலை 7 மணி |
| திங்கள்- அந்நியர் உதவி, உயர்ந்த நிலை. | பகல் 12 மணி |
| செவ்வாய்- பெரியோர் பகை, மனக் கலக்கம். | காலை 6 மணி |
| புதன்- துயர் நீங்கம்,. வீண்குறை கேட்டல். | பகல் 12 மணி |
| வியாழன்- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | மு.ப. 9 மணி |
| வெள்ளி- தெய்வானுகூலம், காரியசித்தி. | பகல் 12 மணி |
| சனி- பொருள் வரவு, செலவு மிகுதி. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### கும்பம்:

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | பி.ப. 2 மணி |
| திங்கள்- இனசன நன்மை, மனக் கலக்கம். | காலை 6 மணி |
| செவ்வாய்- உயர்ந்த நிலை, பொருட் செலவு. | பகல் 12 மணி |
| புதன்- வெளியிடப் பயணம், கௌரவக் குறைவு. | காலை 8 மணி |
| வியாழன்- தொழில் மந்தம், பணச் செலவு. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- வீண்குறை நீங்கும், மன மகிழ்ச்சி. | காலை 6 மணி |
| சனி- அந்நியர் உதவி, பணவரவு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-3

### மகரம்:

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பொருள் வரவு, காரியானுகூலம். | பி.ப. 2 மணி |
| திங்கள்- வீண் மனஸ்தாபம், தொழில் விருத்தி. | காலை 7 மணி |
| செவ்வாய்- அந்நியர் உதவி, மன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| புதன் - புதிய முயற்சி, உறவினர் உதவி. | மு.ப. 9 மணி |
| வியாழன்- தொழில் மந்தம், கௌரவக் குறைவு. | பகல் 12 மணி |
| வெள்ளி- பிரயாண மிகுதி, மனக் கலக்கம்.. | காலை 7 மணி |
| சனி- காரிய சித்தி, செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம்-5

### கர்க்கடகம்:

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, முயற்சி மேன்மை. | மு.ப. 9 மணி |
| திங்கள்- இனசன நன்மை, கௌரவக் குறைவு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- முயற்சி பலிதம், தொழில் விருத்தி. | காலை 7 மணி |
| புதன்- தொழில் மந்தம், பணச் செலவு. | பி.ப. 1 மணி |
| வியாழன்- வீண் மனஸ்தாபம், பயனற்ற செயல். | காலை 7 மணி |
| வெள்ளி- அந்நியர் சகவாசம், மன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| சனி- துயர் நீங்கும், கௌரவம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-2

### சிம்மம்:

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், பணச் செலவு. | காலை 6 மணி |
| திங்கள்- வெளியிட வாழ்க்கை, உறவினர் பகை. | பகல் 12 மணி |
| செவ்வாய்- செய்தொழில் விருத்தி, பணவரவு. | காலை 7 மணி |
| புதன்- செலவு மிகுதி, காரியத் தடை. | பி.ப. 1 மணி |
| வியாழன்-மனக்குறை நீங்கும், வீண் முயற்சி. | மு.ப. 9 மணி |
| வெள்ளி- புதிய முயற்சி, செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| சனி- பொருள் வரவு, கௌரம். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-7

### தனு:

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் பேறு, பணவரவு. | பகல் 12 மணி |
| திங்கள்- பெரியோர் உதவி, முயற்சி பலிதம். | மு.ப. 9 மணி |
| செவ்வாய்- துயர் நீங்கும், இனசன நன்மை. | பி.ப. 1 மணி |
| புதன்- தொழில் மந்தம், பணச் செலவு. | மு.ப. 9 மணி |
| வியாழன்-வீண் குறை கேட்டல், மனக் கலக்கம். | பி.ப. 2 மணி |
| வெள்ளி- பொருள் வரவு, மன மகிழ்ச்சி. | மு.ப. 9 மணி |
| சனி- புதிய முயற்சி, பொருள் செலவு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### விருட்சிகம்:

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் கஷ்டம், பணச் செலவு. | காலை 6 மணி |
| திங்கள்- அந்நியர் சகவாசம், மனப்பயம். | பகல் 2 மணி |
| செவ்வாய்- பயனுள்ள செயல், தொழில் விருத்தி. | மு.ப. 9 மணி |
| புதன்- புதிய முயற்சி, மனக் கலக்கம். | பி.ப. 1 மணி |
| வியாழன்- வெளியிடப் பயணம், இனசன நன்மை. | காலை 6 மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| சனி- துயர் நீங்கும், மன மகிழ்ச்சி. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

### துலாம்:

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, பணவரவு. | பகல் 12 மணி |
| திங்கள்- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- இனசன நன்மை, கௌரவம். | மு.ப. 9 மணி |
| புதன்- புதிய முயற்சி, செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| வியாழன்- துயர் நீங்கும், பெரியோர் உதவி. | காலை 6 மணி |
| வெள்ளி- உயர்ந்த நிலை, மனக் கலக்கம். | பி.ப. 2 மணி |
| சனி- வீண் மனஸ்தாபம், துயர் அதிகம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### கன்னி:

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, தொழில் சிறப்பு. | பகல் 12 மணி |
| திங்கள்- வீண் மனஸ்தாபம், பிரயாணத் தடை. | மு.ப. 9 மணி |
| செவ்வாய்- பொருள் நஷ்டம், கௌரவக் குறைவு. | பி.ப. 2 மணி |
| புதன்- தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை. | பி.ப. 1 மணி |
| வியாழன்- அந்நியர் சகவாசம், பணச் செலவு. | பகல் 12 மணி |
| வெள்ளி- புதிய முயற்சி, மனப்பயம். | காலை 7 மணி |
| சனி- துயர் நீங்கும், மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5


படிப்பகம்

www.padippakam.com





## சிந்திக்கலாம் இங்கே

★ மனிதனைக் கண்டு அஞ்சவேண்டும், ஏன்? மற்ற மிருகங்களை பழக்கிவிடலாம். இந்த மிருகத்தைப் பழக்க முடியுமா?

**பெர்னாட் ஷா**

★ மனிதன் சுதந்திரமானவன் என்பது முழுப் பொய். அவன் தூங்கும் போதுங்கூட சுதந்திரமாக இல்லை. எவ்வித அபாயமும் இல்லாத சுற்றுச்சார்பை உண்டாக்கிக் கொண்டுதான் தூங்குகின்றான்.

**-மார்க்சிம் கார்க்கி**

★ எவன் தனக்குத் தான் கட்டுப் பாடுகளை ஏற்படுத்திக் கொள்கிறானோ அவனே சுதந்திர மனிதன்.

**-மகாத்மா காந்தி**

★ மனிதன் ஒருவன் தான் சிரிக்கும் தகுதி பெற்றவன் என்கிறார்கள். அதே நேரத்தில் பிறர் பார்த்துச் சிரிக்கத்தகும் நிலை பெற்றுள்ளவனும் அவன் தான்.

**-கிரிவிலே**

★ தன்னுடைய சொந்த வாழ்க்கையில் அடிக்கடி ஏற்படுகின்ற அனுபவங்களால் மட்டுமல்ல; பிறருடைய அனுபவங்களாலும் பாடம் கற்கும் பிராணி மனிதன் ஒருவனே.

**-டெனிக் லாண்ட்**

தொகுப்பு:- கந்தப்பெருமாள் நிமலதாசன் மட்/மாங்காடு.

ஞேயம் காத்தல் செய்! தன்மை இழவேல்!
தாழ்ந்து நடவேல்! திருவினை வென்று வாழ்!
தீயோர்க்கு அஞ்சேல்! துன்பம் மறந்திடு!
தூற்றுதல் ஒழி! தெய்வம் நீ என்றுணர்!

-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# சிறு துரும்பும்....

ஒரு முறை காட்டில் மழை பெய்யாததால் மரம், செடி, கொடிகள் வாடிக் கருகின. நீர் நிலைகள் வற்றி விலங்குகள் தவித்தன; இறந்தன. பறவைகள் நான்கு திக்கிலும் பறந்து சென்று செழிப்பான இடத்தைத் தேடின.

அப்படிச் சென்ற பறவைகளில் ஒரு சோடி கழுகுகளும் இருந்தன.

இரண்டு கழுகுகளும் வெகுதூரம் பறந்து தாங்கள் கூடு கட்டி, முட்டை யிட்டு, குஞ்சு பொரித்து குதூகலமாகக் குடும்பம் நடத்தத் தகுதியான மரம் இருக்கிறதா என்று தேடிப்பார்த்துக் கொண்டு வரும்பொழுது, ஒரு தோப்பு அவற்றின் பார்வையில் பட்டது.

தோப்பில் நிறைய மரங்கள் இருந்தன. அவற்றில் ஒரு மரம் கொப்பும், கிளையுமாக செழித்து வளர்ந்திருந்தது. ஆனால் அது வயதான மரம்.

அம்மரத்தில் கூடு கட்டலாமென்று இரு கழுகுகளும் தீர்மானித்தன. அதன் படியே பலமான குச்சிகளைக் கொண்டு வந்து கூட்டைக் கட்டின. கூடு பலமாக, பாதுகாப்பாக இருப்பதை உறுதி செய்து கொண்டன. அங்கு முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கலாமென்று அவை பேசிக் கொண்டன.

அப்போது அம்மரத்தடியில் வளை தோண்டி வசிக்கும் எலி ஒன்று வெளியே வந்து, மேலே கூடு கட்டிக் கொண்டிருக்கும் கழுகுகளைப் பார்த்தது. அதன் முகத்தில் கவலை குடிகொண்டது.

"கழுகுகளே! மேலே என்ன செய்கிறீர்கள்?" என்று கேட்டது எலி.

"கூடு கட்டுகிறோம்!" என்றது ஆண் கழுகு.



"இந்த மரத்திலேயே தங்கப் போகிறீர்களா?" என்று தொடர்ந்து கேட்டது எலி.

"ஆமாம். அதற்காகத்தான் கூடு கட்டுகிறோம். தங்குவதோடு, முட்டையிட்டுக் குஞ்சும் பொரித்துக் கொள்ளப்போகிறோம்!" என்றது பெண் கழுகு.

"நீங்கள் கூடு கட்டிக் குஞ்சு பொரிப்பது பற்றி மிகவும் சந்தோஷம். ஆனால்....?" என்று இழுத்தது எலி.

"என்ன ஆனால் என்று இழுக்கிறாய்?" என்று கேட்டது ஆண்கழுகு.

"நீங்கள் வேறு ஒரு மரத்தில் கூடு கட்டக்கூடாதா?"

"ஏன் இந்த மரத்திற்கு என்ன?"

"இந்த மரம் வயதான மரம். நான் இதன் கீழ் பூமி தோண்டி வசிக்கிறேன். அதனால் இம்மரத்தின் வேர் எப்படிப்பட்டது என்று எனக்குத் தெரியும். இம்மரம் பார்ப்பதற்கு பெரிதாக இருக்கிறதே தவிர, இதன் வேர்கள் எல்லாம் பூமியில் பலம் குன்றியுள்ளன. இம்மரம் ஒரு காற்றைக் கூடத் தாங்குமா என்பது சந்தேகம்தான். அதனால் தான் சொல்கிறேன்" என்றது எலி.

"நாங்கள் இங்கே தான் கூடு கட்டிக் குஞ்சு பொரித்து இருப்போம். அற்ப ஜீவன் நீ! யோசனை கூறவோ, அறிவுரை கூறவோ உனக்கு என்ன தகுதி இருக்கிறது?" என்றது ஆண் கழுகு.

"ஏதோ எனக்குத் தெரிந்ததைச் சொன்னேன். கேட்டால் கேளுங்கள். கேட்காவிட்டால் போங்கள்!" என்றது எலி.

"அதிகமாகப் பேசினால், உன்னையே கொத்திச் சாப்பிட்டு விடுவேன். வாயை மூடிக்கொண்டு போ!" என்ற கழுகுகள், எலியின் மீது ஆக்ரோஷமுடன் 'சர்'ரென்று பறந்து வந்தன.

எலி வளைக்குள் பாய்ந்து அவைகளிடமிருந்து தப்பி விட்டது.

கழுகுமுட்டை இட்டு, குஞ்சுகள் பொரித்தன. ஆண் கழுகும், பெண் கழுகும் குஞ்சுக் கழுகுகளைப் பார்த்துப் பார்த்து மகிழ்ந்தன.

சில நாட்கள் சென்றன.

ஒரு நாள் முதலில் லேசாக ஒரு காற்று வீசிற்று. பிறகு அது கொஞ்சம் பலமாயிற்று. பின்னர் புயலாக உருவெடுத்தது.

கழுகுகள் கூடு கட்டிக் குஞ்சு பொரித்திருந்த மரத்தின் வேர்கள், எலி சொன்னது போல் பலம் அற்றுப் போயிருந்ததால், புயலின் வேகத்தைத் தாக்குப் பிடிக்க முடியாமல், கீழே சாய்ந்தது. அதில் கூடு கட்டியிருந்த ஆண், பெண் கழுகுகளும், குஞ்சுக் கழுகுகளும் ஒரே நேரத்தில் நசுங்கி இறந்து போயின.

## வாரம் ஒரு நாடு

## மக்காவோ

தலைநகர்- மக்காவோ
பரப்பு- 15.5 சதுரகிலோ மீட்டர்.
மொழி- போத்துக்கீஸ், கான்டோனீஸ்.
எழுத்தறிவு- 99%
சமயம்- கோன்ஃபிஸியானிசம்
நாணயம்- படாகா
தனிநபர் வருமானம்- 13,527 டொலர்



**அமைவிடம்:**

மக்காவோ தென் சீனாவில் கான்டோன் ஆற்றின் முகத்துவாரத்தில் அமைந்த போர்த்துக்கேய மேலாண்மையுள்ள சிறிய தீவாகும். தைபா, கோலோன் ஆகியவற்றை உள்ளடக்கியது.

**வரலாறு:**

1974 இல் உருவாக்கப்பட்ட ஒரு ஒப்பந்தத்தைத் தொடர்ந்து மக்காவோ, போர்த்துக்கேய ஆளுகைக்குட்பட்ட ஒரு சீனப்பகுதியானது. போர்த்துக்கேய அரசியலமைப்புச் சட்டப்படி இது ஒரு சுதந்திர நாடாக இயங்குகிறது. சீனா இதற்கு சம்மதித்துள்ளது. கவர்னரை போர்த்துக்கல் அதிபர் நியமிக்கிறார். 1999இல் மக்காவோ சீனாவின் ஆதிக்கத்திற்குட்படும்.

**பொருளாதாரம்:**

மக்காவோ தங்க விற்பனையில் சுதந்திரமான சந்தையினை உடையது. இது கள்ளக் கடத்தலுக்கும், சூதாட்டத்திற்கும் பெயர் பெற்ற நாடாகும். தீப்பெட்டித் தொழிற்சாலை, வெடி மருந்துகள், பிளாஸ்டிக், நெசவாலை, புகைப்படப்பெட்டிகள், தொலை நோக்கிகள் தயாரிப்பு எனத் தொழிற்துறை மிகக் குறுகிய அளவுடையது. விவசாயம் சில இடங்களில் மட்டும் நடைபெறுகிறது. சுற்றுலா முக்கிய வருமான மூலம்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 23.03.1996.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 133
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 131

**பரிசுக்குரியவர்:**
செல்வன். முகமட் பாஹிம்
நுரைச்சோலை, புத்தளம்.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| பி. ஜெஸ்மின். நல்லாயன் கன்னியர் மடம், கொட்டாஞ்சேனை. | முகமட் ஸிபான். கிண்ணியா-06 |
| எஸ். ஹரி பிரசாத். கோணேஸ்வர இந்துக்கல்லூரி, திருமலை. | எம். ரேணுகா. விஜயரத்தினம் மகா வித்தியாலயம், நீர்கொழும்பு. |
| செல்வி அருஸியா அபூபக்கர். மருதமுனை, கல்முனை. | செல்வி கதீஜா அன்வர். மாபொல, வத்தளை. |
| கே. துஷ்யந்தி. தமிழ் மத்திய கல்லூரி, அப்புத்தளை. | செல்வி ஆர். நிரோஷா. வடகரை வீதி, திருகோணமலை. |
| பி. வேணு லட்சுமி. மெதடிஸ்த கல்லூரி, கொள்ளுப்பிட்டி. | முகமது ரிஸ்வான். சாஹிரா தேசிய கல்லூரி, புத்தளம். |

## விடுகதைகளும் விடைகளும்

1. இரண்டு தட்டுக் காரியவள்; என்றும் நியாயம் பேசுவாள். அவள் யார்?
2. வெள்ளரிக்காய் விதைகள் சின்ன வீட்டு வாசலிலே முளைத்திருக்கு. அது என்ன?
3. ஆசாரி செய்யாத கூண்டு. அது மூடித்திறப்பதும் உண்டு. அது என்ன?
4. இலை இல்லாத மரம் மண்டை மரம். அது என்ன?
5. யாரும் போடாத பந்தலில் இறைஞ்சு கிடக்குது பூக்கள். அது என்ன?
6. அடிச்ச வீட்டைத் துறந்திட்டு அடுத்த வீட்டில் புகார் சொல்வாள். அவள் யார்?
7. உச்சாணிக் கொப்பிலே உறிகட்டித் தொங்குது அது என்ன?
8. முற்றத்து முன்பு அஞ்சு மரம், அதை மடக்க முடியாது. பிடுங்க முடியலை. அது என்ன?
9. அரண்மனை அந்தப்புரத்தில் ஆடுகிறாள் அல்லிராணி. அவள் யார்?
10. கால் இல்லாத குண்டலம் கடகடவென்று ஓடுது. அது என்ன?

**விடைகள்**

1. தராசு 2. பற்கள்
3. கண் 4. மான் கொம்பு
5. நட்சத்திரம் 6. தந்தி
7. பலாப்பழம் 8. கைவிரல்கள்
9. நாக்கு 10. பாம்பு

எம்.எச். அப்துல்லா, கருத்துறை தெற்கு.

## மூர்ச்சையாதல் என்றால் என்ன?

மூளைக்குப் போதுமான இரத்தம் போகாததால் திடீரென உடலியக்கம் வெகுவாகக் குறைதலுக்கு மூர்ச்சையாதல் எனப்பெயர். திடீரென்று ஏதாவது துன்பச் செய்தி கேட்டால் மூளையில் அதிர்ச்சி உண்டாகிறது. இதனால் அங்குள்ள இரத்தம் வேறு பகுதிகளுக்குச் சென்று விடுகிறது. இதயம் சீராகச் செயற்படாவிட்டாலும் மூளைக்குப் போதுமான இரத்தம் போய்ச் சேருவதில்லை. சில வேளைகளில் இரத்தக்கசிவு அதிகம் ஏற்பட்டாலும் மூர்ச்சையாதல் வருவதுண்டு. சிலர் வெயிலில் வெகுநேரம் நின்றுகொண்டிருப்பார்கள். அப்பொழுது பூமியின் ஈர்ப்பு ஆற்றல் இரத்தத்தை உடலில் கீழ்ப் பகுதிகளுக்கு இழுத்து விடுகிறது. ஆடையை இடுப்பில் மிக இறுக்கமாகக் கட்டியிருந்தாலும் மேல் நோக்கிப் போகும் இரத்தம் சிறிது தடைப்படக் கூடும். இவை போன்ற காரணங்களால் போதுமான இரத்தம் மூளைக்குப் போகாததால் மூர்ச்சை உண்டாகிறது.

மூர்ச்சை உண்டாகும் போல் சிறிது தோன்றினால் உடனே தரையில் உட்கார்ந்து தலையை முழங்கால்களுக்கிடையே தாழ்த்திக் கொண்டு சிறிது நேரம் இருந்தால் அதிகமான இரத்தம் மூளைக்குப் போகும். மூர்ச்சை உண்டாகாது.

மூர்ச்சை உண்டாகி விட்டால், உடனே படுக்க வைத்து தலையை விடக் கால் பகுதிகள் உயரமாக இருக்குமாறு தலையணைகளை வைத்து விடவேண்டும். ஆடைகளையும் தளர்த்தி விட வேண்டும். அறையில் நல்ல காற்றோட்டம் இருக்கும்படியாகப் பார்த்துக் கொள்ள வேண்டும். மூர்ச்சை சற்றுத் தெளிந்ததும் குடிப்பதற்கு ஏதாவது கொடுக்கலாம்.

## வெளவால்கள்



**★ வெளவால்களுக்குக் கண் தெரியுமா?**

தெரியும். சிறு பிராணிகளைப் பிடித்துத் தின்னும் வெளவால்களை விட பழம் தின்னும் வெளவால்களுக்கு நன்கு கண் தெரியும்.

**★ இரவில் இவை எப்படிச் செல்கின்றன?**

இரவில் வெளவால்கள் செல்லும் போது சிறு ஒலிகளை எழுப்பும். அந்த ஒலி ஒரு பொருளின் மீது பட்டு எதிரொலிக்கும். அந்த எதிரொலியை வைத்து அந்தப் பொருள் எப்படிப்பட்டது? எவ்வளவு தூரத்தில் உள்ளது என்று வெளவால் கண்டு பிடிக்கும்.

**★ இவை எப்படித் தண்ணீர் குடிக்கின்றன?**

குளம், ஏரி இவற்றின் மீது பறக்கும் போது லேசாக நீர்ப்பரப்பின் மீது தாழ்ந்து பறந்து கொண்டே நீர் குடிக்கும்.

**★ எமது நாட்டில் எத்தனை வகையான வெளவால்கள் உள்ளன?**

ஏழுவகையான வெளவால்கள் உள்ளன.

**★ வெளவால்களில் மிகப் பெரியது, மிகச் சிறியது எது?**

'பறக்கும் நரிகள்' எனப்படும் வெளவால்கள் மிகப் பெரியவை. இதன் விரிந்த இறகுகளின் நீளம் 1.5 மீட்டர். தாய்லாந்தில் உள்ள 'கிட்டீஸ்ஹெக் நோஸ்' வெளவால்கள் வண்டு அளவே இருக்கும். இவற்றின் எடை 1.5 கிராம் மட்டுமே.

## பட்டினி கிடக்கும் பாம்பு



பாம்பு இனத்தில் நாகப்பாம்பு மட்டும் தான் கூடு கட்டி வாழும். பெண் நாகப்பாம்பு, மணல், இலைகளைக் கொண்டு 30 சென்ரி மீட்டர் உயரத்தில் கூம்பு வடிவத்தில் கூடு கட்டும். பின்னர் அதில் முட்டை இடும். முட்டை இட்டு முடிந்ததும் இரவு பகலாக அதன்மேல் படுத்திருந்து காவல் காக்கும். இரண்டு மாதத்திற்குப் பின்னர் முட்டைகளில் இருந்து பாம்புக்குட்டிகள் வெளிவரும். அதுவரையில் பெண்நாகப்பாம்பு சாப்பிடாமல் காவல் காக்கும். குட்டிகள் வெளி வந்த பின்னர் தான் மெதுவாக நகர்ந்து சென்று இரை தேட ஆரம்பிக்கும்.

www.padippakam.com

# திகில் 5

விடியத் தொடங்கியிருந்தது. வரதராஜனின் பங்களாவில் நடமாட்டம் தொடங்கவில்லை. அறையைவிட்டு வெளியேறி வந்தான். வழியில் ஏகமாய் படுத்திருந்தவர்களை இடறிவிடாமல் கவனமாகப் பார்த்து காலடி எடுத்து வைத்து கடந்து மாடியேறப் போனான்.

"அங்கெங்கேடா போறே?" அம்மாவின் குரலுக்கு நின்றான்.

"தேகப்பயிற்சி பண்ணப் போறேம்மா."

"வேண்டாம். மேலே விடியவிடிய சீட்டுக் கச்சேரி நடத்தி இப்பதான் எல்லாரும் தூங்கறாங்க. போய் எழுப்பி விடாதே. இன்றைக்கொரு நாள் பயிற்சி எல்லாம் வேணாம். கொஞ்சம் பொறு. காப்பி தரேன்."

நெருங்கிப் போய் இடது உதட்டோரமாகக் கேட்டான். "என்னம்மா இது தொல்லை? இப்படியா கும்பல் சேர்க்கிறது? எல்லாம் எப்ப போவாங்க?"

"அப்படியெல்லாம் பேசாதேடா முண்டம். விசேஷம்னா நாலுபேர் வந்து போனால்தான் கவுரவமாயிருக்கும். ஆமாம், ராத்திரி என்ன நேரம் கெட்ட நேரத்தில் திருட்டுப்பய மாதிரி நுழையறே?"

"பார்ட்டி இருந்ததும்மா. கிளம்பறச்ச நேரமாயிடுச்சு. சாலமனையும் ராமையும் அவங்கவங்க வீட்ல கொண்டு தள்ளிட்டு வர்றதுக்குள்ளே நேரம் ஆயிடுச்சு."

"அந்தக் காலிப் பசங்க சினேகிதம் வேணாம்னு சொன்னா கேட்க மாட்டேங்கற நீ. என்னைக்கோ பெரிசா வம்புல மாட்டி விடப் போறாங்க. அப்ப தெரியும் உனக்கு."

வம்பு?

மனசுக்குள் காட்சி வந்தது. முன்பின் தெரியாத வீட்டுக்குள்ளே அவளை அழைத்துப் போய் அங்கிருந்த கட்டிலில் படுக்க வைத்து ஓடிவந்து காரில் ஏறி-

"பிடியேண்டா. சுடறது பார்."

நினைவுக்குத் திரும்பி அம்மா நீட்டிய காப்பியை வாங்கிக் கொண்டபோது-

"இன்னைக்கு பூராவும் நல்ல பிள்ளையா வீட்டோட இரு. அப்பறம் புள்ள எங்கே போச்சுன்னு கேட்கிறவங்களுக்கு என்னால பதில் சொல்லி கட்டுப்படியாகாதுடாப்பா" என்று அம்மா சொல்லிவிட்டுப் போகும்போது-

காப்பி கோப்பையை எடுத்து உதட்டுக்குள் கொண்டு போகும்போது தான்-

டெலிபோன் மணி ஒலித்தது.

நடந்து போய் கோப்பையை குட்டை மேஜைமீது வைத்துவிட்டு போய் போனை எடுத்தான். குரலை அடையாளம் காட்டினான்.

"மிஸ்டர் வரதராஜன் இருக்காரா?" என்ற பெண், குயிலை முழுசாக விழுங்கியிருக்க வேண்டும்.

"வரதராஜன் தான் பேசறேன். யார் அந்தப் பக்கம் பேசறது?"

"நான் தான் ஜோதி பேசறேன். ஞாபகமாவது இருக்கா?"

"ஜோதி?"

"நேத்து ராத்திரி பார்ட்டியில் நீயும் உன் சினேகிதங்களும் என்னை சந்திச்சீங்க."

கவனம் வந்து விட்டது. வயிற்றில் திடீரென சங்கடம் புரட்டியது.

"என்னோட போன் நம்பர் உனக்கெப்படி கிடைச்சது?"

"என்ன கேள்வி இது? நீதானே உன் விசிட்டிங் கார்டை எனக்கு கொடுத்தே. மறந்துட்டியா?"

"மறந்து தான் போச்சு. சரி. என்ன விஷயம்?"

"வைர நெக்லஸ்!"

"வாட்?"

"யூ ராஸ்கல், ராத்திரி என்னை நிறைய குடிக்க வைச்சிட்டு ஏமாற்றி கூட்டிட்டு போனிங்க, ஏதோ முன்பின் தெரியாத அமானுஷ்யமான இடத்தில் இறக்கிவிட்டுட்டு போயிட்டீங்க. நியாயமான செய்கையா அது?"

"அது வந்து...அது...வந்து சூழ்நிலை அப்படி. வேற வழயில்லாம"

"யூ சீட்! துரோகிகளா. போனது போனீங்க. சும்மா போகாம என் கைப்பையிலிருந்து என் வைர நெக்லஸை வேற திருடிட்டுப் போயிருக்கீங்க."

"நோ நான் எடுக்கல்ல."

"அப்ப உன் சினேகிதங்க எடுத்திருப்பாங்கன்னு சொல்றியா? டாமிட். சரி. சரி போனில் பேசி பிரயோஜனமில்லே. போலீசிடம் போகப் போகிறேன்."

"ஐயைய்யோ."

"போகிற வழியில் உன் வீட்டுக்கு வந்து நேரில் கேட்கப் போறேன். அதற் குள்ளாக நகையை எடுத்து தயாராக வைச்சிரு. வந்ததும் கொடுத்துடு. இல்லேன்னா அப்புறம் நான் போலீஸ் உதவியைநாட வேண்டி வரும். மைண்ட் யு."

"தெரியாது. எனக்குத் தெரியாதே."

"அதை நேரில் வந்து விசாரிக்கிறேன்."

"வேண்டாம் நேரில் வராதே. வீட்டில் அப்பா இருக்கார்."

"இருந்தா எனக்கென்ன பயம்? அவர் என்னை என்ன செய்துடுவார்?"

"உன்னை ஒண்ணும் செய்யமாட்டார். என்னைத்தான் கொன்று கூறுபோட்டுவித்துடுவார். வேண்டாம் தாயே! நீ வரவே வேணாம். தவிர வீட்டிலே வேற நிறைய பேர் விருந்தாளிங்க என்கிற பேரால உறவுக்காரங்க வந்திருக்காங்கா. ரசாபாசம் ஆயிடும்."

"அப்ப நீ வா என்னைப் பார்க்க."

"உன் வீடு எனக்குத் தெரியாதே."

"வீட்டுக்கு வேண்டாம். பொதுவான இடத்தில சந்திப்போம்."

"எங்கே?"

"ஜவஹர் பூங்கா தெரியுமில்லையா?"

"தெரியும். எங்க வீட்டிலேர்ந்து பத்து நிமிஷ நடை தூரம்தான்."

"சரி. அங்கேயே வந்து சந்தி. இன்னும் சரியாக அரை மணியில் அங்கிருப்பேன். அடுத்து எட்டரை மணிவரை காத்திருப்பேன். அதுக்குள்ளே நீ வந்து சந்திக்கணும். இல்லே. பக்கத்திலேயே போலீஸ் ஸ்டேஷனிருக்கு போய் புகார் எழுதி கொடுத்துடுவேன். ஜாக்கிரதை."

"வேண்டாம் வந்துடறேன்."

"அது நல்ல பிள்ளைக்கு அடையாளம். காணாமல் போன நகை லேசுப் பட்டதில்லே. அஞ்சு லட்ச ரூபாய் கொடுத்து அந்த நாளிலேயே வாங்கியது. இப்ப விலை நாலு மடங்காவது இருக்கும். கவனமிருக்கட்டும்."

"யாருடா போன்ல?"

"அப்பா!" மெதுவான குரலில் சொன்னான். "எங்கப்பா- போனை வைச்சிடு."

அவசரமாக காப்பியைக் குடித்துவிட்டு அறைக்கு ஓடி உடைகளை மாற்றிக் கொண்டு தயாரானான். வெளியே வரும்போது அம்மா உள்ளே வந்தாள்.

"உடனே கிளம்பிடுவானே. ஏண்டா முண்டம்? இப்பத்தானே சொன்னேன் வெளியே போகக் கூடாதுன்னு. எங்கேடா போறே?"

"ஜவஹர் பூங்காவுக்கு."

"காலங்காத்தால என்ன பூங்கா?"

"இங்கே தான் உடற்பயிற்சி பண்ண முடியல்லையே. அங்கேயாவது கொஞ்ச நேரம் ஓடிட்டு வரேன்."

"செய். கொஞ்சமிரு. இதோ வரேன்."

"நேரமாகுதே. என்னம்மா நீங்க அவசரம் புரியாம?"

"நேத்து வந்த ஆடர்லி, மார்பு பில்லைக்கு பாலிஷ் போட்டு இங்கேயே விட்டுட்டு போயிட்டான். பில்லையில்லாம வந்தா உங்கப்பா பெரட்டிப் பெரட்டி எடுத்துடுவார். பாவம் போகிற வழியிலதான் அவன் வீடு. கொடுத்துட்டு போயிடு."

"அம்மா நான் அவசரமாக ஓடிட்டிருக்கேன்."

"எல்லாம் ரெண்டு நிமிஷம்' கழிச்சு ஓடலாம் போடா."

கனமான பித்தளையினாலான அரசு முத்திரை பொறித்த அந்த பில்லையை சட்டைப் பையில்- இடப் பக்கம் போட்டுக் கொண்டு மிக அவசரமாக வெளியே ஓடினான்.

கைக் கடிகாரத்தைப் பார்த்தான். மணி எட்டு இருபது ஆகி இருக்கவே-

ஆடர்லி விஷயத்தை மறந்து ஓட்டத்தின் குதிரை வேகத்தை அதிகப்படுத்தினான்.

தட்...தட்....தட்....பூட்ஸ் ஒலிக்க பூங்காவினுள்ளே நுழைந்தான்.

பூங்காவினுள்ளே அதிக நடமாட்டமில்லை. அவசரமாக சுற்றிச் சுற்றி ஓடினான்.

அநேகமாக எல்லாருமே ஆண்களாக இருந்தார்கள். பெண்?

ஒரேயொரு பெண் அரிவாளால் பசும் புல்லை அறுத்து சேகரம் பண்ணிக் கொண்டிருந்தாள். திருட்டு விழியோடு அப்படியுமிப்படியுமாகப் பார்த்தவாறு (தோட்டக்காரர் பயம் போலிருக்கிறது.) சே. இவளாக இருக்க முடியாது.

தொலைவில் சிமெண்ட் பெஞ்ச் மீது வித்தியாசமாக ஓர் ஆள் அமர்ந்திருப்பது தெரிந்ததும்-.

மார்கழிக் குளிருக்கு பயந்து போய்ப் போலிருக்கிறது. உடம்பு முழுக்க நீளமாக ஒரு கோட் அணிந்து முகத்தில் பாதியை மறைக்கும் தொப்பியுமாக அமர்ந்து கறுப்புக் கண்ணாடியணிந்து-

சந்தேகமாக நெருங்கினான்.

அத்தனை மறைப்புகளையும் மீறி தெரிந்த கன்னங்களின் வழுவழுப்பு சந்தேகத்தைத் தந்தது. ஒரு வேளை பெண்ணோ? அதே பெண்ணோ?

மேலும் நெருங்கிப் போனான்.

"மன்னிக்கணும். நீங்கத்தான் போன் பண்ணியதா?"

என்றவன்-

பதில் எதுவுமில்லாமல் போகவே-

"உன்னைத்தான் கேட்டேன். நீயா போன் பண்ணினாய்?"

அதற்கும் பதில் சொல்லாமல் போகவே- 'மன்னிக்கணும்' என்று போகத் திரும்பியவன்-

"ஒரு நிமிஷம்" என்ற குயிலின் குரலுக்கு நின்று திரும்பினான்.

இப்போது வெயில் கண்ணாடியைக் கழற்றியிருந்தாள். இவ்வளவு பெரிய கண்கள் இருக்கிறதென்றால் நிச்சயம் பெண்தான்.

"ஹலோ" என்று அவளை நோக்கி நடந்தவன் சற்றும் எதிர்பாராத வகையில்-

இதுவரை முதுகு பக்கமாக வைத்திருந்த வலக் கையை சட்டென்று முன்பக்கமாக உயர்த்தினாள். கையில் துப்பாக்கியிருந்தது. சின்னதான பெராட்டா துப்பாக்கி.

அதை துப்பாக்கி என்று உணர்ந்து, நடப்பதை எதிர்பார்க்கும் முன்னதாக-

அவள் துப்பாக்கியை சுண்டி விடவே இடது மார்பில் படீரென்று தெறித்தது குண்டு.

துள்ளிக் குதித்து விலகி விழுந்து இவன் புரண்டு புரண்டு கதற-

சின்னதான சிமெண்ட் தடுப்பைக் கடந்து குதித்து அந்த உருவம் காணாமல் போயிற்று.

மயக்கமாகி அடங்கிப் போனான்.

பங்களாவில்-

வெள்ளைச் சீருடையில் தயக்கமாக வந்த ஆடர்லியைப் பார்த்துக் கத்தினாள் அம்மாள். "ஏண்டா முண்டம்? ப்ராஸோ போட்டியே பில்லை; கையோட கொண்டு போக மாட்டியோ?"

"மறந்துட்டேம்மா. அதான் ஓடி வந்தேன். கொடுங்க தாயி."

"கொடுக்கிறதா? பய கொண்டு வந்து தரல்லே? என்னடா முழிக்கிறே? வரதராஜன் கிட்ட கொடுத்து உன் வீட்டில் கொடுக்கச் சொல்லி அனுப்பினேனே."

"வரல்லையேம்மா. ஐயோ! ஐயா இப்ப இறங்கி வருவாரே கத்துவாரே."

"சரி. சரி. சும்மா புலம்பாதே. ஜவகர் பூங்காவைத் தான் சுற்றி சுற்றிச் ஓடிட்டிருப்பான் போய்க்கேட்டு வாங்கி மாட்டிக்கிட்டு வந்துடு. ஓடு."

ஓடினான்.

மெல்லக் கண்விழித்து அந்த வரதராஜன் பார்த்தபோது சுற்றிலும் ஒரு கும்பலிருந்தது.

"என்னப்பா ஆச்சு? யார் அந்த ஆளு? ஏன் சுட்டான்?"

தலைக்கு தலை கேள்வி கேட்க- இவன் தனக்குத் தானே கேள்வி கேட்டுக் கொண்டான். ஒரே கேள்வி.

"அதெப்படி நான் இன்னும் உயிரோட இருக்கேன்? சாகலையா?"

மல்லாந்த நிலையிலேயே தலையை மட்டும் உயர்த்தி மார்பை உயர்த்திப் பார்த்தான். ரத்தச் சிதறல் எதுவுமில்லை. சட்டை மட்டும் தீய்ந்து பொத்தல் விழுந்திருந்தது.

சுட்டாளே- அது நெஞ்சை தாக்கியதை உணர்ந்தேனே. பின்னே" இது எப்படி நிகழ்ந்தது?

"சின்ன எசமானே" என்று கதறலுடன் ஓடி வந்த ஆடர்லி கேட்டான். "என்ன ஆச்சு? ஓடறச்ச வழுக்கி விழுந்துட்டீங்களா?"

"உன் தலை. என்னைக் கொலை செய்ய முயற்சி நடந்திருக்கு. சுட்டதைப் பார்த்தேன். ஆனாலும் அதெப்படி உயிரோட இருக்கேன்னு தான் புரியல்ல."

"சரி. என் பில்லையைக் கொடுங்க சின்ன எசமானே! அங்கே பெரியவர் கிளம்பித் தயாராயிருப்பார். கத்தப் போறார்."

பையிலிருந்து எடுத்துக் கொடுத்தான்."இந்தா ஒழி."

என்றவன்,

அவன் போட்ட "ஐயய்யோ" என்ற பெரிய அலறலுக்கு இவனே நடுங்கிப் போனான்.

"ஏன்யா? ஏன்யா கத்தறே? பிசாசே."

"ஐயாவுக்கு எல்லாமே சுத்தமாயிருக்கணுமே. இதை வைச்சு எப்படி அவுக முன்னால போறது?" என்ற அவன் நீட்டிய கையகலப் பித்தளை பில்லையில் நடுவில் நசுங்கி இருந்தது- துப்பாக்கி குண்டு தாக்கி நசுங்கியிருந்தது.

(தொடர்ந்து வரும்)




**இதுவரை** பழைய பங்களா ஒன்றில் பெண் பிணம், அதன் உடலில் ஆறு குண்டுகள். கொல்லப்பட்டது யார், கொன்றது யார்? போலீஸ் விசாரணை நடக்கிறது. மற்றொரு கொலை, ரயில் பாதையருகே இன்னொரு பிணம். அது ஒரு ஆண்பிணம் என்பது மட்டும் தெரிகிறது. அடையாளம் தெரியவில்லை. விசாரணை தொடர்கிறது. இதற்கிடையே இன்பவல்லி என்னும் பணக்கார சீமாட்டி வீட்டில் பிறந்தநாள் விருந்து நடக்கிறது. அதில் நான்கு இளைஞர்கள் கலந்து கொள்கின்றனர். விருந்தில் கலந்து கொள்ளும் ஜோதி என்ற பெண் தாராளமானவள். நன்கு குடித்திருந்தாள். அந்த நான்கு இளைஞர்களுடன் ஜாலியாக காரில் புறப்பட்டுச் செல்கிறாள். இடைநடுவே மதுவெறியில் அவள் புலம்பல் அதிகமாகிறது. பயந்து போன இளைஞர்கள் திறந்திருந்த ஒரு வீட்டில் அவளைக் கிடத்திவிட்டு காரில் பறந்துவிடுகின்றனர். அந்த வீட்டுக்கார இளைஞன் அரசன் திடீரென்று முளைத்த பெண்ணைக் கண்டு திகைத்துப் போகிறான்.

துப்பறியும் நிறுவனம் நடத்திவரும் ராஜா, ஜென்னி ஆகியோரின் உதவியுடன் பெண்ணை அவள் வீட்டில் கொண்டுபோய் சேர்த்துவிட்டு வருகிறான்.


அந்தப் பெண்ணிடம் இருந்த வைர நெக்லஸைக் காணவில்லை என்று ராஜாவுக்கு போன் செய்கிறாள் பெண்ணின் தாயார் சரஸ்வதியம்மாள்.





ராஜா கோபப்படுகிறான்.

இனி......

## மர்மக்கதை மன்னன் ராஜேந்திரகுமார்

## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: எம். நவாஸ் தீன்
வயது: 26
முகவரி: கல்பிட்டி வீதி, ஏத்தாலை கொலனி.
பொழுது போக்கு: வானொலி, ரீ.வி..

பெயர்: வி.விவேகானந்தன்
வயது: 26
முகவரி: 18, மயூரா லேன், கொழும்பு-11
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.

பெயர்: ஏ. கோபாலகிருஷ்ணன்.
வயது: 19
முகவரி:14, எம்.சி. குவாட்டர், எல்லை வீதி, மட்டக்களப்பு.
பொழுதுபோக்கு: வானொலி, பத்திரிகை, பேனாநட்பு.

பெயர்: எம். காந்தன்
வயது: 27
முகவரி: BREM GATNER STR.28 8003.ZURICH. SWITZERLAND.
பொழுது போக்கு: கிரிக்கெட், உதைபந்து, ரீ.வி.

பெயர்: எம்.நவாஸ்
வயது: 19
முகவரி: விருதோடை, மதுரங்குளி.
பொழுது போக்கு: பத்திரிகை, கதைப்புத்தகம்.

பெயர்: பீ. ஜவ்பர்
வயது: 20.
முகவரி: 134/1 பீ, ஓட்டமாவடி-01
பொழுது போக்கு: பத்திரிகை, பேனா நட்பு, வானொலி.

பெயர்: எம். ஆதாம்
வயது: 25
முகவரி: P.O.BOX-24, DAMMAM-31411, SAUDI ARABIA.
பொழுதுபோக்கு: கதைப்புத்தகம், பேனாநட்பு.

பெயர்: எம். ஷரிப்தீன்
வயது: 22
முகவரி: 91, மத்திய வீதி, திருகோணமலை.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி

பெயர்:கே.குமார்
வயது: 23
முகவரி: OS TERIA LA BETTOIA. 6962. VIGANAELLO. SWITZERLAND.
பொழுது போக்கு: பத்திரிகை, தொலைக்காட்சி.

பெயர்: கே. தவராஜ்
வயது: 30
முகவரி: 239, ஆட்டுப்பட்டித்தெரு, கொழும்பு-13.
பொழுது போக்கு: பத்திரிகை, பேனாநட்பு.

பெயர்: எஸ். சிவானந்தகுமார்
வயது: 17
முகவரி: 153, குட்ஷெட் வீதி, வவுனியா.
பொழுது போக்கு: பத்திரிகை, ரீ.வி.

பெயர்: எம். இக்பால்
வயது: 24
முகவரி: P.O.BOX-1555. DUBAI. U.A.E.
பொழுது போக்கு: சினிமா, பத்திரிகை.



படிப்பகம்

www.padippakam.com

# தாய்

## 68

### மக்சீம் கார்க்கி

வண்டிக்காரன் தாயிடம் தொடர்ந்து சொன்னான்: "சிலர் படுகாயம் அடைந்ததாகக் கூடச்சொல்லிக் கொள்கிறார்கள். பொலிஸ்காரர்களுக்கும் அடி விழுந்ததாம்!" அவன் ஒரு கணநேரம் மௌனமாயிருந்தான். பிறகு விசித்திரமான குரலில், வருத்தத்துடன் தலையை ஆட்டிக் கொண்டே பேசத்தொடங்கினான்: "செத்தவர்களை அடக்கம் செய்வதோ இப்படி இருக்கிறது! செத்தவர்களுக்கோ அமைதியே கிடையாது!"

வண்டி சரளைக் கற்களில் ஏறி விழும்போது, இவானின் தலை தாயின் மார்போடு மெதுவாக மோதிக்கொண்டது. வண்டிக்காரன் பெட்டியில் பாதி திரும்பியவாறு உட்கார்ந்து ஏதேதோ பேசி வந்தான்:

"ஜனங்களுக்குப் பொறுமையின்மை ஏற்பட்டுவிட்டது. உலகில் எங்கு பார்த்தாலும் ஒரே களேபரம்தான் தலை தூக்கி வருகிறது. நேற்று ராத்திரி என் அடுத்த வீட்டுக்காரன் வீட்டுக்குப் பொலிஸார் வந்து, விடியும்வரை எல்லாவற்றையும் இழுத்துப் போட்டுச் சோதனை போட்டார்கள். அப்புறம் ஒரு கொல்லுலைத் தொழிலாளியைத் தங்களோடு கொண்டு போய் விட்டார்கள். அவனை இரவு வேளையிலே ஆற்றங்கரைக்குக் கொண்டு போய் நீரில் அமுக்கிக் கொன்றுவிடுவார்கள் என்று ஜனங்கள் பேசிக்கொள்கிறார்கள். அந்தக் கொல்லன் ரொம்ப நல்லவன்."



"அவன் பேர் என்ன?" என்று கேட்டாள் தாய்.

"அந்தக் கொல்லன் பேரா? சவேல். சவேல் எவ்சென்கோ. சிறு வயசுதான். இருந்தாலும், அவனுக்கு நிறைய விஷயம் தெரியும். விஷயங்களைத் தெரிந்து கொள்ளவே இங்கே அனுமதி கிடையாது என்றுதான் தோன்றுகிறது. அவன் எங்களிடம் வந்து பேசுவான்: 'வண்டிக்காரர்களே! உங்கள் வாழ்க்கை எப்படிப் பட்டது?' என்பான். 'உண்மையைச் சொல்லப்போனால் எங்கள் வாழ்க்கை நாயினும் கேடான வாழ்க்கைதான்' என்று நாங்கள் சொல்லுவோம்."

"நிறுத்து" என்றாள் தாய்.

வண்டி நின்றதால் ஏற்பட்ட குலுங்கலில் இவான் விழித்துக் கொண்டு லேசாக முனகினான்.

"விழித்துக் கொண்டானா?" என்றான் வண்டிக்காரன்: "தம்பி, ஓட்கா வேணுமா, ஓட்கா!"

மிகுந்த சிரமத்தோடு இவான் நடந்து கொண்டே, தன்னைத் தாங்கிப் பிடிக்கும் தாயை நோக்கிச் சொன்னான்:

"பரவாயில்லை. என்னால் முடியும்."

✤ ☆ ✤

சோபியா அதற்குள்ளாகவே வீடு வந்து சேர்ந்துவிட்டாள். அவள் உத்வேகமும் குழப்பமும் கொண்டவளாகத் தோன்றினாள்; அவளது பற்களுக்கிடையில் ஒரு சிகரெட் இருந்தது.

அவர்கள் இந்தக் காயமுற்ற பையனை ஒரு சோபாவிலே படுக்கப் போட்டார்கள். பிறகு அவள் லாகவமாக அவனது கட்டை அவிழ்த்து சிகரெட் புகை கண்ணில் படியாதபடி கண்ணைச் சுருக்கி விழித்துக்கொண்டே உத்தரவிட்டுக் கொண்டிருந்தாள்:

"இவான் தனீலவிச்! அவனை இங்கு கொண்டுவந்து விட்டார்கள். நீலவ்னா, களைத்துப் போய்விட்டீர்களா? பயந்து விட்டீர்களா? சரி, கொஞ்ச நேரம் ஓய்வு எடுத்துக்கொள்ளுங்கள். நிகலாய்! நீலவ்னாவுக்கு ஒரு கிளாஸ் ஒயின் கொடு."

கொஞ்ச நேரத்துக்கு முன்னர் தான் அனுபவித்த சங்கடத்தால் ஏற்பட்ட அதிர்ச்சி இன்னும் தாயை வாட்டிக்கொண்டிருந்தது. அவளுக்கு மூச்சுவிடவே சிரமமாக இருந்தது. நெஞ்சில் குத்தலான வேதனை எடுத்தது.

"என்னைப்பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டிராதே" என்று அவள் முனகினாள். என்றாலும் அவளது உடல் முழுவதும் யாருடைய பணிவிடையையாவது எதிர்நோக்கித்தவித்தது. அன்பாதரவின் சுகத்தை நாடியது.

அடுத்த அறையிலிருந்து நிகலாய் கட்டுப்போட்ட கையோடு வந்து சேர்ந்தான். அவனோடு டாக்டர் இவான் தனீலவிச்சும் முள்ளம் பன்றியைப்போல் சிலிர்த்துக் கலைந்த தலைமயிரோடு வெளிவந்தார். விறுட்டென்று இவானின் பக்கம் ஓடிச் சென்று அவனைக் குனிந்து பார்த்தார்.

"தண்ணீர்!" என்றான் அவன். "நிறையத் தண்ணீர் கொண்டுவா. அத்துடன் கொஞ்சம் பஞ்சும், சுத்தமான துணியும் கொண்டுவா."

தாய் சமையலறையை நோக்கி நடந்தாள். ஆனால் அதற்குள் நிகலாய் அவளது கையைப் பிடித்து அவளைச் சாப்பாட்டு அறைக்குள்ளே அழைத்துச் சென்றான்.

"அவன் சொன்னது சோபியாவிடம், உங்களிடமல்ல" என்று மெதுவாகக் கூறினான் அவன். "ரொம்பவும் நிலை குலைந்து போய்விட்டீர்கள் என்று அஞ்சுகிறேன். அப்படியா, அம்மா?"

அவனது அன்பு ததும்பும் ஆர்வம் நிறைந்த கண்களைக் கண்டதும், தாயினால் தனது பொருமலை அடக்கி வைத்துக் கொண்டிருக்க முடியவில்லை.

"ஓ! என்னவெல்லாம் நடந்துவிட்டது!" என்று அவள் கத்தினாள்; "அவர்கள் மக்களை அடித்தார்கள்; வெட்டினார்கள்..."

"நானும் பார்த்தேன்" என்று கூறிக் கொண்டே, அவளுக்கு ஒரு கோப்பை ஒயினைக் கொடுத்தான் நிகலாய். "இரு தரத்தாருமே தங்கள் மூளையைக் கொஞ்சம் பறிகொடுக்கத்தான் செய்தார்கள். ஆனால் நீங்கள் அதை எண்ணி அலட்டிக்கொள்ளாதீர்கள். அவர்கள் தங்கள் கத்திகளின் பின்புறத்தால்தான் தாக்கினார்கள். ஒரே ஒருவனுக்குத்தான் படுகாயம் ஏற்பட்டுவிட்டதாகத் தெரிகிறது. அதையும் அவர்கள் என் கண்முன்னாலேயே செய்தார்கள். நான் அவனைக் கூட்டத்தைவிட்டு வெளியே இழுத்து வந்துவிட்டேன்."

நிகலாயின் குரலாலும் அந்த அறையின் வெதுவெதுப்பாலும் வெளிச்சத்தாலும் தாயின் உள்ளம் ஓரளவு அமைதிகண்டது. நன்றி உணர்வோடு அவனைப் பார்த்துக் கொண்டே அவள் கேட்டாள்,

"அவர்கள் உங்களையும் தாக்கினார்களா?"

"இது என்னால்தான் விளைந்தது. நான்தான் அஜாக்கிரதையாய் என் கையை எதன்மீதோ ஓங்கி மோதிவிட்டேன்; அதனால், அந்த அடி என் கைச் சதையைப் பிய்த்தெறிந்து விட்டது. சரி. கொஞ்சம் தேநீர் குடியுங்கள். வெளியே ஒரே குளிர். நீங்களும் மெல்லிய உடைகள் தான் அணிந்திருக்கிறீர்கள்."

அவள் கோப்பையை எடுப்பதற்காகக் கையை நீட்டினாள்; அப்போது தனது கைவிரல்களில் காய்ந்துபோன இரத்தக்கறை படிந்திருப்பதைக் கண்டாள். தன்னையறியாமலே அவள் கையை தன் மடிமீது தளர விட்டாள். அவளது உடுப்பு ஒரே ஈரமாயிருந்தது. அவள் தன் புருவங்களை நெரித்து உயர்த்திக் கண்களை அகலத்திறந்து, தனது கை விரல்களையே பார்த்தாள். அவளது இதயம் படபடத்தது, கண்கள் இருண்டு மயக்க உணர்ச்சி ஏற்பட்டது.

"பாவெலுக்குகூட- அவர்கள் அவனுக்கும் இப்படித் தான் செய்யக்கூடும்!"

இவான் தனீலவிச் தனது சட்டைக் கைகளைத் திரைத்துச் சுருட்டியவாறே அந்த அறைக்குள் வந்தார். வந்த விஷயத்தைக் கேட்பதற்காக வாய்பேசாமல் ஏறிட்டு நோக்கிய நிகலாயைப் பார்த்து உரத்த குரலில் பேசினார் அவர்:

"முகத்திலுள்ள காயம் ஒன்றும் மோசமாக இல்லை. ஆனால், அவனது மண்டையெலும்பு நொறுங்கியிருக்கிறது. படுமோசமாக இல்லை. இவன் ஒரு பலசாலியான பையன்; இருந்தாலும், நிறைய இரத்தத்தை இழந்துவிட்டான். நாம் இவனை ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவிடுவோமா?"

"ஏன்? அவன் இங்கேயே இருக்கட்டுமே!" என்றான் நிகலாய்.

"இன்று இல்லாவிட்டால் நாளையாவது அவனை அனுப்பி வைத்தால்தான் நல்லது. ஆஸ்பத்திரியில் இருந்தானானால் என்னால் இன்னும் மிகுந்த சௌகரியத்தோடு அவனைக் கவனித்து பார்க்கமுடியும். அடிக்கடி வந்துகொண்டிருக்க எனக்கு நேரம் கிடையாது. நீ இந்த இடுகாட்டு சம்பவத்தைப் பற்றி ஒரு பிரசுரம் எழுதி வெளியிடுவாயல்லவா?"

"நிச்சயமாய்!" என்றான் நிகலாய்.

தாய் அமைதியுடன் எழுந்து சமையலறையை நோக்கிச் சொன்றாள்.

"எங்கே போகிறீர்கள், நீலவ்னா?" என்று அவளை அன்போடு வழிமறித்து நிறுத்திக் கொண்டே கேட்டான் நிகலாய். "சோபியா எல்லாவற்றையும் தானே கவனித்துக் கொள்வாள்."

அவள் அவனைப் பார்த்தாள்; லேசாக நடுங்கினாள்.

"என் உடம்பெல்லாம் ஒரே இரத்தம்" என்று ஒரு விசித்திரச் சிரிப்புடன் கூறினாள் அவள்.

அவள் தன்னறைக்குள் சென்று உடை மாற்றிக்கொள்ளும் போது, இந்த மனிதர்களின் அமைதியைப்பற்றியும், இந்த மாதிரியான பயங்கர விஷயங்களைக் கூட அநாயாசமாக ஏற்றுத் தாங்கும் அவர்களது சக்தியைப் பற்றியும் எண்ணி எண்ணிப் பார்த்துத் தனக்குத் தானே வியந்து கொண்டாள். இந்தச் சிந்தனைகள் அவளுக்குத் தெளிவையுண்டாக்கி அவளது உள்ளத்தில் குடிகொண்டிருந்த பயத்தை விரட்டியடித்தன. அந்தப் பையன் படுத்திருந்த அறைக்குள் அவள் நுழைந்தபோது, சோபியா பையனுடைய படுக்கைக்கு மேலாகக் குனிந்து ஏதோ பேசுவதைக் கண்டாள்.

"அபத்தம், தோழா!" என்றாள் சோபியா.

"நான் போகிறேன், உங்களுக்குத்தான் தொந்தரவு" என்று பலவீனமான குரலில் அவன் எதிர்த்துப் பேசினான்.

"பேச்சை நிறுத்து. அதுவே உனக்கு ரொம்ப நல்லது..."

தாய் சோபியாவுக்குப் பின்னால் வந்து அவளது தோளில் கையைப் போட்டுக்

**தன்னையறியாமலே அவள் கையை தன் மடிமீது தளர விட்டாள். அவளது உடுப்பு ஒரே ஈரமாயிருந்தது. அவள் தன் புருவங்களை நெரித்து உயர்த்திக் கண்களை அகலத்திறந்து, தனது கை விரல்களையே பார்த்தாள். அவளது இதயம் படபடத்தது, கண்கள் இருண்டு மயக்க உணர்ச்சி ஏற்பட்டது.**

கொண்டு நின்றாள்; அந்தப் பையனின் வெளுத்த முகத்தைப் பார்த்துப் புன்னகை புரிந்தாள்; வண்டியில் வரும்போது அவன் முனகிய பயங்கரமான விஷயங்களை கேட்டு அவள் எப்படி பயந்துபோனாள் என்பதையும் அவனிடம் சொன்னாள். இவானின் கண்கள் ஜுர வேகத்தோடு பிரகாசித்தன. அவன் தன் நாக்கைச்சப்புக் கொட்டிவிட்டு, வெட்கம் கவிந்த முகத்தோடு பேசினான்:

"நான் எவ்வளவு பெரிய முட்டாள்!"

"சரி. நாங்கள் போகிறோம்" என்று கூறிக்கொண்டே அவனது போர்வையைச் சரி செய்தாள் சோபியா; "நீ தூங்கு."

அவர்கள் சாப்பாட்டு அறைக்குள் வந்தார்கள். அங்கு உட்கார்ந்து அன்று நடந்த சம்பவங்களைப்பற்றி வெகுநேரம் விவாதித்துக் கொண்டிருந்தார்கள். அன்றைய நிகழ்ச்சியை என்றோ வெகு காலத்துக்கு முன் நடந்த சம்பவத்தைப்போலக் கருதி அவர்கள் தங்களது எதிர்காலத்தை, வரப்போகும் நாட்களுக்குரிய வேலைத் திட்டத்தை வகுப்பது பற்றி மிகுந்த ஈடுபாட்டுடன் விவாதித்துக் கொண்டார்கள். அவர்களது முகங்கள் களைத்துத் தோன்றின. எனினும் அவர்களது எண்ணங்கள் மட்டும் துணிவாற்றலோடு விளங்கின. தங்களது வேலைத் திட்டத்தைப்பற்றி அவர்கள் பேசும்போது தங்களுக்குள் எழுந்த அதிருப்தியுணர்ச்சிகளை அவர்கள் மூடி மறைக்கவில்லை. அந்த டாக்டர், நாற்காலியில் நிலை கொள்ளாமல் உட்கார்ந்து நெளிந்து கொடுத்துக் கொண்டிருந்தார்.

"பிரசாரம், பிரசாரம்தான் ஒரே வழி. அது இப்பொழுது குறைச்சல்!" என்று அவன் தனது கூர்மையான மெல்லிய குரலைத் தணிக்க முயன்றவாறே கூறினான். "வாலிபத்தொழிலாளிகள் சரியாக இருக்கிறார்கள். நாம் தான் பிரசாரத்தை விரிவாக்க வேண்டும். தொழிலாளர்கள் சரியாகத் தானிருக்கிறார்கள். அதுமட்டும் எனக்குத் தெரியும்."

நிகலாய் முகத்தைச் சுழித்தவாறே அந்த டாக்டர் பேசிய மாதிரியே பேசத் தொடங்கினான்:

"ஒவ்வொரு இடத்திலிருந்தும் போதுமான புத்தகங்கள் கிடைக்கவில்லையென்று நமக்குப் புகார்கள் வருகின்றன. நமக்கோ ஒரு நல்ல அச்சகம் வைப்பதற்குக்கூட வழியைக் காணோம். லூத்மீலாவோ நாளுக்குநாள் பலவீனப்பட்டு வருகிறாள். நாம் அவளுக்கு ஏதாவதொருவகையில் உதவாவிட்டால், அவள் பாடு மோசமாகிவிடும்."

"நிகலாய் வெஸோவ்ஷிகோவ் என்ன ஆனான்?" என்று கேட்டாள் சோபியா.

"அவனால் நகருக்குள் வாழ முடியாது. புதிய அச்சகம் வைத்தால் தான் அவன் அதில் வேலை செய்யத் தொடங்கலாம். ஆனால், அதற்கு முன்னால், நமக்குத் தற்சமயத்துக்கு இன்னொரு ஆள்தேவை."

"நான் செய்யமாட்டேனா?" என்று அமைதியாகக் கேட்டாள் தாய்.

அவர்கள் மூவரும் ஒன்றும் பேசாமல் தாயையே சில கண நேரம் பார்த்தார்கள்.

"அதுவும் ஒரு நல்ல யோசனை தான்!" என்றாள் சோபியா.

"அது உங்களுக்கு மிகுந்த சிரமமான காரியம், நீலவ்னா" என்றான் நிகலாய். "நீங்கள் நகருக்கு வெளியே வசிக்க நேரிடும். அதனால், பாவெலைப் பார்க்க முடியாது போகும். பொதுவாகச் சொன்னால்..."

"பாவெலை இந்தப் பிரிவு ஒன்றுமே பாதிக்காது" என்று பெருமூச்சுடன் சொன்னாள் அவள். "உண்மையைச் சொல்லப்போனால், எனக்குக் கூட, அவனைச் சந்தித்துவிட்டு வருவது என் இதயத்தையே பிழிந்தெடுப்பது மாதிரி இருக்கிறது. அவர்கள் ஒன்றுமே பேச விடுவதில்லை. சும்மா வெறுமனே போய் முட்டாள்மாதிரி மகனையே பார்த்துக் கொண்டிருப்பதும், நாம் அவனிடம் ஏதாவது பேசிவிடப் போகிறோமோ என்ற பயத்தில் அவர்கள் நம் வாயையே பார்த்துக் கொண்டிருப்பதும்..."

கடந்த சில நாட்களில் நடந்துபோன சம்பவங்களால் அவள் மிகவும் சலித்துவிட்டாள். எனவே நகரத்தின் நாடகம் போன்ற வாழ்வைவிட்டு வெகுதூரம் ஒதுங்கிச் சென்று வாழ்வதற்கு இதுதான் சந்தர்ப்பம் என அவளுக்குத் தோன்றியது எனவே அதைக் கேட்டவுடன் அவள் ஆசையோடு துள்ளியெழுந்தாள்.

ஆனால் நிகலாயோ பேச்சின் விஷயத்தையே மாற்றிவிட்டான்.

"இவான், நீ என்ன யோசித்துக் கொண்டிருக்கிறாய்?" என்று அந்த டாக்டரின் பக்கம் திரும்பிக் கேட்டான் அவன்.

அந்த டாக்டர் தனது குனிந்த தலையை நிமிர்த்தியவாறே சோகத்தோடு பதில் சொன்னார்

(தொடர்ந்து வரும்)

# கிழவி ஓய்வெடுக்கிறாள்

ஷர்மிளா இஸ்மாயில் — கண்டி



கிழவிக்கு கோபம் வந்திருந்தது. நண்டும் சிண்டுமாய் காலுக்கொன்றும் கைக்கொன்றுமாய் பேரப் பிள்ளைகள். "ஆச்சி, பசிக்குது..." வழிந்தோடும் மூக்கை அலட்சியப் படுத்தி வயிற்றைத் தடவிக் காட்டிப் புலம்பியது நாலரை வயது.

'பெற்றுக் கொள்ளத் தெரிகிறது. ஒழுங்காக கவனித்து வளர்க்கத் தெரிகிறதா?' கிழவி மனதுக்குள்ளாக பொரிந்தாள். எங்காவது பாதையோரத்து நிழல் மரத்துக்கடியில் இல்லை கள்ளுக்கடை சார்ந்த பிரதேசங்களில் முழு, அரை போதையில் (கையிருப்பின் நிலை. கை நிறைய காசு புழங்கினால் முழு போதை, தட்டுப்பாடானால் அரை இல்லை நண்பர்கள் உபயம்) குழந்தைகுட்டிகளை குடும்பத்தை மறந்து சூதாடும், வீண் பொழுது போக்கும் மருமகன். ஆண்டுக்கொன்றாய் பெற்றுப் போட்டு விட்டு இப்போது நிரந்தர பலவீன, நோயாளியான ஒரே செல்ல மகள்.

சுருட்டும் கையுமாக சிலவேளைகளில் உற்சாக பானத்தையும் அவ்வப்போது ஊற்றிக்கொண்டு முடங்கிக்கொள்ளும் கிழவன். எல்லோரையும் சமாளித்து நாளாந்த கஷ்ட ஜீவனத்தை ஓட்டிச் செல்லும், கடிவாளத்தைக் கையாளும் இளைத்துப்போன வயதான, பலவீன வண்டியோட்டி போல் இந்தக் கிழவி.

ஏதோ ஒரு காலத்தில் நன்றாக வாழ்ந்த போது உண்டு உரமேறிய உடம்பு. இப்போது இத்தனை வயதிலும் ஈடுகொடுக்கிறது. கிழவி செய்யாத வேலைகளே இல்லை எனலாம். கடையப்பம் சுட்டு விற்றுப் பார்த்தாள். இலாபத்தை விட நட்டமே மிகுதமாயிற்று. வீடு வீடாய்ச்சென்று தின்பண்டங்கள்-கல்யாணம் போன்ற வைபவங்கள் நடைபெறும் சமயமாய்ப் பார்த்து போய்ச் செய்து கொடுப்பாள். அதுவும் எத்தனை நாளைக்கு? மரக்கறி விற்றுப் பார்த்தாள். பேரம் பேசிப் பேசியே அரை விலைக்கு கேட்கும் இல்லத்தரசிகள் காரணமாய் அதுவும் நட்டம் போயிற்று.

இறுதியாய் ஒரு பணக்கார முதலாளி பங்களாவில் சமையல்காரியாய் மாத சம்பளத்தில் வேலை கிடைத்தது முற்பிறவி பயனோ புண்ணியமோ தெரியவில்லை என எண்ணிக் கொள்வாள் கிழவி.

முதலாளியிடம் எப்படிக் கேட்பது? சம்பளத்திற்கு இன்னும் முழுசாய் பத்து நாட்கள் இருக்கின்றன. சமைத்து-உண்டது போக மீதி அனைத்தையுமே முதலாளியம்மா வஞ்சகம் பார்க்காது வாரிக்கொடுப்பாள். அப்படியிருந்தும் இத்தனை வயிறுகளையும் எப்படி எப்போதும் திருப்திப்படுத்துவது? இயலாத காரியமாயிற்றே.

மருமகனுக்கோ கிழவனுக்கோ கிழவியின் சுமைகளைத் தாங்கிப் பகிர்ந்து கொள்ளும் எண்ணம் அடியோடு இல்லை. மகள் அவ்வப்போது கண்ணீர் விட்டு "அம்மா.." என்று ஆதுரமாய் ஏதோ சொல்ல வாய் திறந்து பின் பலவீனமாய் மௌனித்து புலம்புவாள். கட்டிலோடு கட்டிலாய்நாராய் உருக்குலைந்த மகளைப் பார்த்து ஏங்கியழுவாள் கிழவி.

"வாழ்ந்து கெட்ட நான் இப்படி கட்டையாட்டம் கிடக்க.. வாழ வேண்டிய என் கண்ணே நீ இப்படி இருக்கியே.. ஆண்டவனே.. ஏனிப்படி செய்தாய்?" என வாய் விட்டுக் கதறுவாள் கிழவி.

பசி பசியென புலம்பும் பேரப் பிள்ளைகளை அரவணைத்துக் கொண்டாள் கிழவி. சுருட்டுடன் முடங்கியிருந்த கிழவனை எரிச்சலுடன் பார்த்தாள். "ஏங்...காது கேட்குதா? புள்ளைங்க அழுறாங்க.. போய் இவங்கப் பனைப் பார்த்து காசு வாங்கி பாணாவது வாங்கிட்டு வந்தா என்னது?" கிழவன் நெளித்தான். இருமினான். பேசாமல் கிடந்தான்.

"இதெல்லாம் ஒரு மனுஷ ஜென்மம்." கிழவி கரித்துக் கொட்டினாள். ஏதோ நினைவுக்கு வந்தவளாய் பரபரவென கிண்டிக் கிளறி துணிமணிகளுக்கடியில் எதையோ தேடினாள். தட்டுப்பட்ட ஐம்பது ரூபாய் நோட்டை எடுத்து வீசியெறிந்தாள்.

"இந்தா. போய் அரிசி, கறியெல்லாம் வாங்கி வா." பத்திரமாய் சேர்த்து வைத்த பணம். கொடுத்துவிட்டாள். பசிவந்தால் பத்தும் பறக்கும். இங்கு ஐம்பது ரூபாய் பறந்தது. கிழவன் சிறிது புன்னகைத்தான். நோட்டை நோட்டம் விட்டுக் கையிலெடுத்தான். புறப்பட்டுப் போனான்.

பகல் கரைந்து மாலையானது. கிழவனைக் காணோம். மருமகனையும் காணோம். பிள்ளைகள் பசியில் துடித்துக் கொண்டிருந்தது மட்டுமே நிலையானது. இருட்டியது. கிழவி சபித்துக்கொண்டு காத்திருந்தாள்.

"நாசமாய்ப் போன ஜென்மங்கள். எங்கே போய் தொலைஞ்சதுகளோ..." கிழவிக்கு அழுகை வந்தது. கண்ணீர் பரபரவென கொட்டியது. என்ன வாழ்க்கையிது? செத்துப் போய்விட மாட்டேனா?' நினைத்தாள்' உடல் நடுங்கியது. நெஞ்சை எதுவோ வந்து அடைப்பது போலிருந்தது. கிழவிக்கு மூச்சு முட்டியது. கை கால்கள் சில்லிட்டன. ஏதோ சொல்ல வாயெடுத்தாள். அப்படியே சரிந்து விழுந்தாள். செத்துப் போயிருந்தாள் கிழவி பசியுடனே! வெறுங்கையும் நிறைபோதையுமாக வந்த கிழவன் புலம்பியழ மருமகனோ திணறிப் போய் போதையுடனே குளறிக் கொண்டிருக்க – பிள்ளைகள் மட்டும் கதறினர். அது பசியின் கொடுமையா இல்லை கிழவியின் பிரிவுக்கா என்பதும் நிச்சயமில்லை.



படிப்பகம்

www.padippakam.com

# பாஞ்சாலி

## பொன்-பரமகுரு



முப்பது வயதான பாஞ்சாலி சரியான நாட்டுக்கட்டை. மாநிறம். பார்ப்போரைப் பரவசமூட்டும் அங்க அமைப்புகள். கவர்ச்சிக் கண்கள். மகிழ்ச்சி அளிக்கும் புன்னகை. அவளுக்கு ஒரே-மகள் நாலு வயது நளினி. அவளது கணவன் கணேசன் திடீரெனப் பக்கவாத நோயால் பாதிக்கப்பட்டு செயலற்றுப் போனான். ஆகவே, குடும்பப் பொறுப்பு பாஞ்சாலி தலையில் வீழ்ந்தது. வயல் வேலையோட விபசாரமும் செய்து தன் குடும்ப வாழ்வை நடத்தினாள். அவளது பெயருக்கேற்ப அவளுக்கு ஆசைநாயகர் ஐவராவர்-மாட்டுத்தரகன் மாதவன், கொத்தனார் கோவிந்தன், வட்டிக்கடை வரதன், வியாபரி விநாயகம், நகைக் கடைக்காரன் மதன்லால் ஆகியோர். அவர்களின் ஆதரவால் அவளது வாழ்க்கைச் சக்கரம் ஆழியூர் கிராமத்தில் நிம்மதியாய் ஓடியது.

ஆலங்குடி காவல் நிலையத்தில் இன்ஸ்பெக்டர் பசுபதி மதுவிலக்கு வேட்டையை முடித்துவிட்டு அப்பொழுது தான் உள்ளே நுழைந்தார். இரவு முழுவதும் தூங்காததால் கண்கள் சிவந்து இருந்தன.

அப்போது சப்-இன்ஸ்பெக்டர் அங்கு வந்து "சார்! ஆழியூரிலிருந்து போன் வந்திருக்கு" என்றார்.

அந்த போனை எடுத்து, "இன்ஸ்பெக்டர் பசுபதி பேசுகிறேன்" என்றார்.

மறுமுனையில், "வணக்கம், சார்! ஆழியூர் கிராம சேவையாளர் பேசுகிறேன். எங்கள் ஊரில் சுபேதார் சுந்தரம் தோட்டத்துக் கிணற்றில் ஒரு பெண் உடல் கிடக்கிறது, சார்!" என்றார்.

"அடையாளம் ஏதாவது தெரிந்ததா?" எனக்கேட்டார் பசுபதி.

"தெரியவில்லை, சார்! வெளியே எடுத்து விடவா?" எனக் கேட்டார் கிராம சேவையாளர்.

"வேண்டாம் நானே வருகிறேன். எதற்கும் ஒரு ரிப்போர்ட் எழுதி அனுப்புங்கள்" எனக் கூறி விட்டு பசுபதி ஆழியூர் புறப்பட்டார்.

கிராம சேவையாளர் ஒரு கிணற்றின் பக்கத்தில் நின்று கொண்டிருந்தார். கிணற்றை அடைந்த பசுபதி அதனுள் எட்டிப்பார்த்தார். சுமார் முப்பது வயது மதிக்கத்தக்க பெண் பிணம் மிதந்து கொண்டிருந்தது. அதோடு ஒரு பாவாடை, உள்பாடி இன்னும் சில சிறு பொருட்கள் மிதந்து கொண்டிருந்தன. கிராமத்தார் உதவியுடன் பிணம் வெளியே எடுக்கப்பட்டது.

காவலர் கண்ணன் சுற்றுமுற்றும் அலைந்து விட்டு வந்து இன்ஸ்பெக்டரிடம், "சார்! பம்புசெட் பக்கத்தில் ரத்தம் உறைந்து கிடக்கிறது. வாய்க்கால் கரை ஓரத்தில் புல்தரை சிதைந்து கிடக்கிறது." என்றார்.

"அப்படியா! அவற்றை யாரும் கலைத்துவிடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்," எனக் கூறி கண்ணனை அனுப்பிவிட்டு பசுபதி பெண் பிரேதத்தை மேலும் ஆராய்ந்தார். கிணற்றிலிருந்து எடுத்த துணிகளைப் பார்த்தார். அவற்றில் ரத்தக்கறை தெரிந்தது. பிரேதத்தின் மண்டையில் பின்பக்கத்தில் காயம் தெரிந்தது. காதில் ஒரு தோடு காணவில்லை.

அப்போது நாலு வயதுள்ள பெண் சிறுமி, "அம்மா! அம்மா!" என்று அலறிக் கொண்டு ஓடி வந்தது. இறந்து போனவளைக் கட்டிப் பிடித்துக் கொண்டு கதறி தேம்பித் தேம்பி அழுதது. அச் சிறுமியை அன்புடன் முதுகில் தடவிக் கொடுத்து ஆறுதல் கூறினார்.

"சார் இறந்தவள் பெயர் பாஞ்சாலி. இவளுடைய ஒரே பெண் இச்சிறுமி நளினி. இவளுடைய கணவன் கணேசன் கூலி வேலை செய்து பிழைத்தவன். தற்போது பக்கவாத நோயால் செயலற்றுக் கிடக்கிறான்," எனக்கிராம சேவையாளர். கூறினார்.

காவலர் கருப்பன் வந்து, "சார்! துப்பறியும் நாய், கைரேகை நிபுணர், போட்டோ பிடிப்பவர் வந்திருக்காங்க" என்றார்.

நாய் மோப்பம் பிடிக்க ஆரம்பித்தது. சிறிது தூரத்தில் இருந்த பம்ப்செட்டின் அருகிலுள்ள ரத்தம் தோய்ந்த இடத்தைப் பார்த்தது. பின்னர் ஊரின் உள்ளே ஓடியது. அங்கே இரண்டு மூன்று வீடுகள் ஏறி இறங்கியது. பஸ் நிலையம் வரை ஓடி நின்றது.

சப்-இன்ஸ்பெக்டர் கோபி வந்து, "சார்! பாஞ்சாலி அசல் பரத்தை என்கிறார்கள். பலரிடம் தொடர்பு உள்ளதாய்த் தெரிகிறது. அவர்களை இனங்கண்டு விசாரிக்க வேண்டும்" என்றார்.

"அப்படியா! விசாரிப்போம். நீங்கள் விரைவில் போட்டோ, கைரேகை எடுத்துவிட்டு சவத்தைப் பிரேதப் பரிசோதனைக்கு அனுப்புங்கள். ரத்தம் தோய்ந்த மண், பெண்ணின் ஆடைகள், மற்றப் பொருட்களைச் சேகரித்து விஞ்ஞானச் சோதனைக்கு கொண்டு போகச் சொல்லுங்கள், கோபி!" என்றார் பசுபதி.

"எஸ், சார்!" எனக் கூறி கோபி அவ் வேலைகளைக் கவனித்தார்.

இன்ஸ்பெக்டர் பசுபதி காவல் நிலையம் திரும்பி வந்தார். மற்ற வேலைகளைக் கவனித்துக் கொண்டிருக்கும் போது மருத்துவமனையிலிருந்து டாக்டர் போன் செய்தார்.

"சார்! இறந்த பெண் மண்டையில் பலத்த காயங்கள் இருக்கின்றன. அவை மொட்டையான ஆயுதத்தால் ஏற்படுத்தப் பட்டிருக்கலாம். காயங்கள், இறப்பதற்கு முன் ஏற்பட்டு, மரணம் காலை 2 மணியிலிருந்து 6 மணிக்குள் ஏற்பட்டிருக்கலாம்" என்றார்.

"மேலும் ஏதாவது தகவலுண்டா, டாக்டர்?" எனக் கேட்டார் பசுபதி.

"இறப்பதற்கு முன் அவள் யாருடனாவது உடலுறவு கொண்டிருக்கலாம்" என்றார்.

"மிகவும் நன்றி, டாக்டர்" எனப் போனை வைத்தார் பசுபதி.

சப்-இன்ஸ்பெக்டர் கோபி வந்தார். மற்றவர்கள் அறையை விட்டு வெளியேறினர்.

"சார்! பாஞ்சாலியைப் பற்றி விசாரித்தேன். அவளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர் ஐவர். மாட்டுத்தரகன் மாதவன், கொத்தனார் கோவிந்தன், வட்டிக்கடை வரதன், நகைக்கடை மதன்லால், வியாபாரி விநாயகம் ஆவர். இவர்கள் சம்பவம் நடந்த நாளிலிருந்து வீட்டில் இல்லை. துப்பறியும் நாய் கூட இவர்கள் வீட்டிற்குப் போய்விட்டு பஸ் நிலையம் பக்கம் ஓடியிருக்கிறது." என்றார் கோபி.

"வெரிகுட்! இது நல்ல சேதிதான். அவர்களை தீவிர விசாரணை செய்வோம்" என்றார் பசுபதி.

பசுபதி மோட்டார் சைக்கிளில் ஆழியூர் புறப்பட்டார். கூடவே சப்-இன்ஸ்பெக்டர் கோபியும் பின்னால் ஏறிக்கொண்டார். ஆழியூரை அடைந்தபோது கோபி, "சார்! அங்கே பாருங்கள்" என்று ஒரு வட்டிக் கடையைக் காட்டினார்; இன்ஸ்பெக்டர் மோட்டார் சைக்கிளை நிறுத்தினார். கடையிலிருந்து ஒருவர் எட்டிப்பார்த்தார். அவர் பார்வையில் பயம் தெரிந்தது.

"சார்! என் பெயர் வரதன். நான் மூன்று நாட்களாக திருச்சி போயிருந்தேன். போலீஸ் என்னை தேடியதாமே, சார்?" என்றார்.

"உங்களுக்கு பாஞ்சாலியைத் தெரியுமா?" எனக் கேட்டார் பசுபதி.

"பாரதத்தில் படித்திருக்கேன், சார்!" என்றார் வரதன்.

"மிஸ்டர் வரதன்! விளையாடாதீர். உங்களூர் பாஞ்சாலியை தெரியுமா?" எனச் சற்று அதட்டிக் கேட்டார்

"சுமார் இரண்டு ஆண்டாக அவளை தெரியும், சார்!" என்றார் வரதன்.

"கடைசியாக அவளை எப்போது சந்தித்தீர்கள்?" என வினவினார் பசுபதி.

"ஒரு வாரம் இருக்கும், சார்! அன்று தான் என் மனைவி பிரசவத்திற்கு ஊருக்குப் போனாள். அதை நான் டைரியில் கூட எழுதி வைத்திருக்கேன், சார்!" என்றார் வரதன்.

"பாஞ்சாலி கொலை செய்யப்பட்டு விட்டாள் என்பது உமக்குத் தெரியுமா?" எனக் கேட்டார் பசுபதி.

கொலை என்ற சொல்லைக் கேட்டவுடன் நடுங்கிவிட்டார் வரதன். "சார்! எனக்கு ஒன்றுமே தெரியாது. நான் ஏன் சார் அவளை கொலை செய்யணும்? நான் எங்கே போயிருந்தேன் என்பதைச் சொல்கிறேன். நீங்களே விசாரித்து என்னைப்பற்றித் தெரிந்து கொள்ளுங்கள், சார்!" என்றார் வரதன் பதட்டத்துடன்.

வரதன் சொன்ன ஊர், பெயர்களை பசுபதி குறித்துக் கொண்டிருந்தபோது காவலர் கண்ணன் வந்து பசுபதி காதில் மெல்ல ஏதோ சொன்னார். சிறிது நேரத்தில் மோட்டார் சைக்கிளில் சப்-இன்ஸ்பெக்டர் கோபியுடன் புறப்பட்டார் பசுபதி. மராந்தூர் காடு இருந்த பகுதிக்குப் போனார். கிராமத்தார் உதவியுடன்-பதுங்கிப் பதுங்கி ஓடிக் கொண்டிருந்த ஒருவனைப் பிடித்தார். அவன் சொந்த ஊர் ஆழியூர் என்றதும் உடனே அவனை அழைத்துக் கொண்டு அழியூர் வந்தார். அவன் தனது பெயரை மாற்றி மாற்றி சொன்னான்.

அப்போது அங்கு வந்த கிராம சேவையாளர் "சார்! இவன் எங்களூர் கொத்தனார் கோவிந்தன்." என்றார். கோவிந்தன் ஒன்றும் பேசவில்லை. கிராம சேவையாளருடன் இருவர் வந்திருந்தனர்.

**தமிழக பொலிஸ் உயரதிகாரியாக இருந்தவர் பொன்-பரமகுரு. உண்மைச் சம்பவத்தை வைத்து அவர் எழுதிய கதை இது-**

கிராம சேவையாளருடன் வந்த கடையன், "சார்! இவன் தான் பாஞ்சாலியைக் கல்லால் மண்டையில் அடித்துக் கொன்றவன்" என்றான்.

"சார்! அவன் பொய் சொல்றான். டேய்! உன் பல்லை உடைத்து விடுவேன்" என்று அவன் மேல் பாயப்போன கோவிந்தனை இன்ஸ்பெக்டர் தடுத்து நிறுத்தினார்.

கடையனுடைய பக்கத்துக் குடிசையில் வாழும் குமார், "சார்! கடையன் சொல்வது உண்மை. அன்றிரவு நானும் அவனைப் பார்த்தேன். ஏண்டா இப்படி செய்தாய் என்றபோது, என்னைக் கொலை செய்து விடுவேன் என்று மிரட்டினான்" என்றான்.

பசுபதி கோவிந்தனிடம், "நீ கொடுத்த நோட்டை குப்புசாமி நாயுடு என்னிடம் ஒப்படைத்துவிட்டான். மறைக்காதே. உண்மையைச் சொல்" என்றார்.

கோவிந்தன் சற்று யோசித்தான். "சார்! எனக்கும் பாஞ்சாலிக்கும் மூன்று ஆண்டுகளாகத் தொடர்புண்டு. கொத்தனார் வேலையில் வருமானம் சுமாராக இருந்தது. பிறகு சிமெண்ட் தட்டுப்பாடு வந்தது. வேலை கிடைக்கவில்லை. எனக்கு மனைவி, மக்கள் இருவர் வேறு உண்டு. குடும்ப வாழ்க்கை மோசமாக இருந்தது.

பாஞ்சாலி பலரிடம் தொடர்பு கொண்டிருக்கிறாள் என்பது தெரியும். வயல், ஆறு, பம்ப்செட் பக்கம் எல்லாம் சமயம் கிடைக்கும் போதெல்லாம் அவளை நாடிப் போவேன். ஒரு நாள் ரொம்ப கஷ்டப்பட்டு ஒரு மூடை சிமெண்ட் ரூ 50/- க்கு கடனாக வாங்கினேன். பணம் கொடுக்க முடியவில்லை." எனக் கூறி நிறுத்தினான்.

"அப்புறம் என்ன நடந்தது?" எனக் கேட்டார் பசுபதி.

"சார்! வாங்க என் வீட்டுக்குப் போவோம்." எனக் கூறி பசுபதி, கோபி, கிராம சேவையாளர் ஆகியோரை அழைத்துப் போனான் கோவிந்தன். வீட்டினுள் சென்று ஒரு அழுக்குச் சட்டையை எடுத்துவந்து, "சார்! இதுதான் நான் அன்றைக்குப் போட்டிருந்த சட்டை!" எனப் பசுபதியுடம் அதைக் கொடுத்தான். அதில் ரத்தக்கறை படிந்திருந்தது.

"அது சரி! எப்படிக் கொலை நடந்தது என்று சொல்லவில்லையே?" என வினவினார் பசுபதி.

"வாங்கோ, சார்! கிணற்றுக்கிட்டயே போய்க் கூறுகிறேன்." எனக் கூறி அனைவரையும் அங்கே கூட்டிப் போனான் கோவிந்தன்.

"சார்! அன்றைக்கு என் மனைவி கூலி வேலை செய்து சேர்த்து வைத்திருந்த பத்து ரூபாயை எடுத்துக் கொண்டு பாஞ்சாலியிடம் போனேன். கிணற்று ஓரம் பம்ப்செட் அருகே இடம் நன்றாக இருந்தது. பாஞ்சாலியிடம் ரூபா. 10-ம் கொடுத்தேன். என்னை மறந்து அவளுடன் இரு முறை உடலுறவு கொண்டேன். சற்று ஓய்வெடுத்து அதிகாலை 3 மணிக்கு விழித்தேன். எனக்கு செலவுக்கு பணம் வேணும்., நான் கொடுத்த 10 ரூபாயைக் கேட்டேன். பாஞ்சாலி தர மறுத்ததும் ஒரு கருங்கல்லை எடுத்து அவள் மண்டையில் அடித்தேன். அங்கேயே உயிர் பிரிந்தது. பின்பு காதிலுள்ள ஒரு தோட்டைக் கழற்றினேன். மற்றதைக் கழட்ட முடியவில்லை. உடலைத் தூக்கி கிணற்றில் போட்டேன். கால் சட்டையில் ரத்தம் தோய்ந்திருந்ததால் வாய்க்காலில் கசக்கிவிட்டு நடந்தேன். வீட்டிற்குப் போய் சட்டையை மாற்றிவிட்டு பஸ்சில் புதுக்கோட்டை போனேன். குப்புசாமி நாயுடுவிடம் ரூ 70-க்கு தோட்டை விற்றேன். ஒரு வாரமாக போலீஸ் நடமாட்டம் அதிகமாக இருந்ததால் மராந்தூர் பக்கத்திலுள்ள காட்டிற்குள் ஓடிவிட்டேன்" எனக் கூறிய கோவிந்தன் வாய்க்கால் பக்கத்தில், தான் புதைத்த, கொலைக்குப் பயன்பட்ட கல்லை தேடிக் கொடுத்தான். அதில் ரத்தக் கறை காணப் பட்டது அதைக் கைப்பற்றினார் பசுபதி.

கோவிந்தன் கைது செய்யப்பட்டு காவல் நிலையம் கொண்டுவந்தபோது அங்கு காத்திருந்த குப்புசாமி நாயுடு கோவிந்தனை அடையாளம் காட்டினார்.

நீதிமன்றத்தில் கோவிந்தனுக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

---

# கடன்காரன்

களுவாஞ்சிக்குடி யோகன்



**வெளி நாடுகளில் நம்மவர்கள் மத்தியில் ஏற்பட்டுவரும் மாற்றங்களில் ஒன்றை அடையாளம் காட்டும் கதை.**

காலை ஏழு மணிக்கு வேலைக்கு வரும்போது தொடங்கிய மழை, இப்போது முடியும் போதுகூட தொடர்ந்து கொண்டிருக்கிறது. எந்த வகையிலும் அடக்க முடியாத குளிர்வேறு.

ஐந்து மணிக்கு முடிய வேண்டியவேலை நாலேமுக்காலுக்கே வெளியில் வந்தான் சுரேஷ்.

ஆஸ்பத்திரிக்குப் போக வேணுமென்று முதலாளியிடம் சொல்லியிருந்ததால் கொஞ்சம் முதல் வெளியேறினான் அவன்.

வெளியில் நடந்து பஸ்தரிப்பு நிலையத்தை அடைந்தான். சரியான நேரத்திற்கு "ஹொஸ்பிற்றல் பஸ்" வந்து நின்றது. பஸ்சுக்குள் ஏறியமர்ந்ததும் இருந்ததைவிட மன அழுத்தம் சிறிது வேகமாகியது.

பிரசவத்திற்காக தனது மனைவி ரோகினியை ஆஸ்பத்திரியில் சேர்த்திருக்கிறான் இருபத்தைந்து வயது சுரேஷ்.

இதனால் தான் அவனுக்கு உள்ளூர ஒரு பயம் எழுந்துகொண்டேயிருக்கிறது. அவன் பயப்படுவதிலும் நியாயம் இல்லாமல் இல்லை. ஊரிலென்றால் குழந்தை உருவாகி பிரசவம்வரை சில கணவன்மாருக்கு என்ன நடக்கிறதென்றே தெரியாமல் இருக்கிறது. அப்படியெல்லாம் இங்கு ஒருவரால் இருக்க முடியுமா? அத்தனை அலுவல்களையும் அவனே கவனிக்கவேண்டியிருக்கிறதே! இந்த நாட்டில் தங்கள் வேலைகளைத் தாங்களே செய்யத் திண்டாடும் போது யார் யாரைக் குறை சொல்ல முடியும்?

முதற்பிரசவம் என்பது மறுபிறப்பு என்று வேறு கேள்விப்பட்டிருக்கிறான் சுரேஷ். அதனால் மனைவிக்கு பிரசவம் முடியும்வரை அவனின் உயிர் துடித்துக் கொண்டிருக்கிறது.

பஸ் கடைசித் தரிப்பில் நின்றதும், "ஹொஸ்பிற்றலுக்கு" நடந்து மனைவியின் அறையை அடைந்தான்.

"வேலை முடிந்து விட்டதா சுரேஷ்?" வரவேற்றாள் ரோகினி.

"டொக்டர் வந்து பார்த்தாரா?" விசாரித்தான். "காலையில் வந்து மாத்திரைகள் தந்து விட்டுபோனவர்" என்ற ரோகினி,

"நாளைக்கு மறந்திடாதிங்க, சதிஷின் பிறந்தநாளுக்கு போய்வாங்கோ" என்றாள்.

"இந்த நிலமையில எப்படி பிறந்தநாளுக்குப் போறது?" சொன்னான் அவன். "அவன் எங்கட கல்யாணத்திற்கு வந்து நின்றவன். கட்டாயம் போங்கோ" என்று வற்புறுத்தினாள் மனைவி.

"இப்பொழுது எங்களின் நிலை அவனுக்குத் தெரிய வேணும். முடிஞ்சா போறன் இல்லட்டா குழந்தை கிடைச்சதும் எல்லோரும் ஒரு நாளைக்குப் போவம்". என்று சொல்லிவிட்டு விடைபெற்றான் சுரேஷ். மறுநாள் காலை ஏழுமணி, ஹொஸ்பிற்றலிலிருந்து ரெலிபோன்- "உங்கள் மனைவி பிரசவ வேதனையில் இருக்கிறார். இப்பொழுது உங்களால் வர முடியுமா?" என்று கேட்டார்கள்.

அவசர அவசரமாக ஆஸ்பத்திரிக்கு ஓடினான் சுரேஷ். அன்று காலை பத்து மணிபோல் எந்தவித பிரச்சினையுமில்லாமல் ஆண்குழந்தை பிறந்தது. ஆஸ்பத்திரி அலுவல், மனைவியின் பராமரிப்பு இவைகளைக் கவனிக்க வேண்டியிருந்ததால் அன்று அவனால் சதிஷின் பிறந்த நாளுக்குப் போக முடியவில்லை.

ஒரு மாதங்கழித்து மனைவியுடன் போகலாமென்று நினைத்தவன் அலுவல்களைக் கவனிக்கத் தொடங்கினான்.

அந்த வார வெள்ளிக்கிழமை. வேலையிலிருந்து வீடு திரும்பினான் சுரேஷ். அன்றைக்கு வந்த கடிதங்களை பெட்டியிலிருந்து எடுத்தபோது ஒரு கடிதத்தைக் கண்டதும் அவனுக்கு ஆச்சரியம்.

"அன்புள்ள சுரேஷ், நீர் தரவேண்டிய முந்நூறையும் உடனடியாக அனுப்பிவைக்கவும்.

இப்படிக்கு

"சதிஷ்." என்றிருந்தது.

'இது எப்படி? நான் அவனிடம் பணம் எதுவும் வாங்கவில்லையே.' குழம்பிப் போனான் அவன். அப்போது சுரேஷின் வீட்டில் நின்ற கண்ணன் கேட்டான்;

"மச்சான் நீ சதிஷின் பிறந்த நாளுக்குப் போனாயா?"

குழந்தை பிறந்ததால போக முடியாமப் போச்சுடா" சொன்னான் சுரேஷ். "உன் கல்யாண வீட்டிற்கு சதிஷ் எவ்வளவு போட்டான்?" என்று திரும்பவும் கண்ணன் கேட்டான்.

தொகையைச் சொன்னான்.

"நீ அவனின் பிறந்தநாளுக்குப் போகாத படியால் அவன் உனக்குத் தந்த பணத்தை "டபுளாக" அறவிடப் பார்க்கிறான், இது தானே இங்க இப்ப நடைமுறையிலிருக்கிற பழக்கம்."

கண்ணன் சாதாரணமாகக் கூறியதும் சுரேஷிக்கு வேதனையும், ஆச்சரியமும் ஒன்றாகவே எழுந்தது.

பரஸ்பரம் சந்தோஷத்தையும் நல்லெண்ணத்தையும் வளர்ப்பதற்காக உருவாகிய அன்பளிப்பு, இன்று இந்த நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டதே. அவன் மேற்கொண்டு எதுவும் கதைக்கவில்லை. அறையினுள் நுழைந்து பணத்தை எடுத்தவன், தபாலகத்திற்கு நடக்க ஆரம்பித்தான்.

---

# யார்?

நரேஷ்



கமலா அச்சப்பட்டாள்.

யார் இவன்? பார்த்தால் கொலைகாரன்போல் இருக்கிறானே.. இவன் என்னைப் பின் தொடர்கிறானா... ஏன்?

கமலா, பயந்துபோனாள். கமலா வீட்டுக்குள் ஓடி கதவை 'டக்' என்று சாத்தினாள்.

கமலா ஜன்னல் வழியாக வெளியே பார்த்தாள்... அவன் நின்றுகொண்டு, அங்கேயே பார்த்துக்கொண்டு... அவன்தான், அந்த தாடிக்காரன்தான்..... அவனேதான் பின் தொடர்ந்து வந்தவன்.

"என்ன செய்யலாம்?" கமலா பயத்தில் முணு முணுத்தாள், பயத்தில் பரபரத்தாள்.

வீட்டிலே ஃபோன் இருந்தது. தன் கணவனுக்குப் ஃபோன் செய்தாள்.

"உடனே வாருங்கள், தாடிக்காரன் வீட்டு வாசலில் நிற்கிறான். எனக்கு ப.. பயமாக இருக்கிறது."

வருவதாகச் சொன்னான் கணவன்.

அப்போது-

கதவு தட்டப்பட்டது.

கமலா நடுக்கத்துடன் சென்று ஜன்னல் வழியாகப் பார்த்தாள்.

அங்கே..

எதிர்வீட்டுப் பெரியவர் நின்றார். அவருக்குப் பின்னால் அந்தத் தாடிக்காரன். கமலா அதிர்ச்சி வாங்கினாள்.

"என்னம்மா கமலா, உன் வீட்டுக்காரர் வந்தாச்சா?" பெரிவர்தான் கேட்டார்.

"இல்லை மாமா.. ஏன் கே.. கேட்குறீங்க?" குரலில் பிசிறடித்தது.

"இதோ.. இந்த பர்ஸ் உன் வீட்டுக்காரருடையதா பார். காலையில் பஸ்ஸில் போகும்போது தவறவிட்டிருக்கார். நல்ல வேளை இவர் கையிலே கிடைச்சது. பர்ஸில் முகவரி இருந்தது நல்லதாப் போச்சு. கொடுக்க வந்திருக்கார்."

கமலாவிடம் இருந்து பெருமூச்சு ஒன்று வெளிப்பட்டது. ஓடிப்போய் கதவைத் திறந்தாள்.

பெரியவர் மட்டும் நின்றுகொண்டிருந்தார். கையில் பர்ஸ் இருந்தது.

நன்றி சொல்ல தாடிக்காரனைத் தேடினாள்.

அவன்.. எதையும் எதிர்பாராமல்.. பாதையில் சென்று கொண்டிருந்தான்.

கமலா ஆச்சரியப்பட்டாள்.

www.padippakam.com



# இரண்டில் ஒன்று

## இலக்கிய நயம்

தருவது—ரசிகன்



தவிர் கடைந்து கொண்டிருந்தாள் பொன்னி. அவள் சிந்தனையை கடைந்துகொண்டிருந்தான் பரதன்.

இப்போது அவன் என்ன செய்து கொண்டிருப்பான்?

நீலக்கடல்மேலே தாவும் ஓடத்திலே நின்று மீனுக்கு வலை வீசிக்கொண்டிருப்பான்.

கடலுக்குச் செல்லாமல் வீட்டில் இருந்திருந்தால் என்ன செய்து கொண்டிருப்பான் இப்போது? நினைக்கவே பொன்னியின் மேனியில் பூஞ்சிறகால் வருடப்பட்டதுபோன்ற குறு குறுப்பு.

"பொன்னி!"

"நான்தான். என்ன?" பொய்யாகச் சீறுவாள்.

"உடம்பு முழுக்க வலியாக இருக்கிறது."

"வெந்நீர் வைத்துத்தரவோ?"

"வெந்நீர் எதற்கு, என் நீ இருக்க!"

"ஆரம்பித்து விட்டீர்களாக்கும். எனக்கு வேலையிருக்கிறது." வலையில் சிக்காத மீனாக நழுவுவாள்.

"கட்டி வெல்லம் கசக்குமோ? கரும்புச் சுவை தெவிட்டுமோ? கட்டித்தா முத்தம் கொட்டித்தா என்று கேட்டால், நீ எட்டி எட்டி போவதுதான் வெட்டிப் போடுகிறது என் மனதை!"

"கூத்துப் பார்த்தீர்களாக்கும். அதுதான் பாடமாக்கிக்கொண்டுவந்து ஒப்புவிக்கிறீர்கள்!" சொல்லிக்கொண்டே குவளையில் மோர் கொண்டுவந்து நீட்டினாள்.

குவளையை வாங்கும் சாக்கில் அவள் விரல்களையும் அழுத்திப்பிடித்துக் கொண்டான் காளை.

அவள் விரல்களை தன் விரல்களால் கோர்த்துக் கொண்டே, மறு கரத்தால் மோர் குவளையை விடுவித்து அருகே வைத்தான்.

"ஜோசியம் பார்க்கவா" என்றான்

"ஜோசியமா நீங்களா? எங்கே கற்றீர்கள்?"

"எங்கோ கற்றேன். அது ஏன் உனக்கு?"

சொல்லிக்கொண்டே அவளை இழுத்து அருகில் உட்காரவைத்துவிட்டான். அவன் நோக்கம் பொன்னிக்கு புரியாமல் இல்லை. அவன் விட்ட மூச்சில் இருந்தே அவன் தகிப்பு தெரிந்தது. அவன் விழிகள் செய்த குறிப்புகளில் இருந்தே அவன் தவிப்பு புரிந்தது.

தெரிந்தும் தெரியாததுபோல அவன் போக்கில் விட்டுப்பிடித்தாள்.

"வலதுகையை விரி". விரித்தாள். குனிந்து முத்தமிட்டான்.

"இதென்ன ஜோசியம்?"

"வசிய ஜோசியம்." என்று சொன்னான். ஒரு சில நொடிகள் உள்ளங்கையை உற்றுப்பார்த்துக் கொண்டே இருந்துவிட்டு:-

"நெஞ்சுக்குள் ஆசை இருக்கும்; வாய்விட்டுச் சொல்ல வெட்கம் தடுக்கும்! கொஞ்சத்தான் மனசு பஞ்சாய்ப் பறக்கும், வெட்கந்தான் இதழைத் தடுக்கும்! கொஞ்சத்தான் என்னை நீ கொஞ்சத்தான் என்று உன் நெஞ்சு பேசும்; அதையும் வெட்கந்தான் வெளியே கேட்காமல் தடுக்கும்! உண்ணத்தான் என்னை எடுத்து உண்ணத்தான் என்று பருவம் அழைக்கும்; அந்த நினைப்பாலே மேனி எழில் மேலும் சிவக்கும்! என்னத்தான் இரகசியம் என்னத்தான்? என்று ஆசை கொண்ட மனம் அறியத் துடிக்கும்; வெட்கந்தான் அந்த துடிப்பை திரைபோட்டு மறைக்கும்!"

பொன்னிக்கு ஆச்சரியமாக இருந்தது. உண்மையாகவே ஜோசியம் கற்றுக்கொண்டு வந்துவிட்டாரோ?!

என் மனதில் இருப்பதையெல்லாம் கண்ணாடியில் முகம்பார்த்து சொல்வது போல சொல்லுகிறாரே என்று நினைத்த போது, வெட்கம் மொய்த்தது.

"என்ன, ஜோசியம் எப்படி?"

"அண்டப் புளுகு!" என்றாள் பிடிகொடுக்காமல்.

"இதுவரை சொன்னது அக ஜோசியம்."

"ஓஹோ."

"இனிச் சொல்லப்போவது புற ஜோசியம்."

"அப்படியா?"

"முல்லைநகை இதழ். வில்லை நிகர்விழி. கொள்ளையிடும் இதழ் மொழி. ஒரு கையளவுக்குள் சிக்கும் கழுத்து, சற்று நகர்ந்தால் முற்றித்திரண்டிருக்கும் கலையழகு எழில்கள்; குலைவாழை தண்டொத்த கால்கள், மொத்தத்தில் மனம் பித்துப் பிடிக்கும் இது திண்ணம்! கொத்தும் கிளியாவான் காளை; கொடுக்கும் பழத்தோட்ட மாவாள் பாவை! கோல எழில் மேனி தாவி, சுகம் காவித்திரியும் மனக் குரங்கு!"

"போதும், போதும். ஜோசியம் எல்லை மீறுகிறது."

"என்ன செய்வது பெண்ணே; இந்த ஜோசியனின் மனம் கொள்ளை போகிறதே, கொள்ளைபோகிறதே! கட்டறுத்த மனக் குரங்கு எல்லை மீற நினைத்தாலும், வில்லை நிகர்த்த விழிகள் மிரட்டுகின்றவே!"

பொன்னிக்கும் அவன் சம்பமும், ஜோசியம் என்ற பெயரில் அவன் சொன்னவைகளும் நெஞ்சுக்குள் ஆசையை கொம்பு சீவிவிட்டன.

"முல்லை இதழில் தேன் எடுக்க, கொல்லைப்புறமாய் வந்த காளைக்கு, உண்ண மோர் கொடுத்ததை என்னென்பேன்? இனிப்பை நாடி வந்தவனை புளிப்புக் கொடுத்து பழித்தாயோ, குற்றம் அறிந்து நீ தெளிந்துவிடு, சுற்றம் மறந்திருக்க உன் சம்மதம் கொடுத்துவிடு!"

"பொல்லாத ஜோசியர்!" எழுந்து கொள்வதுபோல நடித்தாள். தடுத்தான். தழுவிக் கொண்டான். மீன் நழுவ நினைக்கவில்லை.

"பொன்னி."

"ம்" என்றாள் ஒற்றைச் சொல்லாய். வார்த்தைகள் தடுமாறும் நேரம் இது. வரும் வார்த்தைகள்கூட ஒப்புக்காக இருக்குமே தவிர, பொருள் நிறைந்து இருக்காது.

"நான் மட்டும்தான் தரவேண்டுமா? ஒன்று தந்தால் நூறாக தரவேண்டும் நீ! அப்போதுதானே களிப்பாறு பாயும்!"

பொன்னிக்கும் அவனை புரட்டி எடுக்க ஆசைதான்.

உழைத்து உழைத்து வைரம்பாய்ந்த அவன் உடலெங்கும் இதழ்களால் ஒத்தடம் கொடுக்க வேண்டும். ஊர்வலம் நடத்த வேண்டும் என்று துடிப்புத்தான்.

'போதும் போதும்' என்று அவனை இன்பக்கடலில் மூச்சுத்திணற வைக்க வேண்டும் என்றெல்லாம் ஆசைதான்.

நினைத்து நினைத்து நீண்டநாளாக நிறைவேறாத ஆசை அது.

இன்று சாதிக்க நினைத்தாள்.

அதே வெட்கம் தடம் போட்டது. பொன்னி தனக்குள் பேசினாள்.

"மனமே கேள்!"

"சொல், கேட்கிறேன்!"

"ஆசையுண்டுதானே அவர்மீது!"

"உண்டு; ஆழம் காணாத கடலளவுக்கு!"

"ஒன்று கலந்து உலகை மறக்க விருப்பம்தானே!"

"நெஞ்சு துடிக்கிறது, நினைப்பு சுடுகிறது!"

"எனக்கும் புரிகிறது! விளக்கம் கிடைக்கிறது! ஒரு கை தட்டினால் ஓசை வராது! கூடலிலும் இருவரும் ஒருவராய் மயங்கினால் தான் ஆசை தழைக்கிறது. ஆர்வம் கிடைக்கிறது! உள்ளம் நிறைகிறது. எனவே என்மனமே! தயங்காதே, வட்டியும் முதலுமாக திருப்பிக்கொடு!"

"கொடுக்க நினைத்தாலும் நாணம் கெடுக்கிறதே, நான் என்ன செய்ய?"

**"மனமே, மனமே, ஒன்றில் ஆசையை விட்டுவிடு, அல்லது வெட்கத்தை விட்டுவிடு. இரண்டையும் ஒரே நேரத்தில் என்னால் தாங்கமுடியாது. இரண்டில் ஒன்றை முடிவு செய்!"**

"புரிந்தது. மோகத்தை கொன்றுவிட்டால் இந்த நிலவு அவர் என்னும் மேகத்தில் வாழ்வது எப்படி? ஆகவே, கொன்றுவிட்டேன் வெட்கத்தை!" என்றது மனம்.

பரதன் இறுக்கப்பட்டான். பரதன் செவ்விதழ் சொரிந்த தேன் மழையில் நனைந்து போனான்.

இப்போது நினைத்த போதும் பொன்னி தன் துணிச்சலை நினைத்து வியந்து கொண்டாள். பரதன் பட்ட பாட்டை நினைத்து சிரித்துக் கொண்டாள். தயிர் கடையப்பட காத்திருந்தது.

மனதோடு பேசி இரண்டில் ஒன்று முடிவு செய்ய நினைக்கும் காதலியை திருவள்ளுவர் காட்டியிருக்கிறார் திருக்குறளில். அது இப்படி:

**"காமம் விடுஒன்றோ நாண்விடு நன்னெஞ்சே**
**யானோ பொறேன் இவ் விரண்டு"**

குறள்:- 1247. அதிகாரம்-125

# மேற்கிந்திய அணியின் விசுவரூபம்

கென்யா அணியோடு மோதி துவண்ட போது மேற்கிந்திய தீவு அணியின் கதை கந்தல் என்றுதான் எல்லோரும் நினைத்தார்கள்.

கிரிக்கெட் என்பதும் சூதாட்டம் மாதிரித்தான். யார் எந்த நேரத்தில் அடித்து தூள் பண்ணுவார்கள் என்று முன்கூட்டியே கணிப்பது கஷ்டம்.

அவுஸ்திரேலியாவை தோற்கடித்து கால் இறுதியாட்டத்திற்கு வந்தது மேற்கிந்திய அணி.

இம்முறை உலகக் கிண்ணத்தை தூக்கிக் கொண்டு சென்றுவிடுவார்களோ என்று நினைக்க வைத்தது தென்னாபிரிக்க அணி.

கால் இறுதிவரை ஒரு போட்டியில்கூட தோல்வி காணவில்லை.

மேற்கிந்திய அணியை கால் இறுதிப் போட்டியில் தென்னாபிரிக்கா ஊதித்தள்ளி விடும் என்றுதான் பல்லாயிரம் இரசிகர்கள் பந்தயம் கட்டியிருந்தார்கள்.



ஆனால், முடிவு? தலை கீழாகிவிட்டது. இம்முறை உலக கிண்ணத் தொடரில் பல தோல்விகளைக் கண்ட மேற்கிந்திய அணியிடம், தோல்விகளையே சந்திக்காத தென்னாபிரிக்கா வீழ்ந்தது.

அதற்கு முன்னர் அவுஸ்திரேலியாவை தோற்கடித்ததுகூட மேற்கிந்திய அணி படைத்த சாதனைதான்.

கென்யாவிடம் வாங்கிய மரண அடி மேற்கிந்திய வீரர்களை உசுப்பிவிட்டது.

அவுஸ்திரேலியாவுக்கு எதிராகவும், தென்னாபிரிக்காவுக்கு எதிராகவும் பிரையன் லாராவும் நன்றாக விளாசினார். பந்துவீச்சு, பந்து தடுப்பு இரண்டிலும்கூட புகுந்து விளையாடினார்கள்.

மேற்கிந்திய அணியினர் உறுதி கொண்டு எழுந்தால் சாதிக்கும் என்பதை காட்டிவிட்டார்கள்.

# துடுப்பாட்ட சாகசம்



ஒரு காலத்தில் கேலி செய்யப்பட்ட இலங்கை அணி தற்போது மூக்கின்மேல் விரல்வைக்கச் செய்துகொண்டிருக்கிறது.

முதல் 15 ஓவர்களில் ரன்களைக் குவிப்பதில் துடுப்பாட்ட வீரர்கள் காட்டும் தீவிரம் பந்துகள் பவுண்டரி நோக்கி பறக்கச் செய்கிறது. இரசிகர்களின் உற்சாகம் வானைத் தொடுகிறது.

கென்யாவுக்கு எதிராக கண்டியில் பொழிந்தது ரன் மழை.

சின்ன மைதானம் என்பதால் விளாசினார்களோ என்றும் நினைக்கத் தோன்றியது.

ஆனால், பாகிஸ்தானின் பைசலபாத் நகரில் இங்கிலாந்துக்கு எதிராக இலங்கை அணி அடித்த அடி அந்த நினைப்பை தவறு என்றாக்கியது.

துவக்க ஆட்டக்காரரான ஜெயசூரியாவின் 'பேட்' சாகசம் செய்தது. 13 பவுண்டரிகள், 3 சிக்சர்கள், 47 பந்துகளில் 82 ரன்கள். மரண அடி.


இதுவரை நடைபெற்ற சகல உலக கிண்ணப் போட்டிகளிலும் அரை இறுதி வரையும், ஒரு தடவை இறுதிப் போட்டி வரையும் முன்னேறிய இங்கிலாந்தை இம்முறை கால் இறுதிப் போட்டியோடு திருப்பியனுப்பிவிட்டது இலங்கை அணி.

இங்கிலாந்துக்கு எதிரான ஆட்டத்தில் மிகத் திறமையாக மட்டை போட்டு இரசிகர்களின் பொறுமை சோதித்தார்கள் ரோஷான் மகாநாமவும், ஹஷன் திலகரத்னாவும்.

# மறக்க முடியவில்லை மறக்க முடியவில்லை

சச்சின் டெண்டுல்கரின் சாதனைகளில் மறக்க முடியாதவை:-

1. ரஞ்சிக் கோப்பை போட்டியில் 15 வயதில் சதம் அடித்தார்.
2. இராணி கோப்பை போட்டியில் 16 வயதில் சதம் அடித்தார்.
3. துலிப் கோப்பை போட்டியில் 17 வயதில் சதம்.
4. இந்த மூன்று போட்டிகளிலும் தான் ஆடிய முதல் ஆட்டத்திலேயே சதம் அடித்தார்.
5. மிக இளம் வயதில் -அதாவது 16 வருடம் 205 நாளில் டெஸ்ட் விளையாடிய முதலாவது இந்தியர்.
6. மிக இளம் வயதில் ஒருநாள் போட்டியில் பங்குபற்றிய இந்தியர்.
7. மிக இளம் வயதில் சதம் அடித்தவர் (17வயது 112 நாட்கள்)
8. 19 வயதுக்குள் 5 சதங்களை எடுத்த ஒரே உலக வீரர்.
9. 19 வயதிற்குள் 1000 ரன்கள் எடுத்த சாதனையாளர்.
10. முதல் தர போட்டியில் மிக இளம் வயதிலேயே 7000க்கும் அதிகமான ரன்களை குவித்தவர்.



# குறுக்கெழுத்துப் போட்டி இல—144

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | | ■ | 3 |
| | ■ | 4 | | | ■ | |
| | ■ | | ■ | 5 | 6 | |
| 7 | 8 | | | ■ | | ■ |
| ■ | | | ■ | ■ | | 9 |
| 10 | | ■ | 11 | | | |
| 12 | | | | | ■ | |

**இடமிருந்து வலம்**

01. பண்டைய அரச வம்சத்தினர் இதில்தான் பயணம் செய்வார்கள்.
04. இதனை அழிப்பதனால் மழை வீழ்ச்சி குறையும் என விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.
05. ஆற்றைக் கடக்க பயன்படும்.
07. இந்திய சுதந்திரத்துக்காக தங்கள் உயிர்களையே....செய்தார்கள் பலர்.
11. சீனத் தலைநகரில் இவர்களுக்காக பெரு விழா ஒன்று அண்மையில் நடைபெற்றது.
12. கோபக்கார முனிவர்.

**மேலிருந்து கீழ்**

01. வெப்பத்திற்கு ஏற்ற துணி.
02. சமையலில் சேர்க்கப்படும் வாசனைப் பொருள்.
03. பெண்களின் இதழுக்கு இதை ஒப்பிடுவார்கள்.
06. காயானாலும் கறிக்குச் சுவைதான்; பழமானாலும் தனியான சுவைதான்.
08. மாயக் கண்ணன் வளர்க்கப்பட்டது இவர்களால் தான்.
09. ஐரோப்பிய நாடு ஒன்று.
10. இது பூமியில் இருந்தும் கிடைக்கிறது.

இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 23.03.1996 இற்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பி வைக்கவேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-144
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

இதற்கான சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசாக வழங்கப்படும்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல-142ற்கான சரியான விடைகள்:**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 த | ங் | 2 க | ம் | ■ | ■ | 3 சா |
| ட | ■ | 4 த | த் | 5 து | வ | ம் |
| ய | 6 வ | ம் | ■ | ரு | ■ | ப |
| ம் | ல | ப | ■ | ■ | ■ | ல் |
| ■ | 7 து | ம் | பை | ப் | 8 பூ | ■ |
| 9 சா | ■ | ■ | 10 பி | ர | ச் | னை |
| 11 தி | ங் | க | ள் | ■ | சி | ■ |

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 142இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்:**

1. எஸ். சங்கர், குருமன்காடு.
2. எம். டில்ஷாத், உக்குவளை.
3. திருமதி. மஞ்சுளா ராமச்சந்திரன், நாவலப்பிட்டி.
4. நஸீரா ஆப்தீன், மதவாச்சி.
5. செல்வி. மலர்விழி யேசுதாசன், கொட்டாஞ்சேனை.
6. எம். அப்துல் சலீம், அப்புத்தளை.
7. றஸ்மியா முஹ்ஸின், தர்ஹா நகர்.
8. செல்வி. எஸ். தர்ஷினி, வத்தளை.
9. ஏ. ராஜேஸ்வரன், புசல்லாவை.
10. என். மஸாஹிர், வெளிமடை.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.



படிப்பகம்

# இராமாயணம் அங்கம் 24

அயோத்திமாநகரம் சோபை இழந்து காணப்பட்டது. ஆலயங்களில் பூசைகள் இடம்பெறவில்லை. வீதிகளில் மக்கள் நடமாட்டம் மிகவும் அரிதாகவே காணப் பட்டது. கடைவீதிகளெல்லாம் வெறிச் சோடிக்கிடந்தன. வீதிகளின் இருமருங்கும்- எப்போதும் பட்டொளி வீசிப் பறந்து கொண்டிருக்கும் கொடிகளெல்லாம் கம்பத் தில் சுற்றிச் சுருண்டு கிடந்தன.

கேகய நாட்டிலிருந்து புறப்பட்ட பரதனும் சத்துருக்கனும் லவிதகுமாரனும் அதிவேகமாகச் செல்லும் குதிரைகள் பூட்டப்பட்ட இரதத்தில் அயோத்திக்கு விரைந் தனர். புறப்பட்டு ஏழாவது நாளன்று பகல் அயோத்தி மாநகரை அணுகிக் கொண்டிருக் கும்போதே கோசல நாட்டில் குடிகொண்டி ருந்த சோகத்தின் சாயலை ஓரளவு உணரக்கூடியதாகஇருந்தது. கோசல நாட்டின் எல்லைக்கு வந்ததும் எங்குமே தாமதிக்காமல் அம்மூவரும் பயணம் செய்தனர்.

அயோத்தி நகர எல்லையை மிதித்த தும், நடக்கக்கூடாத காரியம் ஏதோ நடந்து விட்டதை பரதன் உணர்ந்து கொண்டான். காரணத்தை எவரிடமாவது விசாரித்தறிய நின்றாலும், நேராக அரண் மனைக்குச் செல்லும் நேரத்தில் தாமதம் ஏற்பட்டு விடுமோ என்று அஞ்சியே இரதத்தை கனவேகமாகச் செலுத்த சாரதிக்கு பரதன் கட்டளையிட்டிருந்தான்.

வழமையாக பகல் வேளைகளில் சக்கரவர்த்தி தசரதர் தங்கியிருக்கும் அரண் மனைக்கு முதலில் சென் றான். இடம் வெறிச் சோடிக் கிடந்தது. மனத்தில் விபரிக்க முடியாத பாரம் அழுத்த தனது தாயார் கைகேயியின் அந்தப்புரத்தில் மன்னர் இருக்கக் கூடும் என்று கருதிய பரதன் அங்கோடிச் சென் றான்.

அந்தப்புரத்தின் நடு மண்டபத்தில் அலங்காரமான தொரு இருக்கையில் கைகேயி அமர்ந்திருந்தாள். மகன் பரத னைக் கண்டதும் ஓடோடி வந்து அவனை அணைக்க முற்பாட்டாள். பரதனோ தாயாரின் பாதங்ளைத் தொட்டு வணங்கினான். அவனைத் தோள் தொட்டு, உச்சி மோந்து, அணைத்து மகிழ்ச்சியை வெளிக்காட்டிக் கொண்டாள் கைகேயி.

### பரதனின் பெருந்துயர்

"அம்மா! அப்பா எங்கே? அவரை அரண்மனையிலும் காணவில்லை; இங்கும் காணவில்லை; பெரியதாயாரின் அந்தப் புரத்தில் இருப்பாரா? அவரை நான் உடனே காணவேண்டும். எங்கே அம்மா இருக்கிறார்?" என்று வினவினான், பரதன், இதேவேளையில் தான் சத்துருக்கனும் அங்கு வந்து சேர்ந்தான். பரதனுடைய வேகத்துக்கு சத்துருக்கனாலோ லலிதகுமாரனாலோ ஈடுகொடுக்க முடியவில்லை.

"மகனே! நெடுந்தூரம் பயணம் செய்து களைப்புடன் வந்திருக்கிறாய். இதோ உனக்கெனத் தயார் செய்யப்பட்ட இந்தப் பொன்னாசனத்தில் சற்று நேரம் அமர்ந்து கொள். களைப்புத் தீரப் பழரசம் தருகிறேன்; பருகிவிட்டு ஆறுதலாக சகலவற்றையும் நீ அறிந்து கொள்ள விபரமாகக் கூறுகிறேன்," என்று கைகேயி அங்கிருந்த- அழகிய வேலைப் பாடமைந்த ஆசனத்தை பரதனுக்குக் காண்பித் தாள். தன் தந்தையைக் காணவேண்டும் என்று துடிப்புடனிருந்த பரதனுக்கு ஆசனமோ பானமோ வேறு உபசாரமோ அப்போது தேவைப்படவில்லை. தந்தை இருக்குமிடத்தைக் கூறும்படி அவன் வற்புறுத்தினான்.

"மகனே! இப்பூவுலக வாழ்வை முடித்து விட்ட எவரும் எங்கே போய்ச் சேர்கிறார் களோ அங்கே உன் தந்தையும் போய்ச் சேர்ந்துவிட்டார். அவருடைய இடத்தை நிரப்பவே உன்னை அவசர அவசரமாக அழைக்க வேண்டியிருந்தது" என்று கைகேயி கூறிமுடிப்பதற்கிடையில் தன் தலையில் ஓங்கி அறைந்து கொண்டு ஓவெனப் பெரும் சப்தத்துடன் பரதன் அழத் தொடங்கினான். பரதனுடன் சத்துருக்கனும் சேர்ந்து கொண டான். இருவருடைய புலம்பலும் அவ்வந்தப் புரத்தின் பல திக்கிலுமிருந்த பலரையும் ஈர்த்தது. அனைவருடைய கண்களிலிருந்தும் கண்ணீர் ஆறாகப் பெருகியது.

## "அண்ணனை அழைத்து வந்து அரியணை ஏற்றிவைப்பேன்" -பரதன்

இத்தகைய சோகம் கைகேயியை எந்த வகையிலும் பாதித்ததாகத் தெரியவில்லை. அவள் கூந்தல் அவிழ்ந்திருந்தாலும், நெற்றி யில் பொட்டில்லாதிருந்தாலும் அவளுடைய உள்ளத்தில் எதுவித கவலையும் இல்லாத மையினால் முகம் சற்றுக் களிப்புடனே காணப்பட்டது.

"மகனே! நீ இவ்வாறு புலம்புவது அழகல்ல; இந்த நாட்டு மன்னனாக அரியணை ஏறவேண்டியவன் நீ! தலைவன் இல்லாத நாட்டு மக்களுக்கு தலைவனாக இருந்து மக்கள் துயர் துடைக்க வேண்டிய வனான நீயே இவ்வாறு துயரப்படலாமா?"

இவ்வாறு கைகேயி கூறிய வார்த்தை பரதனின் காது வழி புகுந்து அவனை மட்டுமல்லாமல் சத்துருக்கனையும் கலக்கி யது. "அம்மா! அயோத்தி மக்களுக்குத் தலைவன் நானா? என்னம்மா கூறுகிறீர்கள்? நீ ஆட்சி பீடமேறும்போது இராமனால் உன் உயிருக்கே ஆபத்து ஏற்பட்டாலும் ஏற்படலாம் என்பதனால், உன் அப்பா விடமே, இராமனை பதினான்கு வருடம் வனவாசம் போகும்படி அம்மா வரம் கேட்டுப் பெற்றுக் கொண்டாள். அவனோடு அவன் பெண்சாதி சீதையும் இலக்குமணனும் போய்விட்டார்கள். உனக்கு இனி எந்தப் பயமுமே இல்லை. இந்த நாட்டுக்கு இனிமேல் நீதான் அரசன்!"



பரதன் வந்து விட்டான் என்று கேள்விப் பட்டதும் ஓடோடி வந்த கூனியான மந்தரை மிகமிக உற்சாகத்துடன் கூறி முடிக்கும் முன்னரே அவளுடைய வலது இடையில் பரதன் தன் காலால் எட்டி உதைத்தான். பல கரணங்ளைப் போட்டு கூனி தரையில் உருண்டாள்.

எரிமலை ஒன்று குமுறுவது போல் பரதனின் உள்ளமும் உடலும் பதறியது. கோபக் கனல் தெறிக்கும் கண்களுடன் தன் தாயாரை நெருங்கினான். "என்ன காரியம் செய்திருக்கிறாய் அடி பாதகி! இப்பொழுது தெரிகிறது- என் தந்தை இறந்ததற்கான காரணம்! என் அண்ணன் மீது சக்கரவர்த்தி வைத்திருந்த பாசத்தை நன்கு தெரிந்தவள் நீ! அண்ணனை அப்பாவிடமிருந்து பிரித்ததனால் அவர் உயிர் பிரிந்தது. ஒரே கல்லில் இரு மாங்காய்களை உதிர்த்து விட்டாய்! கணவனை இழந்தாலும் உன் மகன் மட்டும் சிறப்பாக வாழட்டும் என்று கருதினாயா? பேராசை பிடித்த பேயே! என் அண்ணன் உன் மீது எத்தகைய பாசத்தை வைத்திருந்தார். இந்த நாட்டு மக்கள் அவர் மீது எத்தகைய அபிமானம் வைத்திருந் தனர். அப்பேற்பட்ட தெய்வத்தை அரியணையிலேற்ற ஆசைப்பட்ட மக்கள் என்னை அவர்களுடைய அரசனாக ஏற்றுக் கொள்வார்களா?

அவருக்குரிய அரியணையில் நான் தான் அமர்வேன் என்று எண்ணிக் கொண்டாயா? நீ என் தாயல்ல பேராசை பிடித்த பிசாசு!" இவ்வாறு அழுது புலம்பியவண்ணம் பரதன் அவ்விடம் விட்டகன்று பெரியதாயார் கோசலாதேவியின் அந்தப்புரவாசலைப் போய் அடைந்தான்.

### மன்னனுடலுக்கு மகனிட்ட தீ

பரதனும் சத்துருக்கனும் வந்து விட்டனர் என்பதனை கேள்வியுற்ற கோசலாதேவியும் சுமத்திராதேவியும் பரதனைக் காண்பதற்காக அந்தப்புரத்திலிருந்து அப்போதுதான் வெளிவந்து கொண்டிருந் தனர். ஓடோடி வந்த பரதன் கோசலாதேவியின் காலடியில் வீழ்ந்து மூர்ச்சித்தான். சத்துருக் கனும் அவர்கள் பாதங்களில் வீழ்ந்தான்.

அமைச்சர் சுமந்திரரும் வசிட்ட மாமுனி வரும் அப்போது அவ்விடம் வந்து சேர்ந்த னர். பரதன் சுயஅறிவு பெற்றதும் பலத்த சப்தத்துடன் அழ ஆரம்பித்துவிட்டான். பரதனுக்குப் பட்டம் கட்டுவதற்கு கைகேயி செய்த சூழ்ச்சியில் பரதனுக்கும் பங்கிருக்க லாம் என்று தான் ஆரம்பத்தில் கோசலாதேவி யாரும் நம்பியிருந்தார். ஆனால் பரதனின் நிர்மலமான இருதயத்தை அவன் அழுகை புலப்படுத்தி விட்டது. கோசலையின் அந்தப் புரவாயிலில் வைத்தே, "எப்படியாவது கானகம் சென்று அண்ணன் இராமனை அழைத்து வந்து அயோத்தியின் அரியாசனத் தில் அமர்த்தியே தீருவேன்" என்று பரதன் பிரதிக்ஞை எடுத்துக் கொண்டான். இதனைத் தொடர்ந்து வசிட்டமாமுனிவரும் அமைச்சர்களும் கூடி தசரத மாமன்னரின் இறுதிக் கிரியைகளுக்கான ஏற்பாடுகளைச் செய்தனர்.

எண்ணைக் கொப்பரையில் வைக்கப் பட்டிருந்த மன்னரின் சடலம் வெளியே கொண்டு வரப்பட்டு, சாஸ்திர முறைப்படி சகல கிரியைகளும் நடைபெற்று முடிந்ததும் பரதனும் சத்துருக்கனும் சிதைக்குத் தீ மூட்டினர்.

(தொடர்ந்து வரும்)

இராஜகுமாரன்

### கூனிக்குக் கிடைத்த பரிசு

தேவரும் மூவரும் மெச்ச- தன்னிகரில் லாததோர் ஆட்சி செலுத்திய சக்கரவர்த்தி தசரதருக்கு அடுத்து மக்களை வழி நடத்த எனக்கென்ன தாயே உரிமை இருக்கிறது? ஏன் என் அன்பான அண்ணன் இராமச் சந்திரப்பிரபு இருக்கிறாரே! நமது வம்ச முறைப்படி மன்னரின் மூத்த மகன்தானே மன்னரைத் தொடர்ந்து ஆட்சி பீடமேற வேண்டும். மன்னரின் இரண்டாவது புதல்வ னான எனக்கென்ன உரிமை இருக்கிறது தாயே?" என்றவாறு எதுவுமே அறியாத புதிருக்கு விடைகாணும் துடிப்புடன் பரதன் வினவினான்.

பரதனின் பின்புறத்திலே இருந்து ஒரு மெல்லியகுரல் கேட்டது. "இராமனா? அவன் காட்டுக்குப் போயிட்டானே! மகனே பரதா! அயோத்தியின் அரியாசனம் உனக்கே கிடைக்க வேண்டும் என்பதற்காக கைகேயியும் நானும் போட்ட திட்டப்படி இராமனுக்கு எற்பாடான பட்டாபிஷேகம் நிறுத்தப்பட்டது. உனக்கே அரசாளும் உரிமையை மன்னரிட மிருந்து உன் தாயார் பெற்றுக் கொண்டாள்.

**இராமாயணப் போட்டி: 22**
**சரியானவிடை:- கேகய நாடு**

**1. எம். வை. வலினா மன்சூர்.**
514, தெஹிகஸ்தலாவ, பலாங்கொடை.
**2. ஆர். என். ராஜா.**
இல.72, கண்டி வீதி, கம்பளை.
**3. க. தனஞ்செயன்.**
பிள்ளையார் கோயில் வீதி, களுவாஞ்சிக்குடி.
**4. என். ஜீவராணி.**
75, கொட்டாஞ்சேனை வீதி, கொழும்பு-13.
**5. வீரையா ஜெயந்தி.** மிடில்டன் எஸ்டேட், தலவாக்கெல.

**போட்டி இல. 24** கேள்வி:- கைகேயி செய்த சூழ்ச்சியில் பரதனுக்கும் பங்கிருந்ததா?

மார்ச்.23க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்கப்பட வேண்டிய முகவரி:
**இராமாயணப் போட்டி- இல.24, தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.**

# பயோடேட்டா



பெயர்:- அரசியல் தீர்வு யோசனை.
முகவரி:- இலங்கை
தற்போதைய வதிவிடம்:- பாராளுமன்ற தெரிவுக்குழு.
பெற்றோர்:- பொதுஜன முன்னணி.
பிரசவ வைத்தியர்கள்:- ஜி.எல்.பீரிஸ், நீலன்
இட்ட பெயர்:- தீர்வு யோசனை சட்ட நகல்.
தொழில்:- சர்ச்சைகளை கிளப்புவது.
பொழுது போக்கு:- காலத்தை இழுத்தடிப்பது.
பிடித்தமானது:- எந்தத் தீர்விலும் இல்லாத ஒன்று உன்னிடமிருக்கிறது என்று புகழப்படுவது.
சமீபத்திய எதிரிகள்:- பௌத்த மதகுருமார்கள்.
நிரந்தர எதிரிகள்:- எதிர்க்கட்சிகள்.
விரும்புவது:- பிராந்திய சபைகள்.
வெறுப்பது:- வடக்கு-கிழக்கு இணைப்பு.
நம்பும் தந்திரம்:- திருத்தங்ளை வரவேற்பது.
மூடு மந்திரம்:- வடக்கு-கிழக்கில் பிய்த்தெடுக்கப்போகும் பகுதிகள்.
நம்பும் ஆயுதம்:- கலைக்கும் அதிகாரம்.
நம்பியிருப்பது:- முடிவற்ற விவாதங்களை.
அதிகாரப்பகிர்வு என்று கருதுவது:- கொஞ்சம் கொடுப்பு, கொஞ்சம் பறிப்பு.
சின்ன சின்ன ஆசைகள்:- அடுத்த தேர்தல் வரை பாராளுமன்ற தெரிவுக் குழுவில் குடியிருக்க ஆசை. ஆளும் கட்சிக்கு அகில உலகில் பெயரெடுத்துக் கொடுக்க ஆசை.
தடைகள்:- அடுத்த தேர்தலில் வெற்றிபெற நினைக்கும் எதிர்க்கட்சிகள்.

# காதிலை பூ கந்தசாமி

அரசியல் தீர்வு யோசனையை வரவேற்ற கூட்டணித் தலைவர் மு.சிவசிதம்பரம் அவர்கள் கவிதை எழுதினால் எப்படியிருக்கும்? காதிலை பூ கந்தசாமி கற்பனை செய்கிறார்.



### தலைவர் எழுதிய பாடல்

"எந்தத் தீர்விலும் இல்லாத ஒன்று
அது ஏதோ, அது ஏதோ
உன்னிடம் இருக்கிறது.
அதையறியாமல் விடமாட்டேன்.
அதுவரை அறிக்கை விடமாட்டேன்.
(எந்தத்)

ஆகஸ்ட் 95 இல் பொலிவாய் வந்து
தை 96 இல் மெலிந்து வந்தாயே அதுவா?
ஓ... அதுவா, ஓ... அதுவா...?

வடக்கு-கிழக்கை
இரண்டாய் காட்ட
உன் நெஞ்சு துடிக்கும்
துடிப்பின் ஓசை அதுவா?

எல்லைகள் புதிது என்று கூறி
கிள்ளியெடுக்கத் துள்ளும் அழகு
உனக்குள் உண்டே அதுவா?
ஓ... அதுவா...ஓ... அதுவா?
(எந்தத்)

சபைகளை கலைத்து மிரட்டும் கத்தி
உன் கைகளில் உண்டே அதுவா?
புதிராய் பலதை விட்டுவைத்து
ஆசை காட்டும் தந்திரம் உண்டே அதுவா?

ஏதோ.... அது.....ஏதோ
உன்னிடமிருக்கிறது.
அதையறியாமல் விடமாட்டேன்.
அதுவரை அறிக்கை விடமாட்டேன்."
(எந்தத்)

# ரஜினி நம்மோடுதான்

நடிகர் ரஜினிகாந்த் அரசியலுக்கு வரமாட்டேன் என்று அறிவித்துவிட்டார். தமிழக அரசியல் தலைவர்களின் அபிப் பிராயங்கள் எப்படி இருக்கும்? ஒரு கற்பனை.

### ஆர்.எம் வீரப்பன்

ரஜினிகாந்த் அரசியலுக்கு வரமாட்டேன் என்று சொல்லிவிட்டார். அதனால் வசந்த சேனை, எம்.ஜி.ஆரின் புகழ் கெடுக்க வந்த பலகணிப்பாவை ஜெயலலிதா மகிழ்ச்சியில் துள்ள வேண்டாம். மனப்பால் குடிக்க வேண்டாம் என்று எச்சரிக்கிறேன். வர மாட்டேன் என்றுதான் ரஜினி சொல்லியிருக் கிறார். வரவே மாட்டேன் என்று சொல்ல வில்லை. வரமாட்டேன் என்பதற்கும் வரவே மாட்டேன் என்பதற்கும் வித்தியாசம் தெரியாத ஜெயலலிதா பதவியில் இருக்கும் தகுதியற்ற வர் நாடாளும் திறமை அற்றவர். ■■

### திருநாவுக்கரசு

நேற்று மாலையும் ரஜினியோடு போனில் பேசினேன். என்ன பேசினேன். அவர் என்ன சொன்னார் என்பதையெல்லாம் வெளியே சொல்வது நாகரீகமில்லை. அதனால் நான் சொல்லப்போவதில்லை. ஆனால் ஒன்று சொல்வேன், ரஜினி கவனித்துக்கொண்டிருக் கிறார். ரஜினி தினமும் பத்திரிகைகள் படிக்கிறார். எனவேதான் உறுதியாகச் சொல் கிறேன் ரஜினிக்கு அரசியலில் ஈடுபாடு இருக் கிறது. இல்லாவிட்டால் எதற்காக காலை எழுந்தவுடன் காப்பி கூட குடிக்காமல் பத் திரிகைபடிக்கவேண்டும்? இதெல்லாம் ஜெய லலிதாவுக்கு தெரியாது. எனக்குத் தெரியும். என் நண்பர் ரஜினி! ■■

### கலைஞர் கருணாநிதி

நண்பர் ரஜினி நடிப்பில் வல்லவர். உடல் கறுப்பு, உள்ளம் வெள்ளை. அவரால் எனக்கு ஒரு நாளும் இல்லை தொல்லை. எம்.ஜி.ஆர். எனது நாற்பது ஆண்டுகால நண்பர். ரஜினி நானகாண்டுகால நண்பர். அரசியலுக்கு ரஜினி வரமாட்டார் என்பது நான்காண்டுகளுக்கு முன்னரே எனக்குத் தெரியும். இன்று காலை யிலும் ரஜினியோடு போனில் பேசினேன். என் உடல் நலம் எப்படி என்று விசாரித்தார். ■■

### டி.ராஜேந்தர்

ரஜினி ஒரு வெற்றிக்கனி. அந்தக்கனியின் வழியே தனி. கலைஞர் கருணாநிதிக்காக உழைப்பதே என் பணி. என் நண்பர் ரஜினி நடிகர்களிலே நான் கண்ட மணி. ■■



படிப்பகம்

Regd. as a News Paper at the G.P.O. (QD/24/NEWS/96)

அருள் ஜீவலர்ஸ்
AROL JEWELLERS
4363331
பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வண்ண நகைகள்
மின்னிப் பேசுகின்றன.
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

# வசதியான கப்டன்



உலகக் கிண்ணப் போட்டி 1996இல் ஐக்கிய அரபுக் குடியரசு கிரிக்கெட் அணிக்கு ஒரே ஒரு வெற்றி ஹொலண்ட் அணியுடன்தான். அதுவே போதும் என்று திருதிப்பட்டுக் கொண்டார்கள் ஐக்கிய அரபுக் குடியரசு அணியினர். ←

அம்மன் ஜீவல்
AMMAN JEWEL
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
332033
29 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

பணம் கொழிக்கும் எண்ணெய் வள நாட்டின் செல்லப்பிள்ளைகள். அணித்தலைவர் சரவாணி சகல துறை ஆட்டக்காரர். வசதியிலும் சளைத்தவரல்ல. சொகுசுக்காருடன் என்னவொரு பந்தாவாய் போஸ் கொடுக்கிறார் பாருங்கள்.

தோல்வியோடு திரும்பாமல் ஒரு வெற்றிக் கனியுடன் திரும்புவதில் அணிக்கு சந்தோசம்தான். அதைவிட சந்தோசம் உலகக் கோப்பை போட்டிகளில் விளையாடும் அணி என்ற பெயர் இருப்பது.

# சளைக்காத சாத்து



உலகக் கிண்ணப்போட்டி 96 இல் சதம் போட்ட சாதனையாளர் பட்டியலில் இருப்பவர் மார்க் வோவ். அவுஸ்திரேலிய சகலதுறை ஆட்டக்காரர். இந்தியாவை அவுஸ்திரேலியா சாய்த்ததில் கூடியபங்கு மார்க் வோவுக்குத்தான். அபாரமான ஆட்டம்.

96 உலகக் கிண்ணப் போட்டிக்கு முன்னர் மார்க்வோவ் ஒரு நாள் சர்வதேசப் போட்டிகளில் பெற்ற பெறுபேறுகள் இவை:


106 போட்டிகளில் கலந்து கொண்டார். 102 இன்னிங்ஸ் விளையாடியிருக்கிறார். 40 தடவைகள் அவுட்டாகமல் திரும்பியிருக்கிறார். மொத்தமாக சேகரித்த ரன்கள் 3244. சதம் அடித்தது 5 தடவைகள். அரைச்சதம் அடித்தது 22 தடவைகள். கூடிய விளாசல் 130. சராசரி 34.51

பந்து வீச்சில் சாதித்தவை: 58 விக்கெட்டுக்களை சாய்த்துள்ளார். சிறந்த பந்துவீச்சு 5/24. சராசரி 27.43. வீசிய பந்துகள் 1983. கொடுத்த ஓட்டங்கள் 1591.

மார்க் வோவின் சகோதரர் ஸ்டிவ் வோவ் மற்றொரு அதிரடி மன்னன். சர்வதேச ஒருநாள் போட்டிகளில் அவர் மொத்தமாக குவித்துள்ள ரன்கள் 3980. விளையாடிய போட்டிகள் 189. சதம் போட்டது ஒரு தடவை. அரைச் சதம் 19 தடவைகள். கூடிய ரன் குவிப்பு 102. சராசரி 30.85. பந்துவீச்சில் ஸ்டிவ் வோவ் 162 விக்கெட்டுக்களை கைப்பற்றியிருக்கிறார். 7356 பந்துகளை வீசி 5745 ரன்கள் கொடுத்திருக்கிறார். சிறந்த பந்துவீச்சு 4/33. சராசரி 33.61. இரட்டையர்கள் கலக்குகிறார்கள்.

# தருவது லி யோ டெ

# இரு வல்லவர்கள்



உலகின் தலைச்சிறந்த துடுப்பாட்ட வீரர்கள், இருவரும் இளைஞர்கள், இருவரும் காதலிப்பதிலும் கெட்டிக்காரர்கள். டெண்டுல்கர் காதலியை கைப்பிடித்துவிட்டார். லாரா காதலித்துக்கொண்டேயிருக்கிறார். வசீகரமான காதலி. லாராவுக்கு உற்சாகம் எங்கிருந்து கிடைக்கிறது என்று யோசிக்கும் அவசியமில்லை.

இந்திய அணியின் கப்டனுக்கும், உதவிக் கப்டனுக்கும் இடையே அசாத்திய ஒற்றுமை நிலவுகிறது. இருவருமே நல்ல நண்பர்களாகப் பழகுகிறார்கள். சுனில் கவாஸ்கரின் விமர்சனங்கள் கூட இருவரது நட்பிலும் சேதம் ஏற்படுத்தவில்லை. அணிக்கு சாதகமான விஷயம் இது.

# மெல்ல வீசி



விக்கெட்டுக்களை வீழ்த்தியதில் சர்வதேச ஒரு நாள் போட்டிகளில் பாகிஸ்தான் பந்து வீச்சாளர்களில் நாலாவது இடத்தில் இருக்கிறார் முஸ்டாக் அஹமட். 96 உலகக் கிண்ணப் போட்டிக்கு முன்னர் வரை 99 விக்கெட்டுக்களை வீழ்த்தியிருந்தார். 4521 பந்துகளை வீசி 3294 ரன்களைக் கொடுத்திருந்தார். சராசரி 33.27. சிறந்த பந்து வீச்சு 3/14. துடுப்பாட்டத்தில் சொல்லிக் கொள்ளும்படியாக இல்லை. 47 இன்னிங்ஸ் துடுப்பாடி மொத்தமாக சேர்த்தது 263 ரன்கள். சதம், அரைச்சதம் எதுவுமில்லை. உச்சபட்ச அடி, 26. சராசரி 9.06. பந்துவீச்சில்தான் முழுக்கவனமும்.

பாகிஸ்தான் பந்து வீச்சாளர்களில் முதலாமிடத்தில் இருப்பவர் வாசிம் அக்ரம். சாய்த்த விக்கெட்டுக்கள் 282. இரண்டாமிடம் வாக்கர் யூனுஸ், கைப்பற்றிய விக்கெட்டுக்கள் 187. மூன்றாமிடம் ஆக்கிப் ஜாவிட். வீழ்த்திய விக்கெட்டுக்கள் 134.

துடுப்பாட்ட வீரர்களில் பாகிஸ்தான் அணியில் முன்னணியில் இருப்பவர் ஜாவிட் மியன்டாட். 215 இன்னிங்ஸ் விளையாடி 7327 ரன்களை சேர்த்து வைத்திருக்கிறார். சதம் அடித்தது 8 தடவைகள். அரைச்சதம் அடித்தது 50 தடவைகள் (அதுவே ஒரு அரை செஞ்சரி) சராசரி 42.10. அற்புதமான வீரர். ஆனால் வாசிம் அக்ரமுக்கும் மியான் டாட்டுக்கும் எட்டாப் பொருத்தம்.

# இன்றும்-நாளையும்



உலகின் தலைச்சிறந்த துடுப்பாட்டவீரர்களில் ஒருவர் டெண்டுல்கர். 96 உலகக் கிண்ணப்போட்டிக்கு முன்னர் சர்வதேச ஒருநாள் போட்டிகளில் 4 சதம்போட்டுள்ளார். 22 தடவைகள் அரைச்சதம் போட்டுள்ளார். சராசரி 36.37. 101 போட்டிகளில் 98 இன்னிங்ஸ் விளையாடியிருந்தார். அசாருதீனும் சளைத்தவரல்ல. சதம் 3, அரைச்சதம் 30, சராசரி 36.24 என்று பட்டியல் உள்ள சூரர். எனினும் அணி தேவையான சந்தர்ப்பத்தில் உஷாராக சீறி எழாததுதான் பலவீனம்.



படிப்பகம்